# குர்ஆனின் குரல்

رَجَب - ١٤٤٦

ஜனவரி - 2025

₹25/-

ஐவது ஆண்டு

# 999® BRAND

## இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!

**OUR PRODUCTS**




**K.A.S. ZAINULABDIN & Co.**

New No. 196, Angappan Street, Chennai - 600 001.

www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475

KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

மாதம் ஒரு மாமறை வசனம்

# அழகிய கடன்

مَنْ ذَا الَّذِىْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗۤ اَضْعَافًا كَثِيْرَةً ‌ؕ وَاللّٰهُ يَقْبِضُ وَيَبْصُۜطُ وَاِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿۲۴۵﴾

"அல்லாஹ்வுக்கு அழகிய கடனாகக் கடன் கொடுப்பவர் யார்? (அவ்வாறு கொடுக்கின்ற) அவருக்கு அதனை பன்மடங்காக அவன் இரட்டிப்பாக்கித் தருவான்; அல்லாஹ் (சிலருக்குச் செல்வத்தைச்) சுருக்குகிறான்; (சிலருக்கு) விரிவாக்குகிறான் – அவன் பக்கமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்." – அல்குர்ஆன் (2 : 245)

---

அல்லாஹ் நமக்கு தந்திருக்கும் செல்வங்களில் நமது தேவை போக மீதமுள்ளதை அல்லது நமது தேவையை சுருக்கிக் கொண்டு மீதமுள்ளதை, அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வது, ஏழைகளுக்கு உதவுவது, முஸ்லிம் சகோதரர்களுக்கு கடன்கள் தருவது இவையனைத்தும் அல்லாஹ்விற்கு தரும் அழகிய கடன்களாகும்.

இதற்குரிய கூலியை, நன்மையாகவும், பணம், பொருளாகவும் பன்மடங்காக திரும்பத் தருவதற்கு அல்லாஹ் பொறுப்பேற்கிறான். அவனே கொடுக்கிறான். அவனே தடுக்கிறான். அவனே எடுக்கிறான் என்கிறபோது நிச்சயம் அவன் திரும்பத் தரும்போது நிரப்பமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

"ஒரு முஸ்லிம் தேவையுள்ள தன் சகோதர முஸ்லிமிற்கு ஒரு முறை கடன் கொடுப்பது இரண்டு முறை தர்மம் செய்தது போன்று" என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

மேற்கூறப்பட்ட வசனம் இறங்கியபோது சிலர் "அல்லாஹ் ஏழையாகி விட்டான். எங்களிடம் கடன் கேட்கிறான். எனவே, நாங்களே செல்வந்தர்கள்" என்றனர். வேறு சிலர் கஞ்சத்தனத்தில் உறுதியாகி விட்டனர். மூன்றாம் பிரிவினர் நபித்தோழர்கள். தங்களிடம் உள்ளதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அர்ப்பணித்தனர். நபித்தோழர் அபூதர்தா (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வருகை தந்து, "யாரஸூலல்லாஹ்! அல்லாஹ் எத்தேவையுமற்றவனாக இருக்க, எதற்காக கடன் கேட்கிறான்?" எனக் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அதன் மூலம் உங்களுக்கு சுவனம் தர நாடுகிறான்" எனக் கூறினார்கள். உடனே "யாரஸூலல்லாஹ்! எனக்கு இரண்டு தோட்டங்கள் உள்ளன. அதை அல்லாஹ்விற்கு தந்துவிடுகிறேன்" என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஒன்றை அல்லாஹ்வின் பாதையிலும், ஒன்றை உமது குடும்பத்தார்களுக்காகவும் வைத்துக் கொள்ளவும்" என்றார்கள். உடனே "யாரஸூலல்லாஹ்! அறுநூறு மரங்கள் கொண்ட தோப்பை தந்து விடுகிறேன்" என்றார்கள். அவருக்காக நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

87 வருட பாரம்பரியம்

## ஆடைகளும் கலாச்சாரமும்

# நான்கு தலைமுறைகளாய்




மனசெல்லாம் மஹாராஜா... ®

# மஹாராஜா

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர் : காந்திஜி ரோடு

தஞ்சாவூர் : நியூ ஹவுசிங் யூனிட்

இராமநாதபுரம்

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...
குர்ஆனின் குரல்
குரல் : 68 ★ எதிரொலி – 1
ரஜப் 1446 ஜனவரி – 2025

# 68ஆம் ஆண்டின் துவக்கத்தில் எம் முன்னோர்களுக்காக துஆ செய்யுங்கள்!

அல்லாஹ்வின் பேரருளாலும், எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயர்வான துஆ பரக்கத்தாலும் இந்த குர்ஆனின் குரல் இதுவரை 67 ஆண்டுகளை முழுமையாக நிறைவு செய்து 68ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!

இந்த குர்ஆனின் குரல் உருவாகுவதற்கும், வளர்ச்சியடை வதற்கும், இதுவரை நடந்து கொண்டிருப்பதற்கும் காரணமாக திகழ்ந்த முன்னோர்களை நினைவு கூர்வதும், வணக்க வழிபாடுகளில் ஒன்றாகும் என்ற வகையில், அவர்களுக் காக இந்த நல்ல நேரத்தில் மனமார துஆ செய்து கொள்கிறோம்.

**இந்த குர்ஆனின் குரலுக்கு விதை விதைத்து, துவக்கி வைத்த எங்கள் அருமை பாட்டனார் அல்லாமா மர்ஹூம் அ.மு.அப்துல் ஜப்பார் பாகவி ஹள்ரத் நவ்வரல்லாஹு மர்கதஹு அவர்களையும், அன்னாரின் அருமைத் துணைவி யார் அல்ஹாஜ்ஜா ஹவ்வா பீவியம்மாள் நவ்வரல்லாஹு மர்கதஹா அவர்களையும், அன்னாரின் அருமைப் புதல்வர் “அஸ்அதுல் மில்லத்” அல்லாமா மர்ஹூம் அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ ஹள்ரத் நவ்வரல்லாஹு மர்கதஹு அவர்களையும் நன்றியுணர்வோடு நினைத்து பார்த்து துஆ செய்கிறோம்.**

இவ்வாறே, குர்ஆனின் குரல் பரவுவதற்கு கடந்த 67 ஆண்டு களில் தங்களின் விளம்பரங்களாலும், விற்பனை வகையாலும் பெருமளவில் தங்களின் வாழ்க்கையை தியாகம் செய்த எங்களின் முன்னாள் விற்பனையாளர்கள் மற்றும் விளம்பரதாரர்களையும் இந்த நல்ல நேரத்தில் நினைவுகூர்ந்து துஆ செய்ய கடமைப் பட்டிருக்கிறோம்.

அந்த வகையில்...

புருணை ஆத்தூர் ஹஜ்ஜு முஹம்மது ஹாஜி பெருந்தகை (ரஹ்), மதுரை அல்ஹாஜ் டி.எம்.வி. அப்துர் ரஹ்மான் ஸாஹிப்

(ரஹ்), சென்னை சூளைமேடு “ஏ.ஜே. ஸ்டோர்” உரிமையாளர் அல்ஹாஜ் அப்துல் ஹமீது ஸாஹிப் (ரஹ்), திருவாரூர் வி.எம்.ஆர். ஹாஜி பெருந்தகை (ரஹ்), புதுக்கோட்டை ஏ.ஆர்.எம். ஏஜன்ஸீயின் பாபு ஹாஜியார் (ரஹ்), தஞ்சை மஞ்சுவள்ளி அல்ஹாஜ் ஷாஹுல் ஹமீது (ரஹ்), மதுராந்தகம் மவ்லானா சுல்தான் ஆரிப் ஹள்ரத் (ரஹ்), விழுப்புரம் கமருதீன் ஹள்ரத் (ரஹ்), திருவண்ணாமலை ரிஜ்வானுல்லாஹ் ஸாஹிப் (ரஹ்), கும்பகோணம் மவ்லானா ஷீத் ஹள்ரத் (ரஹ்), மதுரை ‘பிலால் புக் சென்டர்’ உரிமையாளர் அல்ஹாஜ் அப்துஸ்ஸலாம் (ரஹ்), விழுப்புரம் ‘பூண்டு கடை’ ஜமால் பாய் (ரஹ்), சத்தியமங்கலம் ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் ஜமீருல்லாஹ் ஸாஹிப் (ரஹ்), சேலம் ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் அன்வர்ஜீ (ரஹ்), நெய்வேலி முஹம்மது காஸிம் பாய் (ரஹ்) லால்பேட்டை மவ்லானா முஹம்மது அலீ ஹள்ரத் (ரஹ்), இடையகோட்டை ஜக்கரிய்யா ஸாஹிப் (ரஹ்), ஒட்டன்சத்திரம் ‘கோல்டன் ஏஜன்ஸீஸ்’ அப்துர் ரஹீம் ஸாஹிப் (ரஹ்), உடுமலைப்பேட்டை கே.ஏ.ஹனீஃபா இராவுத்தர் (ரஹ்) இன்னும் இப்போது ஞாபகத்தில் வராத பல நூறு பேர்களின் மறுமை வாழ்விற்காக நினைவு வரும்போதெல்லாம் துஆ செய்து கொண்டிருக்கிறோம்.

அல்லாஹ் அந்த பெருந்தகைகளின் கபுருகளை விசாலமாக்கி, அந்த இடங்களை சுவனத்துப் பூஞ்சோலைகளாக ஆக்கி எம்மையும், அவர்களையும் நாளை மறுமையில் ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவனத்தில் ஒன்று சேர்த்தருள நாமும் துஆ செய்கிறோம்; வாசகர்களே! நீங்களும் அந்த பெருமக்களுக்காக துஆ செய்யுங்கள்.

அத்துடன் சமீப காலமாக குர்ஆனின் குரலுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியான பொருளாதாரம், ரிஜிஸ்ட்ரேஷன் மற்றும் வாடகை இடம் போன்ற சூழ்நிலைகளை அல்லாஹ் விரைவில் தன் மகத்தான அருளைக் கொண்டும், மேற்படி பெருந்தகைகளின் பரக்கத்தான துஆகளைக் கொண்டும் இலேசாக்கித் தருவதற் காகவும் அதிகமதிகம் துஆ செய்யுங்கள்.

இதன் காரணமாகவே சுமார் இரண்டு வருடங்களாக உங்கள் குர்ஆனின் குரல் தன் தேதியை விட்டும் அகன்று, தாமதமாக வருவதற்கு, அன்பான வாசகர்களாகிய உங்களிடம் எமது தாழ்மையான வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதோடு, தங்களின் மேலான துஆகளின் மூலமும் ஒத்துழைப்பு வழங்கும்படி மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அல்லாஹ் போதுமானவன்.

தர்மம் கொடுக்கும் உடைமைகளையும், பொருட்களையும் அதை வாங்குபவர்கள் சில நேரங்களில் வெளியில் சென்று விற்பனை செய்து விடுகிறார்கள். அப்படியிருந்தால் அதன் நன்மை நமக்கு கிடைக்குமா?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

நாம் தர்மம் செய்தவுடன் அந்தப் பொருள் முழுக்க அவருக்கு சொந்தமாகி விடுகிறது. நமக்கு அதற்கு பகரமாக அதன் நன்மைகள் அல்லாஹ்வின் ஏட்டில் எழுதப்பட்டு விடுகின்றன. எழுதப்பட்ட நன்மைகள் அழிக்கப்படுவது கிடையாது. எனவே, தர்மப் பொருளை வாங்கியவர்கள் தாங்களே பயன்படுத்திக் கொண்டாலும் அல்லது அதை விற்று அதன் வருமானத்தை தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொண்டாலும் அதன் நன்மையில் நமக்கு எந்த குறைவும் ஏற்படாது.

இலஞ்சம் வாங்குவதும் - கொடுப்பதும் ஹராம் என்று மார்க்கம் கூறியிருந்தாலும் சில இடங்களில் அதை கொடுத்தால் தான் நம் உரிமைகளைப் பெறமுடியும் என்ற நிலை ஏற்பட்டால், அப்போது நம் வங்கிக் கணக்கிலிருந்து கிடைக்கக் கூடிய வட்டிப் பணத்தை அதற்கு பயன்படுத்தலாமா?

**புதுக்கோட்டையிலிருந்து**
**எஸ்.அக்பர் அலீ**

மற்றவர்களின் உரிமைகள் பாதிக்கப்படாத அளவுக்கு நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்படி பணத்தை கொடுத்து, நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பருவ வயதை அடைந்து, திருமணம் ஆகாமலேயே மரணித்துவிட்ட இஸ்லாமிய பெண்களுக்கு சுவன வாழ்க்கையின் துணையாக யார் அமைவார்கள்?

**பணங்காட்டூரிலிருந்து**
**முஹம்மது யூசுஃப்**

சுவனத்தில் மனிதர்கள் விரும்பியதெல்லாம் கிடைக்கும் என்று குர்ஆனிலும், ஹதீஸிலும் ஏராளமான விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. அப்படியானால், திருமணமாகாமல் மரணித்துவிட்ட இஸ்லாமிய பெண் சுவனம் செல்லும்போது அவள் அங்கு விரும்பினால் அல்லாஹ் அந்தப் பெண்ணிற்கு தகுந்த கணவரை கொடுப்பான். அதாவது உலகத்தில் திருமண

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

மாகாமல் வாழ்ந்து மரணித்து விட்ட பெண்கள் இருப்பதைப் போன்று ஆண்களும் இருக்கத் தானே செய்வார்கள். அப்படிப் பட்ட சுவனத்து ஆண்களை அல்லாஹ் அந்தப் பெண்களின் சிறந்த துணையாக ஆக்கிக் கொடுப்பான். சமயத்தில் ஆண் களுக்கு திருமணமாகி இருந் தும் அவர் உலகத்தில் வாழ்ந்த மனைவி, ஏதோ ஒரு காரணத்தி னால் (நஊதுபில்லாஹ்) நரகத் தினுள் நுழைந்து விட்டால் அப்படிப்பட்ட சுவனத்து ஆண் களைக் கூட அல்லாஹ் துணை யாக ஆக்கலாம்.

☛ ஜமாஅத் தொழுகையின் போது பெரியவர்களுடன் வரக் கூடிய சிறு பிள்ளைகளை எப்படி நிற்க வைக்க வேண்டும்? அப்படிப்பட்ட சிறுவர்களை பள்ளியினுள் அழைத்துவருவது பற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**இடையகோட்டையிலிருந்து**
**சதாம் ஹுசைன்**

✍ **"ஏழு வயதை அடைந்து விட்ட உங்களின் குழந்தைகளை தொழும்படி ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை அடைந்தும் அவர் கள் தொழாவிட்டால் அதற்காக ஒரு குச்சியை பயன்படுத்தி அவர்களை அடியுங்கள்"** என்று நபி (ஸல்) அவர்கள் அருளி யுள்ளார்கள். பிள்ளைகளுக்கு தொழுகையின் பழக்கமும், பள்ளிவாசல்களின் தொடர்பும், மற்ற வணக்க வழிபாடுகளின் பழக்கங்களும் சிறு வயதிலிருந்தே ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் மேற்படி ஹதீஸின் கருத்தாகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளை யாது" என்று தமிழில் சொல்லப் படுவது போன்று குழந்தை களை பள்ளிவாசலின் ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்ள பழக்காவிட்டால் பிற்காலத்தில் அவர்களின் வாழ்வு மறுமையை விட்டும் தூரமாகி விடலாம். இந்த நோக்கத்தின் அடிப்படை யில் சிறு வயதுள்ள ஆண், பெண் குழந்தைகளை பள்ளி வாசலுக்கு அழைத்து வருவது நல்ல விஷயமாகும். எனினும், அந்தக் குழந்தைகள் விபரம் தெரியாத அளவு சிறு வயதுள்ளவர்களாக இருந்தால் அவர்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அப்படிப் பட்ட குழந்தைகள் விபரமின்மை யால் பள்ளிவாசல்களில் அசுத்தங்கள் செய்து விடலாம். அல்லது அனைவரும் தக்பீர் கட்டியவுடன் அங்குமிங்குமாக ஓடித் திரிந்து தொழுகையாளி களின் தொழுகைகளுக்கு இடை யூறுகளை ஏற்படுத்தலாம். தற்காலத்தில் நம்மவர்கள் பலர், தக்பீர் கட்டுவதற்கு முன்னால் தங்களின் கண்ணாடியையும், செல்போன்களையும் தங்களுக்கு முன்னால் தரையின் மீது வைத்துக் கொண்டு தொழுகிறார் கள். இப்படிப்பட்ட நிலையில், அந்தக் குழந்தைகள் விலை யுயர்ந்த பொருட்களை தெரியா

மல் மிதித்துவிட்டால் பள்ளி வாசலில் சண்டை, சச்சரவுகளும், அவசியமில்லாத கூச்சல்களும் வந்துவிடலாம். எனவே, ஓரளவு விபரமறிந்த குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வந்துவிட வேண்டும்.

மேலும், பெண் பிள்ளைகளாக இருந்தால் அவர்கள் வயதுக்கு வந்துவிட்டாலோ அல்லது அதற்கு நெருக்கமாகிவிட்டாலோ அல்லது அந்தளவு அவர்களின் உடல் வாகு பெருமளவு தெரிந்தாலோ அப்படிப்பட்ட பெண் பிள்ளைகளை பள்ளிவாசல்களை விட்டும் கண்டிப்பாக தவிர்த்துக் கொள்வது மார்க்க ரீதியாகவும், உலக ரீதியாகவும் அவசியமான விஷயமாகும்.

சிறு குழந்தைகளை ஜமாஅத்தின் நேரத்தில் அனைவரின் ஸப்பும் முடிந்தபின்பு கடைசி ஸப்பில் நிற்க வைக்க வேண்டும். எனினும், யாராவது ஒருவர் தனது சிறு பையனை முன் வரிசையில் நிற்க வைத்துவிட்டால் அவரை அங்கிருந்து விரட்டக்கூடாது.

☛ கூச்சம், வெட்க உணர்வு போன்றவையெல்லாம் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாகவோ என்னவோ சீரழிந்து போய் கொண்டிருக்கின்றன. இது விஷயத்தில் ஷரீஅத் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**அன்வர்ஜீ**

✍ தாங்கள் சொல்வது போன்று சாதாரணமாக ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய வெட்க உணர்வும், கூச்ச சுபாவங்களும் உலகத்தின் பல்வேறு வளர்ச்சிகளின் காரணமாக பறிக்கப்பட்டுவிட்டன. முற்காலங்களில் பஸ் மற்றும் இரயில்களில் பயணம் செய்யும் போது ஆண் அல்லது பெண் அமர்ந்திருக்கும் இருக்கையில் இன்னொரு அந்நிய ஆணோ அல்லது அந்நிய பெண்ணோ ஒருக்காலும் அமரமாட்டார்கள். அந்த இருக்கைக்கு அருகில் சென்று கூட நிற்பதற்கு வெட்கப்படுவார்கள். ஆனால், இன்று அந்த நிலைமைகளெல்லாம் தலைகீழாக மாறி விட்டன. நாம் நல்லவர்களாக இருந்தாலும் வெட்கமின்மையின் காரணமாக யாராவது ஓர் அந்நிய ஆண் அல்லது பெண் நம் அருகில் வந்து அமரக்கூடிய சூழ்நிலைகள் சர்வ சாதாரணமாகிவிட்டன. அதை யாரும் கெட்டது என்றோ ஒழுக்கமின்மை என்றோ சொல்வதுகூட கிடையாது. அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். வரக்கூடிய கால சூழ்நிலைகள் நெருப்பை விட மோசமாக மனிதர்களை நோக்கி பாய்ந்து வந்து கொண்டிருக்கிறது. நம் குழந்தைகளை இஸ்லாமிய நெறிமுறைப்படியும், ஒழுக்க போதனைகளுடனும் வளர்க்காவிட்டால் தெருக்களில் நமது கௌரவங்களும், நம் குடும்பத்தின் மரியாதைகளும்

பறிபோய் விடலாம். சிறு குழந்தைகளை மார்க்க அறிவுரைகளோடு வளர்ப்பது ஒன்றே அந்தச் சீரழிவிலிருந்து வருங்கால சந்ததிகளை பாதுகாப்பதற்கு உண்டான ஒரே வழியாகும். “வெட்கம் ஈமானின் ஒரு பகுதி” என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸை அடிக்கடி பிள்ளைகளுக்குச் சொல்லி வளர்க்க வேண்டும்.

☛ எங்கள் பகுதியில் நீண்ட காலம் இமாமாக இருந்து ஓய்வு பெற்ற ஆலிம் ஒருவர் வஃபாத்தாகி விட்டார். உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஜனாஸாவை பார்ப்பதற்காக வந்திருந்த பல ஆயிரம் பேர்களுக்கு நடுவில் ஜனாஸா தொழ வைப்பதற்காக பள்ளிக்கு கொண்டு வரப்பட்டது. தொழ வைப்பதற்காக முன் நின்ற தமிழகத்தின் தலைசிறந்த மூத்த ஆலிம் பெருந்தகை ஒருவர் அனைவரையும் நிற்க வைத்து விட்டு நீண்ட நேரம் திக்ரிலும், துஆவிலும் ஈடுபட்டு விட்டு பிறகு ஜனாஸாவுடைய தொழுகையை நிறைவுபடுத்தி மய்யித் அடக்கம் செய்யப்பட்டது. இது விஷயத்தில் மார்க்கத்தின் நிலைப்பாடு என்ன?

**தாராபுரத்திலிருந்து**
**லியாகத் அலீ**

✍ ஷரீஅத் ரீதியாக ஒரு மய்யித் குளிப்பாட்டி கஃபனிடப்பட்டு விட்டால் அடக்கத்திற்கு தயாராகிவிட்டால் தாமதமின்றி அதை அடக்கம் செய்து விட வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட மேற்படி நிகழ்வில் இறந்தவரும் ஒரு பெரிய ஆலிம்; தொழ வைத்தவரும் ஒரு பெரிய ஆலிம். அந்தத் தொழுகையில் கலந்து கொண்ட ஆலிம்களின் எண்ணிக்கையும் பெருமளவில் இருந்ததாக தெரிகிறது.

தொழ வைத்த ஆலிம் பெருந்தகை அந்த மய்யித்துக்கு நன்மைகளை சேர்க்க வேண்டும் என்ற பேராவலில் தன் நிலை மறந்து, அந்த மறைந்த ஆலிம் பெருந்தகையின் மீது கொண்டிருந்த பேரன்பின் வெளிப்பாடாக திக்ருவையும், துஆவையும் ஆரம்பித்தவர், அந்த ஆழ் கடலில் போய் மூழ்கி விட்டார் போல! அவருடைய துஆகளின் உச்சகட்டத்தினால் பின்னால் நின்று காத்துக் கொண்டிருந்த அந்த ஆயிரம் பேர்களுமே தங்களை மறந்து விட்டு துஆகளில் முழுமையாக மூழ்கி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஷரீஅத் ரீதியாக தன்னையும் மீறி தன்னையறியாமல் **துஆவிலும், திக்ருவிலும் திளைத்து அதன் காரணமாக ஒரு மய்யித்தின் அடக்கம் சில மணித்துளிகள் தாமதமாகி விட்டதால் இதைக் கொண்டு அல்லாஹ்விடத்தில்** யாரும் குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள். இதில் யாரையும் குறை கூறுவது அவசியமற்ற விஷயமாகும். நின்றிருந்த அனைவருக்கும் அதன்

## பொறாமையை ஒழிப்போம்!

“இரண்டு விஷயங்களைத் தவிர வேறு எதிலும் பொறாமை கொள்ளக் கூடாது. (அவை) ஒன்று : ஒரு மனிதருக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்தை அவர் நல்ல வழியில் ஈடுபடுத்துகிறார். மற்றொன்று : இன்னொரு மனிதருக்கு அல்லாஹ் ஞானத்தை வழங்கி, அதற்கேற்ப அவர் தீர்ப்பு வழங்குபவராகவும், கற்றுக் கொடுப்பவராகவும் இருக்கிறார்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரீ 1409)


வாழ்த்துக்களுடன்....

ARM

நிச்சயமாக நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்
ஓர் உறுதியான இணைப்பு

50க்கும் மேற்பட்ட முன்னணி பிராண்டுகள்

- சிமெண்ட்
- சானிட்டரிவேர்
- ஸ்டீல்
- AAC ப்ளாக்ஸ்
- கன்ஸ்ட்ரக்ஷன் கெமிக்கல்ஸ்

புதுக்கோட்டை
+91 7373 7989 30
2154, வடக்குராஜ வீதி.

கோட்டைப்பட்டிணம்
+91 7373 7989 11
233, ECR.

திருச்சி
+91 7373 7989 45
31, ஏர்போர்ட் ரோடு.

அறந்தாங்கி
+91 7373 7989 64
17/64, பட்டுக்கோட்டை ரோடு.

www.armsons.in

நன்மைகளில் முழுமையான பங்குகள் கிடைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. இறந்துவிட்ட அந்த ஆலிம் பெருந்தகையின் பரக்கத் தால் வந்திருந்த அனைத்து தொழுகையாளிகளுக்கும் விசாலமான நன்மைகளை அல்லாஹ் கொடுத்துவிட் டான் போல. அல்ஹம்து லில்லாஹ்!

☛ முதன் முதலில் பாங்கு சொல்லும்போது ஒரு கையை காதிலும், இன்னொரு கையை நெஞ்சிலும் வைத்து பாங்கு சொன்னதாக சொல்கிறார்கள். விளக்கம் கூறுங்களேன்?

✍ அப்படி இருந்ததாக ஹதீஸ் கிதாபுகளில் எங்கும் நமக்கு காணக் கிடைக்கவில்லை.

☛ குர்ஆனை மட்டும் ஓதும் போது அதிக நன்மை கிடைக் கிறதா? அல்லது அதை அதன் அர்த்தத்துடன் சேர்த்து ஒவ் வொரு ஆயத்தாக ஓதும்போது அதிக நன்மை கிடைக்கிறதா?

**பூனாவிலிருந்து**
**மஜீத்**

✍ கண்டிப்பாக குர்ஆனை விளங்கி ஓதும்போது சாதாரண மாக ஓதுவதைவிட அதிக நன்மைகள் கிடைக்கின்றன. எனி னும், விளங்குவதில் கிடைக்கக் கூடிய சிரமத்திற்கு தகுந்தாற் போல் அதன் கூலியும் நிச்சயமாக அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது.

☛ நபி (ஸல்) அவர்களின் புனிதமான ரவ்ளா ஷரீஃபை ஜியாரத் செய்வதைப் பற்றி ஷரீஅத் என்ன சொல்கிறது?

**மதுரையிலிருந்து**
**அஹமதுல்லாஹ்**

✍ முஸ்தஹப்புகளில் மிகச் சிறந்த முஸ்தஹப்பாகும். சில ஆய்வுகளின்படி வாஜிபுக்கு மிக நெருக்கமான ஒரு செயலாகும்.

☛ பெற்றோர்களின் சொத்தில் ஆண், பெண் பிள்ளைகள் இரு வருக்கும் பங்கு இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இங்கு ஒரு குடும்பத் தில் ஆண் பிள்ளைகள்தான் பெற்றோர்களை கவனித்துக் கொண்டார்கள். எனவே, அவர் களுக்கு மட்டுமே சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும். பெண் பிள்ளைகளுக்கு எதுவும் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். அப்படியானால், பெற்றோர்களைக் கவனிக்கும் பொறுப்பு ஆண்பிள்ளைகளுக்கு மட்டுமா? பெண் பிள்ளைகள் அதில் பங்கு கொள்ள முடியாதா? விபரம் தேவை.

**சென்னையிலிருந்து**
**அஹமது**

✍ பங்கு என்னவோ ஆண் பிள்ளைகளுக்கும் இருக்கிறது. பெண் பிள்ளைகளுக்கும் இருக் கிறது. பெற்றோரை கவனிக்கக் கூடிய பொறுப்பு ஆண்பிள்ளை களுக்கு மட்டுமே இருக்கிறது. பெண் பிள்ளைகள் திருமண மானதற்கு பின்பு அவரவர்களின்

கணவர்மார்களின் உத்தரவுக்கு கட்டுப்பட்டவர்கள். எனவே, அந்த கணவருடைய பணிவிடை போக மீதி நேரங்களில் அவர்கள் அனுமதி கொடுத்தால் தங்களின் பெற்றோருக்கு அவர்களும் பணிவிடைகள் செய்யலாம்.

☛ என் தகப்பனாருக்கு சுமார் 270சென்ட் இடமும், நான்கு வீடுகளும் உள்ளன. அவர் வஃபாத்தாகிவிட்டார். அவர் தான் இருந்தபோதே அந்த நான்கு வீடுகளில் நான்கு மகன்களை குடிவைத்து இருக்க வைத்தார். தந்தையின் மரணத்திற்குபிறகு அதில் மூன்று போ்கள் தங்களின் இருப்பிடமாக இருந்த அந்த மூன்று வீடுகளை விற்று அதன் வருமானங்களை தாங்களே எடுத்துக் கொண்டார்கள். ஆனால், என் தகப்பனாருக்கு ஏழு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இவர்களில் ஒன்பது பேர் வஃபாத்தாகி ஒருவர் மட்டும் இருக்கிறார். இப்போது ஒரு வீடு ஒன்றும், மேற்படி நிலம் ஒன்றும் எங்கள் கைவசம் இருக்கின்றன. அதை எப்படி பிரித்துக் கொள்வது?

**கோயம்புத்தூரிலிருந்து**
**ஷேக் மைதீன்**

✍ தகப்பனாரின் மரணத்திற்கு பின்னால் வாரிசுதாரர்களில் யாரெல்லாம் உயிரோடு இருந்தார்களோ அவர்கள் இப்பொழுது இல்லாவிட்டாலும் நீங்கள் சொல்லக்கூடிய இந்த சொத்திலும், இந்த வீட்டிலும் அவர்களுக்கு ஷரீஅத் சொல்லக்கூடிய ஆண்களுக்கு இரண்டு பங்கு, பெண்களுக்கு ஒரு பங்கு என்ற வகையில் பங்குகள் கொடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே விற்கப்பட்ட மூன்று வீடுகள் அவரவர்களின் பெயர்களில் தகப்பனார் எழுதிக் கொடுத்திருந்தால் அது அவரவர்களுக்கு உரியதாகும். அதிலிருந்து அவர்கள் மற்றவர்களுக்கு பங்கு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், அந்த வீடுகள் தகப்பனாரின் பெயரிலேயே இருந்து அதை அவர்கள் விற்று இருந்தால் மற்ற சகோதர, சகோதரிகளுக்கும் பங்குகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு ஷரீஅத்தின் சட்டத்தை எடுத்துச் சொல்லி பங்குகள் முறையாக சேர்த்து வைக்கப்பட வேண்டும்.

அப்படியில்லாவிட்டால் ஷரீஅத் ரீதியாக மேற்படி வீடுகளை விற்ற அந்த மூன்று நபர்களும் அடுத்தவரின் சொத்தை அநியாயமாக அபகரித்த குற்றத்தில் சிறைபிடிக்கப்பட்டு கப்ரு வாழ்விலும், கியாமத் நாளன்றும் அதற்கான மிகக் கடுமையான தண்டனைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

☛ நம்முடைய பெண் குழந்தைகளை தீனுடைய கல்விக்காக வெளியூர்களுக்கு அனுப்பி

ஹாஸ்டலில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான அவசியமான தீனுடைய கல்வி களை கற்றுக் கொடுப்பது பற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**மஹாராஷ்ட்ராவிலிருந்து**
**அபூதாஹிர்**

✍ அவசியம் ஆண் குழந்தை களைப் போன்றே பெண் குழந்தைகளுக்கும் தேவையான, அவசியமான கல்விகளையும், ஒழுக்கங்களையும் அவர்களுக்கு கற்றுக் கொடுப்பது அவசிய மாகும். எனினும், அந்தக் கல்விக் காக அவர்களை நம் கண் பார்வையிலேயே வைத்து பகலில் கொஞ்ச நேரங்களில் மட்டும் அவர்களின் நம்பிக்கை யான, பாதுகாப்பான கோஷா (ஹிஜாப்) முறைகளை முழுமை யாகப் பேணி நடத்தப்படக்கூடிய மதரஸாக்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். பெண் பிள்ளை களின் விஷயத்தில் வெளியூர் களையும், ஹாஸ்டல் களையும் தவிர்த்துக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும். எந்த குழந்தை யாக இருந்தாலும் அது ஆணாக இருந்தாலும் அல்லது பெண் ணாக இருந்தாலும் அவர் களை நம் வீட்டிலிருந்து அனுப்பும் போது அல்குர்ஆன் வசனத்தை ஒரு முறை ஓதி அதை அவர்கள் மீது ஊதி அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து அவர்களை அனுப்பி வைத்தால் இன்ஷா அல்லாஹ் அந்தக் குழந்தை களை அல்லாஹ் கண்ணும், கருத்துமாக பாதுகாத்து நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்பான். அந்த வசனமாவது :

وَاُفَوِّضُ اَمۡرِىۡۤ اِلَى اللّٰهِ ؕ

**“என்னுடைய காரியத்தை அல்லாஹ்விடம் நான் ஒப்படைக் கிறேன்”** - அல்குர்ஆன் (40 : 44)

☛ ஒருவர் இறந்தவுடன் அவரின் உடன்பிறந்த சகோதரி அந்த இறந்தவிட்ட சகோதரரின் நெற்றியின் மீது கை வைத்து அல்லது பெண் இறந்துவிடும் போது அவருடன் பிறந்த சகோதரர் அந்தப் பெண்ணின் நெற்றியின் மீது கை வைத்து ஆறுதலாக தொடுவது மார்க்க ரீதியில் ஏற்புடையதுதானா?

**விழுப்புரத்திலிருந்து**
**உசேன் கான்**

✍ ஷரீஅத் ரீதியாக இந்த செயல்பாட்டில் தவறு எதுவு மில்லை.

☛ தற்போது தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசாங்க காஜிகளை நியமித்து வருகிறார்கள். அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் என்ன?

✍ முஸ்லிம் சமுதாய மக்களுக்கு நடுவிலே ஏற்படக்கூடிய சிறியது முதல் பெரியது வரையுள்ள எல்லா பிரச்சனைகளையும் எளிமையாகவும், சுமூகமாகவும் தீர்த்து வைக்கக்கூடிய உரிமையை அரசாங்கமும், மார்க்கமும் அவர்களுக்கு வழங்கு கிறது. அவர்கள் எழுதக் கூடிய தீர்ப்புகள் அரசாங்க நடைமுறை யிலும், நீதிமன்ற வளாகங்களி

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

# N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர்,
மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள்
அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

---

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

லும் ஏற்றுக் கொள்ளப்படுமளவு முழுமையானதாக இருக்கும். இதுதான் அவர்களை நியமிப்ப தற்குரிய நோக்கமாகும். குறிப் பாக, சொத்து பிரச்சனைகள் நிக்காஹ் மற்றும் தலாக், குலா உடைய பிரச்சனைளை அந்த காஜிகளின் மூலமாக அதிகளவில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. அல்லாஹ்விற்கே புகழனைத்தும்!

எனினும், ஷரீஅத்தின் பல்வேறு சட்டங்களுக்கு வெடி வைக்க நினைக்கும் உலக அரசியல் நிலைகள் இதற்கும் கூட இதற்கு மாற்றமான ஒரு சட்டத்தை கொண்டு வரலாம். அல்லாஹ் பாதுகாப்பானாக.

☛ நான் ஹஜ்ஜுக்குச் செல் லும்போது அதன் காட்சிகளை வீடியோவாக ஆக்கி வெளியிடு வதால் மக்களுக்கு அந்த ஹஜ்ஜு மற்றும் உம்ராக்களின் மீது அதிக ஆர்வம் ஏற்படும் அல்லவா? செய்யலாம் தானே!

**கடம்பையிலிருந்து அப்துல்**

✍ மார்க்கத்தில் தடுக்கப் பட்டிருக்கின்ற ஒன்றை கொண்டு அதைப் பரப்பி அதன் மூலமாக மக்களுக்கு வணக்க வழிபாடுகளில் ஆர்வத்தை ஏற்படுத்துவது என்பது, சாக்கடைக்குள் இறங்கி நீந்திக் கொண்டு சுத்தத்தைத் தேடு வதைப் போன்றதாகும். சாதா ரண உருவப்படங்களையே மார்க்கம் தடை செய்திருக்கும் போது ஹஜ்ஜும், உம்ராவும் அல்லாஹ்வின் அடையாளங் களில் ஒன்றாக இருக்கும்போது ஹராமான ஒரு வேலைக்காக அதை பயன்படுத்துவதை எவ் வாறு அனுமதிக்க முடியும்??

☛ படுக்கும்போது ஒரு கால்மீது இன்னொரு காலை போட்டு மல்லாந்து படுப்பதைப் பற்றி மார்க்கம் என்ன சொல்கிறது?

**மண்டக்களத்தூரிலிருந்து மஜீத் பாய்**

✍ இதுபோன்று படுப்பது ஹதீஸ்களில் தடுக்கப்பட்டுள் ளது. இருப்பினும், சில சமயங் களில் தன் மர்ம உறுப்புகளை மறைப்பதற்காக அவ்வாறு படுத்துக் கொள்வதை ஆகும் என்று சில மார்க்க அறிஞர்கள் தீர்ப்பு கூறியுள்ளனர்.

☛ முதுமை ஏற்பட்டுவிட்டால் ஆண்களும், பெண்களும் என்ன செய்ய வேண்டும்?

**விழுப்புரத்திலிருந்து அன்வர்**

✍ உலகக் காரியங்களிலிருந்து ஒதுங்கி இருந்து கொண்டு, அல்லாஹ்வை திக்ரு செய்வதன் மூலமும், நஃபிலான தொழுகை கள் மூலமும், துஆகளின் மூல மும் அல்லாஹ்வை நெருங்கு வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், அந்த வயதில் மரணம் எந்த நொடி யிலும் நம்மை இழுத்துப் போய் விடலாம்.

# குடியரசு தினம்

## மவ்லவீ மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி

قُلِ اللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِي الْمُلْكَ مَنْ تَشَآءُ وَتَنْزِعُ الْمُلْكَ مِمَّنْ تَشَآءُ وَتُعِزُّ مَنْ
تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ بِيَدِكَ الْخَيْرُ اِنَّكَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ○

**““(நபியே!) நீர் கூறுவீராக. ஆட்சியாளர்களுக்கெல்லாம் அதிபதியே! (அல்லாஹ்வே) நீ விரும்பியவர்களுக்கு ஆட்சியை கொடுக்கின்றாய். நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை நீக்கி விடுகிறாய். நீ விரும்பியவர்களை கண்ணியப்படுத்துகிறாய். நீ விரும்பியவர்களை இழிவுபடுத்துகிறாய். நன்மைகள் அனைத்தும் உன் கையில் இருக்கின்றன. நிச்சயமாக நீ அனைத்தின் மீதும் பேராற்றலுடையவன்.”**

- அல்குர்ஆன் (3 : 26)

இந்திய அரசியலமைப்பு சட்டம், அன்றைய 284 பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதியின் கையெழுத்தை பெற்றபின், ஜனவரி-26, 1950-ல் நடைமுறைக்கு வந்த நாளை தான், இந்திய குடியரசு தினமாக அனுசரிக்கப் படுகிறது.

இந்த அரசியலமைப்பு சார்ந்த தொகுப்பு முழுவதை யும், தன் அழகான கையெழுத் தால் எழுதியவர் பிரேம் பீகாரி நரைன் ரெய்சதா.

ஒரே சமயத்தில் ஹிந்தி, ஆங்கிலம் என இரண்டிலும் அரசியலமைப்புச் சட்டம் உரு வானது. கையால் உருவாக்கப் பட்ட காகிதத்தில், இது எழுதப் பட்டது. ஆங்கிலத்தில் 221 பக்கங்களுடன், 13 கிலோ எடை கொண்டது. இந்தியில் 250 பக்கங்கள்.

முதன்முதலில் பிரேம் பீகாரியால் கையால் எழுதப் பட்ட அரசியலமைப்புச் சட்டத் தின் எழுத்து அழிய 1000 ஆண்டுகள் ஆகுமாம். 16 x 22 அங்குலம் கொண்டது. ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட ஒரு பெட்டி யில், ஹிந்தி அரசியலமைப்புச் சட்ட புத்தகத்தை, நாடாளுமன்ற நூலகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

### இன்றைய இந்தியாவின் சுதந்திர தின நிகழ்வுகள்:

பாராளுமன்றம், சட்ட மன்றங்கள், அரசு அலுவலகங் கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரி கள் மற்றும் பிற இடங்களில்

தேசிய கொடியை ஏற்றி, மிட்டாய் கொடுப்பது, மாணவ மாணவியர்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் மற்றும் அரசியல் வாதிகள், ஆட்சியாளர்களின் சுய புராணம் கலந்த பேட்டி, மேலும் டி.வி. சேனல்களில் சினிமா நடிகர் - நடிகைகளின் பேட்டி (அதுவும் அரைகுறை ஆடை அணிந்த நிலையில் அரைகுறை தமிழுடன் பேட்டி. இவர்களுக்கு குடியரசு தினம் பற்றி என்ன தெரியும்? என்பது பற்றி நமக்கு அக்கறை இல்லை.) நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் போன்றோர் குண்டு துளைக்காத மேடை யிலிருந்து கொண்டு உரை.

குடியரசு தினம் என்றால் இது தானா? இத்துடன் முடிந்து விட்டதா? என்று நாம் என்றாவது அதுபற்றி சிந்தித்துள்ளோமா?

குடியரசு என்றால் குடி மக்களுக்கான அரசு, இந்திய இறையாண்மைக்கு அதன் அரசியலமைப்பு சாசனம் தான் சான்றாகும். அது 395 பிரிவுகள் கொண்டது. தற்போது இந்தியா வில் அவை அனைத்தையும் செயல்படுத்த முடியுமா? செயல்படுத்தப்பட்டுள்ளனவா? என்று என்றாவது சிந்தித்திருக் கிறோமா? இது தான் ஆண்டு தோறும் வரும் குடியரசு தினம் சொல்லும் செய்தி.

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "உங் கள் தலைவர்களில் நல்லவர் கள் யாரெனில், அவர்களை நீங் கள் நேசிப்பீர்கள். உங்களை அவர்கள் நேசிப்பார்கள். உங் களுக்காக அவர்கள் பிரார்த் திப்பார்கள். அவர்களுக்காக நீங்கள் பிரார்த்திப்பீர்கள். உங் கள் தலைவர்களில் தீயவர்கள் யாரெனில், நீங்கள் அவர்களை வெறுப்பீர்கள். உங்களை அவர் கள் வெறுப்பார்கள். நீங்கள் அவர்களை சபிப்பீர்கள். அவர் கள் உங்களை சபிப்பார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அவ்ஃப் பின் மாலிக் (ரளி) அவர்கள், (நூல் : முஸ்லிம்)

## சேவை உள்ளம்

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர் கள் கூறியதாவது : "மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களிடம் வந்து, நாயகமே! "எனக்கு தங்களிடம் ஒரு தேவை உள்ளது. (ஒரு விஷயம் பற்றி கேட்க வேண்டும்") என்று கூறினாள். அப்போது அண்ண லார் (ஸல்) அவர்கள், "இன்ன மனிதரின் தாயே! எந்த தெரு வுக்கு நான் வர வேண்டும் என நீ விரும்புகிறாய் சொல். உனது தேவையை நான் நிறைவேற்றி வைக்கிறேன்"

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

என்று கூறி விட்டு, அவள் தமது தேவையை முடித்துக் கொள்ளும் வரை (மக்கள் நடமாட்டமுள்ள ஒரு தெருவில்) அவளுடன் தனியாக(ப் பேசிக்கொண்டு) நின்றிருந்தார்கள்." (நூல்: முஸ்லிம்-4648 ஷமாயில் திர்மிதீ-331)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பெரிய தலைவராகவும், ஆட்சியாளராகவும் இருந்தும் கூட மக்களுடன் எளிமையாகப் பழகும் பழக்கம் உள்ளவராக இருந்தார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களை மக்கள் எளிதில் சந்திக்க முடியும்; நெருங்கிப் பழக முடியும். பாதிக்கப்பட்டவர்கள் தம் உரிமைகளை பெறவும் இதுவே காரணமாக அமைந்தது. இதுவே சிறந்த ஆட்சியாளருக்கான, தலைவருக்கான முன்மாதிரியாகும்.

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு முறை மதீனாவை தாக்க எதிரிகள் படையெடுத்து வருகிறார்கள் என்ற வதந்தி பரவியது. அப்போது அண்ணலார் (ஸல்) அவர்கள் 'மன்தூப்' என்ற அபூதல்ஹாவின் குதிரையை இரவல் வாங்கிக் கொண்டு அதில் ஏறிச் சென்றார்கள். (மதீனாவைச் சுற்றிப் பார்த்த) பிறகு அண்ணலார் (ஸல்) அவர்கள் திரும்பி வந்து, பீதியூட்டும் படியான எதையும் நான் காணவில்லை; குதிரையை (அலை வீசும்) கடலாக (வேகமாக ஓடக் கூடியதாக) நாம் கண்டோம்" என்று உவமானமாகக் கூறினார்கள்.
(நூல் : புகாரீ-2820, முஸ்லிம்-4620, அபூதாவூத்-4336, திர்மிதீ-1608, இப்னு மாஜா-2762, முஸ்னது அஹ்மத்-12455

ஹள்ரத் சயீது பின் யர்ஃபஉ (ரளி) அவர்களுக்கு பார்வை குறைபாடு இருந்ததால் அவர் ஜும்ஆ தொழுகைக்கு வருவதில்லை. இதையறிந்த ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள் அவரை அழைத்து விசாரித்தார்கள். அவர், "என்னை தொழுகைக்கு அழைத்துக் கொண்டு வர உதவியாளர் யாரும் இல்லை" என்றார். ஜனாதிபதி அவர்கள், அவர் தேவையான இடங்களுக்குச் சென்று வர வழிகாட்டியாக ஒருவரை நியமித்தார்கள். அந்தப் பணியாளர் எப்போதும் அவர் கூடவே இருந்து வந்தார்.
(நூல் : உஸ்துல் ஙாபா)

ஒருமுறை ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள் மக்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் இடக்கரத்தால் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அதைக் கண்ட ஜனாதிபதி அவர்கள், "அல்லாஹ்வின் அடிமையே! நீர் உமது வலக்கரத்தால் சாப்பிடுவீராக" என்றார்கள்.

அதற்கு அவர், "மூத்தா போரில் என் வலது கையில்

காயம் ஏற்பட்டுவிட்டது. அதனால்வலதுகைஇயங்கமுடியாத நிலைக்குப் போய்விட்டது" என்றார். இதைக் கேட்டவுடன் ஜனாதிபதி அவர்கள், அவர் நிலை கண்டு அங்கேயே உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டார்கள்.

பிறகு, "நீர் உளூ செய்வதற்கு யார் உதவி செய்கிறார்?" "உமது துணிகளை யார் துவைத்து தருகிறார்?" 'நீங்கள் குளிப்பதற்கு யார் உதவுகின்றார்?" இதற்கு யார்? அதற்கு யார்?" என்று (அன்றாட அலுவல்களை) விசாரித்துக் கொண்டேயிருந்தார்கள். பிறகு, அவருக்கு ஒரு பணியாளர், (முறையான) வாகனம், உணவு ஆகியவற்றை கொடுக்க உத்தரவிட்டார்கள்.

(நூல் : அல்ஃபாரூக்-
அல்லாமா ஷிப்லி நுஅமானீ)

ஒருவர் ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன் குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகள் எவை? அவை எல்லோருக்கும் கிடைத்திருக்கிறதா? அவ்வாறு கிடைக்காதவர்களுக்கு அவை கிடைக்கப் பெற எவ்வாறு ஏற்பாடுகள் செய்வது? என்றெல்லாம் யோசிக்க வேண்டும். அதில் அவர் கவனம் செலுத்த வேண்டும். குடிமக்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதே ஆட்சியாளருக்கான இலக்கணமாகும்.

இவைதான் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான அடிப்படை. இதில் கவனம் செலுத்தும் ஆட்சியாளர்களால் தான் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல முடியும்.

மக்களுக்கான அரசு என்ற நிலை மாறி, அரசுக்கான மக்கள் என்ற நிலையை உருவாக்கத் துடிக்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள்.

## நிலவரங்களை அறிவது

ஒருமுறை ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள் தனது சிரியா பயணத்தை முடித்துக் கொண்டு தலைநகர் மதீனாவை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது வழியில் ஒரு கூடாரம் இருப்பதைக் கண்டார்கள். வாகனத்தை விட்டு கீழே இறங்கி அந்தக் கூடாரத்தை நோக்கிச் சென்றார்கள். கூடாரத்திற்கு அருகில்வயதானமூதாட்டி ஒருவர் அமர்ந்திருந்தாள். ஜனாதிபதி அவர்கள் அந்த மூதாட்டியிடம், "உமரைப் பற்றி ஏதேனும் தெரியுமா?" என்று விசாரித்தார்கள்.

அந்த மூதாட்டி, "அல்லாஹ் என் மூலமாக அவருக்கு நற்கூலி வழங்காமல் இருப்பானாக!" என்றாள். அதைக் கேட்ட உமர் (ரளி) அவர்கள் ஏன்? எனவினவினார்கள். அம்மூதாட்டி, "அவர் முஸ்லிம்களின் விவகாரங்களுக்கு பொறுப்பேற்றுக்

# வாய் மணக்க
# தாம்பூலம் சிறக்க...!

NIZAM DARBAR

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

## S.A.சபியுல்லா & கோ

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

கொண்டதிலிருந்து அவரது பரிசுகளிலிருந்து ஒரு வெள்ளிக் காசு அல்லது ஒரு தங்கக்காசை கூட நான் பெற்று கொண்ட தில்லை. (அதாவது, அவர் ஆட்சிப் பொறுப்பேற்றதிலி ருந்து எனக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை.)" என்றாள்.

ஜனாதிபதி அவர்கள், "உமரை விட்டு எவ்வளவு தொலைவில் இருக்கிறீர்கள்? உங்களைப் பற்றி அவருக்கு எப்படி தெரியும்?" என்றார்கள். அப்பெண்மணி, "சுப்ஹானல் லாஹ்! மக்களின் ஆட்சியை பொறுப்பேற்றிருக்கிற ஒருவர் தன் ஆட்சிக்கு உட்பட்ட மேற்கு மற்றும் கிழக்கு பற்றி தனக்கு தெரியாது என்று சொல்வார் என நான் எண்ணவில்லை" என்றாள்.

அதைக்கேட்ட ஜனாதிபதி அவர்கள் அழுதுவிட்டு, "உம ருக்கு வந்த நாசமே! உமரே! உம்மைவிட மற்றவர்கள் அறிவு ஞானம் மிக்கவர்கள் தான்" என்று தமது மனதுக்குள் கூறிக் கொண்டு, பிறகு அம்மூதாட்டிக்கு 25 தங்கக் காசு கள் அன்பளிப்பாகக் கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

(நூல் : ஹயாத்துல் ஹயவான் அல்குப்ரா)

குடிமக்களின் வாழ்வாதார நிலை என்ன? அவர்களின் தேவைகள் என்ன? என்பதை அறிய அதற்கான சரியான அதிகாரிகளை நியமித்து அவர் கள் மூலம் குடிமக்கள் பற்றிய நிலைகளை அறிந்து, அவர் களின் தேவைகளை நிறை வேற்றிட முயற்சி செய்யவேண் டும். இதுவே குடியரசு நாட்டை ஆளுபவர்களுக்கான அழகாகும்.

## எல்லோரும் சமம்

இந்திய அரசியல் சாசனத் தின் 14வது விதி, இந்திய மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது.

ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் பைலமானீ(ரளி) அவர்கள் கூறியதாவது : "அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஒப்பந்தம் செய்துகொண்டு வாழும் ஓர் இறை நிராகரிப்பாளருக்காக ஒரு முஸ்லிமை கொன்று நியாய தீர்ப்பளித்தார்கள். பிறகு அண்ணலார் (ஸல்) அவர்கள், "தங்கள் பாதுகாப்புப் பொறுப்பை நிறைவேற்றியவர் களில் நானே மேலானவன்" என்றும் கூறினார்கள்.

(நூல் : தாரகுத்னீ, புலூகுல் மராம் - 1203)

## பாரபட்சமின்றி

இந்திய அரசியல் சாசனத் தின் 15வது விதி, இந்திய மக்களுக்கு இடையே மதம், இனம், ஜாதி, பாலினம், பிறப் பிடம் அடிப்படையில் வேறு பாடு காட்டப்படக் கூடாது என்று கூறுகிறது.

ஹள்ரத் அதாஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ஒரு முறை ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் தம்முடைய எல்லா கவர்னர்களையும் வரவழைத்து பொதுமக்கள் மத்தியில் நிறுத்தினார்கள். அவர்களுக்கு எதிராக எவருக்காவது மனக்குறை இருந்தால் வெளியிடலாம் என்று கூறினார்கள். யாரும் எதுவும் கூறவில்லை. அமைதியாக இருந்தனர்.

அப்போது ஒரே ஒரு மனிதர் எழுந்து நின்று, " ஜனாதிபதி அவர்களே! உங்கள் கவர்னர் இன்னார் (அம்ர் (ரளி) அவர்கள்) (எந்தவித காரணமும் இல்லாமல்) என்னை நூறு கசையடிகள் அடித்துவிட்டார்கள்" என்று குற்றம் சாட்டினார். உடனே ஜனாதிபதி அவர்கள், (அம்ரு-(ரளி) அவர்களை நோக்கி) "நீர் அவரை ஏன் அடித்தீர்? நீர் எழுவீராக! அதற்காக உம்மிடம் பழிதீர்க்கப்படும்" என்று கூறினார்கள். உடனே அம்ரு (ரளி) அவர்கள் எழுந்து, "ஜனாதிபதி அவர்களே! நீங்கள் இவ்வாறு செய்தால் இது போன்ற வழக்குகள் உங்களிடம் அதிகமாக வரும். மேலும் உங்களுக்கு பிறகு வரும் ஆட்சியாளர்களிடம் இதுவே நடைமுறையாகிவிடும். (கவர்னர்கள் மீது இம்மாதிரியான நடவடிக்கையில் இறங்காதீர்கள்" என்று கெஞ்சிக்) கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஜனாதிபதி அவர்கள், "நானாக (இவ்வாறு) பழி வாங்கவில்லை. அருமை நாயகம் (ஸல்) அவர்களே தாமாக பழி வாங்கப்பட முன்வந்ததைப் பார்த்துள்ளேன்" என்றார்கள். (எனவே, நீ வந்து உன்னுடைய பழியினை தீர்த்துக் கொள்!" என்று அம்மனிதரை அழைத்தார்கள்.) இறுதியில் அம்ரு (ரளி) அவர்கள் இரு நூறு தங்க நாணயங்களை கொடுத்து அதாவது, தாம் அடித்த ஒவ்வொரு அடிக்கும் இரண்டு தங்க நாணயங்களை கொடுத்து அதிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொண்டார்."

(நூல்: கிதாபுல் கராஜ் பக்கம்-116)

## மத வழிபாடு

இந்திய அரசியல் சாசனத்தின் 25ஆம் பிரிவு பூரண மத வணக்கம் புரிய உரிமை வழங்கியுள்ளது.

ஹள்ரத் அம்ருபின் அல்ஆஸ் (ரளி) அவர்கள் எகிப்தை வெற்றி கொண்ட பிறகு அந்த மக்களிடம், "எகிப்து மக்களின் கிறிஸ்தவ ஆலயங்களுக்கு முஸ்லிம்களால் எவ்வித இடையூறும் உண்டாகாது" என்று உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

(நூல்: ஸஹீஹ் வஸாயர் ரசூல்)

ஆட்சியாளர் வலீத் பின் அப்துல் மலிக் அவர்கள் டமாஸ்கஸ் நகரில் அமைந்துள்ள பள்ளி

வாசல் ஒன்றை விசாலப்படுத்து வதற்காக பக்கத்தில் இருந்த கிறிஸ்தவ ஆலயத்தையும் சேர்த்துக் கொள்வதற்கு கிறிஸ்தவர்களை எல்லாம் அழைத்து ஆலோசனை செய் தார். கிறிஸ்தவர்கள் விரும்பும் மற்றொரு இடத்தில் ஓர் ஆல யத்தை அமைத்துக் கொள்வ தற்கு தாமே ஏற்பாடு செய்வதா கவும், அதற்காக இரு மடங்கு பணத்தொகை தருவதாகவும் கூறினார். அப்போது அந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுத்து விட்டார்கள். எனினும் ஆட்சி யாளர் வலீத் அந்தப் பள்ளி வாசலை விரிவுபடுத்தும்போது அதிகாரத்தைப் பயன்படுத்தி அருகில் இருந்த கிறிஸ்தவ ஆலயத்தையும் அதன் இடத் தையும்இணைத்துக்கொண்டார்.

அதன் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஹள்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுடைய காலத்தில், அவர்களின் நேர்மையை கேள்விப்பட்ட டமாஸ்கஸின் கிறிஸ்தவ துறவிகள் இந்த விஷயத்தை ஹள்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களி டம் முறையிட்டனர். ஆட்சி யாளர் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் பள்ளிவாசலின் அந்த குறிப்பிட்ட பாகத்தை உடைத்து அந்த இடத்தை உரியவர்களுக்கு மீட்டுக் கொடுக்குமாறும், அதற்குப் பதிலாக நஷ்டஈடு வழங்கு மாறும் கட்டளையிட்டார்கள். (நூல்:ஸஹீஹ் வஸாயர் ரசூல்)

இந்திய அரசியல் சாசனம் உத்தரவாதம் அளித்திருந்தும், முஸ்லிம் மன்னர்கள் கோவிலை இடித்து மசூதி கட்டினார்கள் என்று நாடெங்கிலும் மதவெறி யூட்டி, 1,50,000 பேருக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட ஒரு வன்முறைக் கூட்டம் முஸ்லிம்களின் கண்ணுக் கெதிரிலேயே 1992ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் தேதி பாபர் மசூதியை இடித்துத் துண்டு துண்டாக சிதைத்து தரை மட்டமாக்கியது. அதே பாணியில் மேலும், பல பள்ளிவாசல்கள் சூறையாடப்பட இன்றும் திட்டம் தீட்டப்படுகிறது.

## உச்ச நீதிமன்றத்தில் முறையீடு

இந்திய அரசியல் சாசனத் தின் 32 வது விதி, அரசியல் சாசனத்தில் குறிப்பிட்ட அடிப் படை உரிமைகள் மறுக்கப்பட் டால் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம்.

மஸ்ஜிதுந் நபவீ பள்ளி வாசலையொட்டி அப்பாஸ் (ரளி) அவர்கள் வீடு இருந்தது. மழைக் காலத்தில் அப்பாஸ் (ரளி) அவர்களின் வீட்டின் முகட்டிலிருந்த நீர்த்தாரையில் இருந்துசிதறிவிழும்மழைநீரால் பள்ளிவாசலில் தொழுகைக்கு

SILK MARK

சுப முகூர்த்தப் பட்டுகளுக்கு...

மக்களின் பாராட்டில் ... மயிலாடுதுறை சீமாட்டி ...

# சீமாட்டி

**பட்டு - ஜவுளி - ரெடிமேட்ஸ்**

**மயிலாடுதுறை. ☎: 222587**

: seemattiali@gmail.com

: +91 80564 02677

---

# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

## குட்லக் பர்கா கடை
## குட்லக் எண்ணெய் கடை
## குட்லக் நாட்டு மருந்துக்கடை

எங்களிடம் அனைத்து வகையான காலணிகளும், பேக் மற்றும் சூட்கேஸ் வகைகளும், பெண்களுக்கு தேவையான புர்கா, ஷால், மக்கன்னா போன்றவைகளும், சமையலுக்குத் தேவையான சுத்தமான செக்கு எண்ணெய் வகைகளும் மற்றும் நம்பகமான நாட்டு மருந்துகளும் தரமான வகையில், நியாயமான விலையில் கிடைக்கும்.

தொடர்புக்கு

தரமான ஸ்கூல் பேக் அனைத்து பேக்குகளும் தயாரிப்பாளர்

# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

**4027, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை - 622 001.**

**✆ 04322-222466; Cell : 9443346313**

இடைஞ்சல் ஏற்பட்டதால் அந்த நீர்த்தாரை ஜனாதிபதி உமர் (ரளி) அவர்களின் உத்தரவின் படி அகற்றப்பட்டது.

வெளியில் சென்றிருந்த அப்பாஸ் (ரளி) அவர்கள் வீடு திரும்பியதும் நீர்த்தாரை அகற்றப்பட்டு இருப்பதை கண்டு வேதனையுற்றவராக, மதீனா நகரின் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். நீதிபதி உபை பின் கஅப் (ரளி) அவர்களின் முன்னால் வழக்கு விசாரணைக்கு வந்தது.

ஹள்ரத் அப்பாஸ் (ரளி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! என் வீட்டின் மீதிருந்த நீர்த்தாரையை அருமைநாயகம் (ஸல்) அவர்கள் தான் பொருத்தினார்கள். அப்படிப்பட்ட நீர்த்தாரையை உமரே! நீங்கள் (என் சம்மதம் பெறாமலேயே) அகற்றி விட்டீர்கள். (நீதிபதி அவர்களே! இதற்கு தாங்கள் தகுந்த நீதி வழங்க வேண்டும்") என்று முறையிட்டார்கள்.

நீதிபதி அவர்கள், "வீட்டுக்காரரின் அனுமதி பெறாமல் ஜனாதிபதியாகிய நீங்கள் இவ்வாறு உத்தரவு பிறப்பித்தது தவறு" என்று தீர்ப்பளித்தார்கள்.

ஜனாதிபதி உமர் (ரளி) அவர்கள், "(இது என்னுடைய தவறு தான். அதற்கு பரிகாரமாக (அப்பாஸ் (ரளி) அவர்களே!) நீங்கள் என் தோள்களின் மீது ஏறி நின்று மீண்டும் அந்த நீர்த் தாரையை அது இருந்த இடத்திலேயே பொருத்துங்கள்" என்றார்கள்.

நீதிபதி அவர்கள், "ஆம் அப்படியே செய்யுங்கள். நீதியும் அதை தான் எதிர்பார்க்கிறது" என்றார்கள். பிறகு அவ்வாறே அந்த நீர்த்தாரை பொருத்தப் பட்டது. இதன் பிறகு ஹள்ரத் அப்பாஸ் (ரளி) அவர்கள் தமது வீட்டை மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலுக்கே கொடுத்து வக்ஃபு செய்து விட்டார்கள்.

(நூல்: ஹாகிம்)

ஹள்ரத் அப்பாஸ் (ரளி) அவர்கள் ஜனாதிபதி உமர் (ரளி) அவர்களிடம், "தனி மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்பதை வலி யுறுத்தவே இவ்வாறு நடந்து கொண்டார்கள்.

அரசு தனிமனித உரிமைகளுக்கு எதிராக செயல்படும் போது, அந்த அரசுக்கெதிராக வழக்கு தொடரப்பட்டால் அதில் முறையான நீதி கிடைக்க வேண்டும். இதுவே அரசியல் சாசனத்தை மதிக்கும் குடியரசு நாடு என்பதற்கான அடையாள மாகும்.

நமது இந்திய திருநாட்டில் அனைத்து மக்களின் உரிமைகள் பேணப்பட்டு, அனைவரும் நிம்மதியாக வாழ அல்லாஹு தஆலா அருள்புரிவானாக!

# ஒத்தி ஹராமாகும்

மவ்லானா முஃப்தீ எம்.அபுல்கலாம் காஸிமி மழாஹிரி ஹள்ரத் – சேலம்.

தற்போதைய காலக் கட்டத்தில் பல நபர்கள் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ள பல செயல்களை தெரிந்தோ தெரியாமலோ செய்து வருகின்றார்கள். அதிலே தற்போது நடைமுறையில் இருப்பதுதான் வீட்டை ஒத்திக்கு விடுவது. இது உண்மையில் கடன் மூலம் பெறுகின்ற வட்டியாகும்.

உதாரணமாக வீட்டு உரிமையாளர் 50 இலட்சம் மதிப்புள்ள தன்னுடைய வீட்டை 5 இலட்சத்தை பெற்றுக் கொண்டு அந்தப் பணத்தை இரண்டு வருடத்தில் திரும்பத் தரும் நிபந்தனையுடன் வாடகை வாங்காமல் ஒத்திக்கு வைப்பார். ஒத்திக்கு இருக்கக் கூடியவரும் 5 இலட்சத்தை கொடுத்து விட்டு பணத்திற்கு வட்டி இல்லை; வீட்டிற்கு வாடகை இல்லை என்று சொல்லிக் கொண்டு வீட்டிற்கு எந்த ஒரு வாடகையும் கொடுக்காமல் அந்த வீட்டை பயன்படுத்துவார்.

இதேபோன்று சிலர், வாடகை கொடுக்காமல் இருப்பது தான் வட்டி என்று சொல்லிவிட்டு கொஞ்சமாவது கொடுக்க வேண்டும் என்ற பெயரில் 5 ஆயிரம் மதிப்புள்ள வாடகை வீட்டிற்கு 500 ரூபாய் கொடுக்கின்றார்கள். இதுவும் வட்டியைச் சேர்ந்ததாகும். ஏனென்றால் 5 இலட்சம் கொடுத்ததன் காரணத்தால் தான் வீட்டின் உரிமையாளர் 5 ஆயிரம் ரூபாய் வாடகை மதிப்புள்ள வீட்டிற்கு 500 ரூபாய் வாங்குகிறார். ஒரு வேளை இந்த 5 இலட்சத்தை கொடுக்கவில்லையென்றால், 500 ரூபாயை மட்டும் வாடகையாக வாங்க மாட்டார். 5 இலட்சம் கொடுத்து ஒத்திக்கு இருப்பவர், தான் கொடுத்த 5 இலட்சத்தினால்தான் இந்தப் பயனை பெறுகிறார். எனவே, இதுவும் கடன் மூலம் கிடைக்கின்ற வட்டியாகும்.

ஆக, ஒத்திக்கு இருப்பது வட்டியாக இருப்பதால் இது நம்முடைய மார்க்கத்தில் அனுமதியில்லை. இதைத்தான் அல்லாமா இமாம் அபூபக்கர் இப்னு சஊத் அல் காசாணி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள் –

“கடனுடைய கொடுக்கல் - வாங்கலில் கடனுடைய பணமின்றி வேறெந்த பயனும் இருக்கக் கூடாது. அவ்வாறு பயன் இருந்தால் அந்தக் கடன் அறவே கூடாது. உதாரணமாக உயர்ந்த திர்ஹத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின்படி மட்டமான திர்ஹத்தை கடனாக கொடுப்பது அல்லது ஒருவருக்கு கடன் கொடுத்து மேலும் அதில் கடன் கொடுத்தவருக்கு பயனளிக்கும் விதத்தில் ஏதேனும் நிபந்தனை யிடுவதாகும். நபி (ஸல்) அவர்கள் பயன் தரும் கடனை விட்டும் தடுத்துள்ளார்கள். ஏனெனில், இங்கு நிபந்தனையிடப்பட்ட அந்தப் பயனை பகரமின்றி பெறுவதால் வட்டியாக இருக்கிறது. ஆகவே, தெளிவான வட்டியை விட்டும், மேலும் எதில் வட்டியின் சந்தேகம் இருக்குமோ அதனை விட்டும் தவிர்ந்திருப்பது கட்டாயமாகும்.”

**நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : “ஒரு காலம் மக்களிடையில் வரும் அந்தக் காலத்தில் வட்டியை சாப்பிடாதவர் எவரும் இருக்க மாட்டார். ஒரு வேளை ஒருவர் வட்டியை சாப்பிடா விட்டாலும் அதனது புகை அவரை வந்தடைந்தே தீரும்.”** (மிஷ்காத் பக்கம் - 245)

**ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு ஹன்தலா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : “நபி ஸல் அவர்கள் கூறினார்கள் : ‘ஒரு மனிதர் வட்டியுடைய ஒரு திர்ஹத்தை சாப்பிடுகிறார் (பயன்படுத்து கிறார். எனில் அந்த ஒரு திர்ஹம் 36 முறை விபச்சாரம் செய்வதை விட (பாவத்தில்) மிகக் கடுமையானது.”** (மிஷ்காத் - பக்கம் 245)

**நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : “வட்டியில் 70 பாவங்கள் உள்ளன. குறைந்தபட்ச பாவம், ஒருவன் தன் தாயை விபச்சாரம் செய்வதாகும்.”** (இப்னு மாஜா பக்கம் - 245)

## மனதை அழுத்தும் கடன் பளு!

இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் பிரார்த்திக்கும் போது, ‘இறைவா! பாவத்திலிருந்தும், கடனிலிருந் தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்’ என்று கூறுவார்கள். (இதைச் செவியுற்ற) ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், ‘இறைத்தூதர் அவர்களே! தாங்கள் கடன்படுவதிலிருந்து இவ்வளவு அதிகமாகப் பாதுகாப்புத் தேடுவதற்குக் காரணம் என்ன?’ என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர் கள், ‘மனிதன் கடன்படும்போது பொய் பேசுகிறான்; வாக்குறுதி தந்து (அதற்கு) மாறு செய்கிறான்” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (புகாரீ)

# அஊதுபில்லாஹி

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

**“நீர் குர்ஆனை ஓதுவீரானால், விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும், பாதுகாப்புத் தேடிக் கொள்ளுங்கள்.”**

– அல்குர்ஆன் (16 : 98)

ஷைத்தான், ஜின் இனத்தைச் சேர்ந்தவன், இவ்விரு இனத்தினரும் நெருப்பால் படைக்கப்பட்டவர்கள்.

நெருப்பு, நன்மைக்கும், தீமைக்கும் பயன்படும். சுட்டெரிக்கும் தன்மையுடைய நெருப்பில் தீமைகள் அதிகம். இதன் மூலம் ஆக்கமும் உண்டு. அழிவும் உண்டு. பயன்படுத்தும் முறையைப் பொறுத்து அதன் ஆக்கமும், அழிவும் அமையும்.

நெருப்பால் பிறருக்குத் தொல்லையோ, தண்டனையோ கொடுத்தல் கூடாது. எறும்புக் கூட்டத்தை நெருப்பைக் கொண்டு பொசுக்குதல் போன்ற செயல்கள் கூடாது. நெருப்பால் தண்டனை கொடுக்க, தகுதியுள்ளவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே. நெருப்பு என்றால் சுடும். நெருப்பால் படைக்கப்பட்ட ஷைத்தானும், நெருப்பு போன்ற தீமையை உண்டாக்கும் குணம் கொண்டவனாயிருக்கிறான்.

வீடோ, கடையோ, நெருப்புப் பற்றிக் கொண்டால், அது அதிவேகமாகப் பற்றி எரிவதை பார்த்திருக்கிறோம். இது போல், ஷைத்தானின் தீங்கும் மிக வேகமாக பரவும். இதனால் பிரச்சனைகள், குழப்பங்கள், சண்டைகள், மனக்கசப்புகள், இழப்புகள் என்று பல்வேறு நிகழ்வுகள் நடப்பதுண்டு.

இன்று சமுதாயத்தில் புதிய புதிய பிரிவுகள் தோன்றி, குர்ஆனில், ஹதீஸில் குழப்பங்களை உருவாக்கி புதிய புதிய விளக்கங்களைக் கூறி, பொது மக்களைக் குழப்பி, பிரச்சனைகளை ஏற்படுத்தி தானும் குழம்பி, மக்களையும் குழப்பத்தில் ஆழ்த்துவதைப் பார்க்கிறோம்.

ஷைத்தானுடைய ஓர் ஆற்றல் என்னவென்றால், தன்னுடைய வேலையைச் செய்யும் ஊழியனாக மனிதனை ஆக்கிவிடுவதுதான்.

சில செயல்களில், சம்பவங்களில் மனிதன் ஷைத்தானாகவே மாறிவிடுவதும் உண்டு.

இந்நிகழ்வுகளை இன்றைய புதிய புதிய பிரிவுகளில் கண் கூடாகக் காணலாம். ஷைத் தானுடைய குணங்களில் மிக முக்கிய குணங்கள், கோபம், ஆணவம், அகங்காரம் ஆகும். கோபம்மட்டுமிருந்தால்போதும். அதுஎல்லா முஸீபத்துகளையும் அழைத்து வந்து விடும்.

இன்றைய புதிய பிரிவுகளில் கோபத்தை, ஆணவத்தை, அகங்காரத்தைப் பார்க்கலாம். உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாத பலவீனத்தால் கோபப் பட்டு கோமாளித்தனமான செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்கலாம்.

அணுவைப்போல்உருமாறும் ஆற்றல் பெற்றல் ஷைத்தான், மனித உதிரத்தினுள் நுழைந்து, இதயத்தை உலுக்கும் திறன் பெற்றவன்.

உன்னைப் படைத்தது யார்? என்ற கேள்வியை எழுப்பி, உன் ரப்பை படைத்தது யார்? என்றகேள்வியைஎழவைப்பான். அப்போது இவனுடைய தீங்கை விட்டு, அல்லாஹ்விடம் பாது காப்பு தேடிக் கொள்ளுங்கள் என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

இரத்தம் ஓடும் இடங் களிலெல்லாம் ஷைத்தான் ஓடித் திரிவான் என்பது நபி மொழியே.

குழந்தை பிறந்ததும் சப்த மிட்டு அழுவதற்குக் காரணமே ஷைத்தான்தான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பாங்கொலி கேட்டால், ஷைத்தான் பதறியடித்துக் கொண்டு ஓடுகிறான் என்ற நபிமொழிகேற்ப குழந்தை பிறந்ததும் அதன் காதில் பாங்கு கூறப்படுகிறது.

**“ஷைத்தான் உங்களை வறுமையைக் கொண்டு பயமுறுத்தி மானக்கேடான வற்றைச் செய்யுமாறு உங்களைத் தூண்டுவான்.”**

– அல்குர்ஆன் (2 : 268)

வஸ்வாஸ் என்பது டாக்டர் களால் கண்டுபிடிக்க முடியாத தீர்க்கப்பட முடியாத ஒரு வியாதி. இதை தீராத சந்தேகம் என்று கூறலாம். இவ்வஸ்வாஸை ஷைத்தான் மக்களின் மனதில் உருவாக்கி, விபரீதங்களுக்கு வித்திடுவான். இது ஒரு பெரிய வியாதி. குடும்பத்தில் மனைவி மக்களுக்கிடையில், நண்பர்கள், உறவினர்களுக்கிடையில், தொழுகையில், இன்ன பிற வணக்கங்களில், நற்செயல் களில் பிரச்சனைகளை உருவாக்கி, குழப்பங்களைத் தோற்றுவித்து, சந்தேகங்களைக் கிளப்பி, கவலைகள், சண்டை சச்சரவுகள், கொலை, கொள்ளை வரை இழுத்துச் சென்று மது மற்றும் விபச்சாரத்தில் சிக்க வைத்து, சீரழிய வைத்துவிட்டு சிரித்துக் கொண்டிருப்பான்.

"நிச்சயமாக ஷைத்தான், மனிதனுக்கு பயங்கர விரோதியாயிருக்கிறான்"

– அல்குர்ஆன் (12:5)

பகிரங்க விரோதி, எப்பாவத்தைச் செய்பவனும் மறைமுகமாயில்லாமல் பகிரங்கமாகச் செய்வதைப் பார்க்கலாம்.

பிறரைப் பார்த்து அச்சப்படுவதோ, வெட்கப்படுவதோ இல்லாமல் சாதாரண நிகழ்வுகளாக நடப்பதைப் பார்க்கிறோம்.

தீனைக் கூறுபோட்டு விற்று வரும் புதிய கொள்கைக்காரர்களிடம் வெட்கமோ, நாணமோ இல்லாமலிருப்பதை உதாரணமாகப் பார்க்கலாம்.

"நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் கெடுதலே செய்வான்"

– அல்குர்ஆன் (17:29)

"ஷைத்தான் மனிதனுக்கு பெரும் சதிகாரனாக ஆகி விட்டான்"

– அல்குர்ஆன் (25:29)

குர்ஆன் ஆயத்துக்கள், ஹதீஸ்கள் மூலம் ஷைத்தான் பயங்கரவாதி, தீமையின் தீவிரவாதி என்பதும், காசு பணங்கள் மூலம் திறமையாளர்களையும் தீமையாளர்களாக ஆக்கிவிடுவான் என்பதையும் விளங்கும்போது அது எத்தகைய உண்மை என்பதை

shabnamsilks@ymail.com
www.facebook/shabnamsilk.com

Shabnam
SILKS & READYMADE
No.74, J.N.STREET, PUDUCHERRY - 1.
Ph : 0413-2222600, 2333600

Sagar Foot Wear

269, M.G.ROAD, PUDUCHERRY - 1.
Ph : 0413-2344600

இன்றைய புதிய குழப்பவாதி கள் மூலம் அறிய முடிகிறது.

பாவா ஆதம் (அலை), ஹள்ரத் ஹவ்வா (அலை) இரு வருக்கிமிடையே குழப்பத்தை ஏற்படுத்தியவன், மனித உள்ளங் களில் குழப்பத்தை உண்டாக்கு பவன்என்று அல்லாஹ் குர்ஆன் ஷரீஃபில் பல இடங்களில் ஷைத்தானைப் பற்றிக் குறிப்பிடுகிறான்.

மல, ஜலம் கழிக்கச் செல்லும் போதும், வீட்டை விட்டு வெளி யில் வரும்போதும் ஷைத்தா னின் தீங்கை விட்டு பாதுகாப்புத் தேட, நபி (ஸல்) அவர்கள் கூறி யிருப்பதாவது: ஷைத்தானின் செயல், மிகத் தீயதென்பதால்தான்.

மனிதன் தன்னை மறந்து கோபக்கனல் தெறிக்க சண்டை யில் ஈடுபடுவதுண்டு. இதை மிருக உணர்ச்சி என்று கூறலாம். இம்மிருக உணர்ச்சிக்கு மூல காரணம் ஷைத்தானே.

நபி (ஸல்) அவர்களின் துஆ களில் அதிகம், ஷைத்தானின் தீங்கை விட்டு பாதுகாப்புத் தேடுவதாகவே இருக்கும்.

அமெரிக்காவிலிருந்து இஸ்ரேல் முதல் இந்தியாவரை முஸ்லிம்களுக்கு எதிரான தூண்டுதல், தூபம் போடுதல் நடந்து வருகிறது.

முஸ்லிம்களை கொலை செய்தல், அவர்களுடைய சொத்துக்களை சூறையாடுதல், வகுப்புவெறி, மத வெறி தாண்டவமாடுதல் போன்ற விஷமச் செயல்களெல்லா வற்றிலும் ஷைத்தானின் கைவரிசையைக் காணலாம்.

குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் சம்பாதிப்பவன் ஷைத்தானே, அந்த முதலீடும் தூண்டுதல் என்ற நஷ்டமில்லாத முதலீடுதான்.

முஸ்லிம்களிடையே மத்ஹபு சண்டை, மஸ்ஜிது மதரஸா நிர்வாகப் போட்டிச் சண்டை, தொழில் வியாபாரத்தில் போட்டி, பொறாமை, தலைமைப் பதவிச் சண்டை, இப்படி பல் வேறு பிரச்சனைகளுக்கெல் லாம் அவனே அஸ்திவாரம்.

நரகம் வரை துணைவரு வான். அங்கே விட்டு விட்டு மற்றவர்களை உனக்குத் துணைக்கு அழைத்து வரு கிறேன் என்று கூறிவிட்டுப் போய் விடுவான்.

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக.

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற வழி செய்யுங்களேன்.**

# அண்டை வீட்டாரையும் கொஞ்சம் கவனிப்போமா?

மவ்லவீ ஹாஃபிழ் அ. செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் கூறியதாவது :

"என் உற்றத் தோழர் நபி (ஸல்) அவர்கள், என்னிடம் "நீர் குழம்பு சமைத்தால் அதில் அதிகமாகத் தண்ணீர் சேர்த்து, உம்முடைய அண்டை வீட்டார்களில் ஒரு வீட்டாரைப் பார்த்து அதிலிருந்து சிறிதளவை அவர்களுக்கும் கொடுத்து உதவுக" என்று அறிவுறுத்தினார்கள்.

(நூல் : முஸ்லிம்)

"அபூதர் அவர்களே! நீர் சமைத்தால், குழம்பை அதிகப்படுத்துவீராக! உமது அண்டை வீட்டாரையும் கவனித்துக் கொள்வீராக! அல்லது உமது அண்டை வீட்டாருக்கு மத்தியில் பங்கிட்டு வழங்கி விடுவீராக!" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள்

(நூல் : அஹ்மத்)

"அபூதர் அவர்களே! நீர் சமையல் பாத்திரத்தில் சமைக்க நாடினால், அதனுடைய குழம்பை அதிகமாக்குவீராக! ஏனெனில், இது அண்டை வீட்டாரிடம் விசாலமாக வழங்குவதற்கு ஏற்றதாகும்" என நபி (ஸல்) அவர்கள் எனக்கு அறிவுறுத்தினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள்

(நூல் : அஹ்மத்)

மேற்கூறப்பட்ட மூன்று விதமான நபிமொழிகளிலும் குழம்பு காய்ச்சும்போது கூடுதலாக தண்ணீர் சேர்க்கும்படி நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். எனினும், அது என்ன குழம்பு என்று தெரிவிக்கப்படவில்லை.

பின்வரும் நபிமொழியில் அது கறிக்குழம்பு என்று தெரிய வருகிறது.

"நீங்கள் கறியை சமைக்க நாடினால் சால்னாவை அதிகமாக வையுங்கள் அல்லது தண்ணீரை அதிகமாக ஊற்றுங்கள். ஏனென்றால் அண்டை வீட்டாருக்கு விசாலமாக வழங்குவதற்கும், அண்டை வீட்டாருக்குக் கொண்டு போய் கொடுப்பதற்கும் ஏற்றமானதாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள் (நூல்: அஹ்மத்)

நாம் நமது வீட்டில் வாரத்திற்கு ஒரு தடவை அல்லது

இரண்டு தடவை இறைச்சி வாங்கி ஸ்பெஷலாக சமைக்கிறோம். நமது அண்டை வீட்டாரோ இறைச்சி வாங்கி சாப்பிடுமளவுக்கு அவரிடம் வசதி வாய்ப்பில்லாத நிலை! அப்போது நாம் இறைச்சி சமைக்கும்போது, குழம்பில் அதிகமாகத் தண்ணீரை ஊற்றி சமைத்து, அண்டை வீட்டாருக் கும் தாராளமாக வழங்கிட முன் வர வேண்டும் என இஸ்லாம் நம்மை கேட்டுக் கொள்கிறது.

நமது அண்டை வீட்டில் ஏழை சிறுவர் – சிறுமிகள் இருப் பார்கள். அவர்கள் இறைச்சி சாப்பிட்டு பல நாட்கள் ஆகி யிருக்கும். மேலும், சாதாரண உணவுகளை சாப்பிட்டே பல நாட்களாகி இருக்கும்.

இந்நிலையில், நாம் இறைச்சி வாங்கி சமைக்கும் போதுஅதன்வாடையைவறுமை யில் வாடும் சிறுவர், சிறுமிகள் நுகர்வார்கள். இவ்வாறு நம்மால் சாப்பிட முடியவில்லையே எனும் ஏக்கத்திற்கு நாம் அவர்களை ஆளாக்கி விடக் கூடாது.

அதன் வாடையை கொடுத்துக் கூட அவர்களுக்கு சிரமத்தை தரக் கூடாது; அந்த வாடையைக் காட்டி அவர் களை வாட விடக் கூடாது.

நாம் இறைச்சி வாங்கி சாப்பிடுவது நமது உரிமை. இதில் யாரும் தலையிட முடியாது. ஒரு வேளை சாப்பிட ஆசைப்பட்டால் அவர்களையும் சும்மா விட்டு விடக் கூடாது என இஸ்லாம் இரக்க சிந்தனையுடன் கறி வாங்கி சமைப்போர் குழம்பில் அதிகம் தண்ணீரை சேர்த்து, சால்னாவை காய்ச்சி அண்டை வீட்டாரையும் கொஞ்சம் கவனிக்கும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறது.

**“தமக்கருகிலுள்ள அண்டை வீட்டார் பசித்திருக்கும் நிலை யில் (தான் மட்டும்) வயிறு புடைக்க சாப்பிடும் ஒருவர் பரிபூரண இறை விசுவாசியாக ஆக முடியாது” என நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்
(நூல் : ஹாகிம்)

**“தமக்கருகிலுள்ள அண்டை வீட்டார் பசியோடு இருப்பதை அறிந்த நிலையிலும் வயிறார உண்டு மகிழும் ஒருவர் என்னை பரிபூரணமாக நம்பியவராக இல்லை” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்
(நூல் : பைஹகீ)

**“உங்களில் ஒருவர் தமக்கு விரும்புவதையே தம் சகோதர ருக்கும் அல்லது தம் அண்டை வீட்டாருக்கும் விரும்பாத வரை அவர் முழுமையான இறை நம்பிக்கையாளராக ஆக**

# பள்ளிவாசல் கட்ட உதவி செய்யுங்கள்

அல்லாஹ்வின் கிருபையால் சென்னை, முகப்பேர் ஏரி ஸ்கீம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பேத்கார் நகரில் ஒரு சிறிய இடத்தில் மஸ்ஜிதுன் நூர் அமைந்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்! மஸ்ஜிதுடன் மதரஸாவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளிவாசலில் அம்பேத்கார் நகர், முகப்பேர் ஏரி ஸ்கீம் பகுதி களிலிருந்து மக்கள் தொழுகைக்கு வருகிறார்கள். இங்குள்ள மதரஸாவில் முதியவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், மாணவர்களுக்கும் குர்ஆன் முழுமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. மேலும் இங்கு குர்ஆனை மனனம் செய்யும் ஹிஃப்ழு பிரிவும் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. தொழுகையாளிகளுக்கு தற்போதுள்ள பள்ளிவாசலின் இடம் போதுமானதாக இல்லாததால் இப்பொழுது இருக்கும் பள்ளியை ஒட்டியே 600 சதுரடி இடம் புதிதாக வாங்கி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது.

இப்போது அதற்கான கட்டுமான பணிகளில் ஒரு சதுரடி ரூ.2,000/– என்ற கணக்கில், ஒரு தளத்திற்கு ரூபாய் 12 இலட்சம் வகையில், நான்கு மாடிகளுக்கு ரூபாய் 48 இலட்சம் பேசி இன்ஜினியரிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சமுதாயத்தின் சீதேவிகள் அல்லாஹ்விற்காக அதிகம் உதவி செய்து, “ஸதக்கத்துல் ஜாரியா”வின் நன்மைகளை பெற விரைந்து வாருங்கள். இன்ஷா அல்லாஹ் நாம் மரணித்த பிறகும் அதன் நன்மைகள் நம்மிடம் வந்து கொண்டேயிருக்கும்.

இறைவனின் வீட்டை கட்ட நீங்கள் சம்பாதித்த பணத்தை நீங்கள் இருக்கும்போதே உங்கள் கையால் உதவி செய்து இறைவனின் அன்பளிப்பான சொர்க்கத்தை பெறுவதற்கு முன்வாருங்கள்.

**பணம் அனுப்புபவர்கள் எமது கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி விட்டு அவசியம் தகவல் தாருங்கள்.**

தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் **நூர் முஹம்மது** ஆமிரி : **9444273674**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
A/C No. : **1289135000013292**
Phone pe : **9444273674**
G-pay No. : **9551603786**
Bank Name : **KARUR VYSYA BANK**
Branch : **ARUMBAKKAM**
IFSC Code : **KVBL0001289** SWIFT Code : **KVBLINBBIND**

**மாட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் 71)

**"இறைவனையும், மறுமை நாளையும் நம்பியவர் தம் அண்டை வீட்டாருக்கு உதவி செய்யட்டும்" என நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் - 76)

இஸ்லாம் அண்டை வீட் டாருக்கு செய்யும் உரிமையை யும், உதவியையும் உரத்தக் குரலில் பதிவு செய்கிறது. நாம் பலவிதமான தானங்களையும், அன்பளிப்புகளையும் கேள்விப் பட்டிருப்போம். அன்னதானம், நீர் தானம், பொருள்தானம், உடை தானம், இரத்த தானம், மண் தானம், பொன் தானம் போன்ற பல தானங்கள் உள்ளன.

இஸ்லாம் இதையெல்லாம் கடந்து குழம்புதானம் குறித்து பேசுவது ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகிறது. இப்படியும் ஒரு தானம் உண்டா? என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

குழம்பு தானத்தை குறித்து முதலில் பேசியது இஸ்லாம் மட்டுமே! சில வீடுகளில் உணவை சமைப்பார்கள். குழம்பு வைக்க வசதியிருக்காது. அவர் கள் உணவை மட்டுமே பசிக்காக சாப்பிடுவார்கள். அவர்களுக்கும் குழம்பை ருசிக்க வைத்த மார்க்கமே இஸ்லாம். தமக்கு விரும்புவதையே தம் அண்டை வீட்டாருக்கும் விரும்ப வேண் டும். தமது வீட்டாரை கவனிப் பது போன்றே அண்டை வீட்டாரையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

---

## நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்த உறுதிமொழி!

"அல்லாஹ்விற்கு நாங்கள் எதனையும் இணை கற்பிக்க மாட்டோம்: திருடமாட்டோம்; விபச்சாரம் செய்யமாட்டோம்; அல்லாஹ் கண்ணியப் படுத்தியுள்ள எந்த உயிரையும் கொலை செய்யமாட்டோம்; கொள்ளை யடிக்கமாட்டோம்; (எந்த நற்செயலிலும் உங்களுக்கு) மாறு செய்யமாட்டோம்; (இவற்றை நாங்கள் செய்யாமல் விட்டுவிட்டால்) எங்களுக்கு சொர்க்கம் உண்டு. இவற்றில் ஏதேனும் ஒன்றை நாங்கள் செய்தால் அதன் முடிவு அல்லாஹ்விடம் உள்ளது" என்று இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களிடம் உறுதிமொழிப் பிரமாணம் செய்துகொடுத்த தலைவர்களில் நானும் ஒருவனாவேன்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் உபாதா இப்னு அஸ்ஸாமித் (ரளி) அவர்கள் (நூல் : புகாரீ)

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## போதுமென்ற பொன்மனம்

பெருநாள் விரைந்து வந்து கொண்டிருந்தது. தலைநகர் டமாஸ்கஸில் மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் இருந்தனர்.

கலீஃபா உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களின் துணைவியார் கணவரிடம் சொன்னார் :

“பெருநாளைக்குக் குழந்தைகளுக்கு ஆடைகள் தைத்தால் நல்லது.”

“தைத்தால் நல்லதுதான்! நம்மிடம் வசதி வேண்டாமா?”

– கலீஃபா.

**துணைவியார் :** “ஊரிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் புத்தாடைகள் உடுத்தும்போது நம் குழந்தைகள் – ஜனாதிபதியின் குழந்தைகள் கந்தல் ஆடைகளோடுதான் இருக்க வேண்டுமா?”

**கலீஃபா :** “நான்என்ன செய்ய? எனக்கு கிடைக்கும் உதவித் தொகையிலிருந்து குழந்தைகளுக்கு புத்தாடைகள் வாங்க முடியாது.”

**துணைவியார் :** “ஒரு வார உதவித் தொகையை முன்பணமாக வாங்கி என்னிடம் கொடுத்து விடுங்கள். அதைக் கொண்டாவது குழந்தைகளுக்கு எளிய ஆடைகள் தைத்து விடுகிறேன்.”

**கலீஃபா :** “ஒரு வாரத் தொகையை எப்படித் தர முடியும்? நான் ஒரு வாரம் உயிரோடிருப்பேன் என்பதற்கு என்ன நிச்சயம்? ஒரு வாரத்திற்குள் மக்கள் என்னைப் பதவியிலிருந்து நீக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? கடன் சுமையால் கவலைப்படுவதைவிட இருக்கும் உடைகளுடன் இந்தப் பெருநாளைக் கொண்டாடி விடுவதே நல்லது.”

கலீஃபாவின் மகளாகப் பிறந்து, கலீஃபாவின் வாழ்க்கைத் துணைவியான வனிதையார் கணவர் சொல்லுக்கு எதிர்மொழி கூறவில்லை.

## உயிர் பிரிய ஒரு சொல்!

ஹள்ரத் ஸம்மாக் (ரஹ்) அவர்கள் பிரசங்கம் செய்வதில் மிக வல்லவர். இவர் ஒரு முறை பயான் செய்து முடித்தால் அந்தக் கூட்டத்தில் சிலருக்குப் பைத்தியம் பிடித்து விடும். குறைந்தது நான்கு அல்லது ஐந்து பேர் இறந்து கிடப்பார்கள். அந்தளவிற்கு உருக்கமாக பயான் செய்து மக்களின் உள்ளத்தையே தொட்டுவிடுவார் ஹள்ரத் ஸம்மாக் (ரஹ்) அவர்கள்.

"ஹள்ரத் ஸம்மாக் (ரஹ்) அவர்களின் பயான் நடைபெறுகிறது. நான் அதில் கலந்து கொள்ளச் செல்கிறேன்" என்று ஒருவர் தன் தாயாரிடம் கூறினார். உடனே அந்தத் தாய் தன் மகனைப் பார்த்து, "மகனே! நீ எனக்கு ஒரே புதல்வன். நீ அந்த பயானைக் கேட்டு இறந்து விட்டால் நான் என்ன செய்வேன்? நீ செல்ல வேண்டாம்" எனத் தடுத்தார். ஆனால், பயானின் மீதிருந்த ஆர்வத்தால் மகன் சென்றார். கடைசியில் அவர் மவுத்தாகி விட்டார் என்பது அந்தத் தாய்க்குத் தெரிந்தது. மிகவும் கவலை கொண்டார் அந்தத் தாய்.

ஹள்ரத் ஸம்மாக் (ரஹ்) அவர்கள் ஒரு நாள் வீதி வழியே சென்று கொண்டிருந்ததைக் கண்ட அந்தத் தாய், அரம் பல கத்திகளைச் சாணை பிடிக்கிறது. ஆனால், இந்த அரத்தை யார் சாணை பிடிப்பது? என்று பொருள் படும்படி ஒரு கவி பாடினார். இந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் ஹள்ரத் ஸம்மாக் (ரஹ்) அவர்கள் கீழே விழுந்து மூர்ச்சையாகி மௌத்தாகி விட்டார்.

## தொண்டையில் சிக்கிய ரொட்டித் துண்டு

மஹான் கர்கானி (ரஹ்) அவர்களின் மாண்பினைக் கேள்வியுற்ற மன்னர் மஹ்மூது கஜ்னவி, கஜ்னி நகரத்துக்கு வர வேண்டுமென மஹான் அவர்களை பலமுறை அழைத்தும் மஹான் அவர்கள் அந்த அழைப்பை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

எனவே, தானே நேரில் சென்று, மஹான் அவர்களைச் சந்திப்பது என்ற முடிவுடன் தனது பரிவாரத்துடன் பயணமாகி மஹான் அவர்களின் 'கர்கான்' என்ற கிராமத்தின் எல்லைவரை சென்றதும் மன்னருக்கு ஒரு சபலம்; ஊருக்குள் செல்லாமல் இங்கிருந்து கொண்டு மஹான் அவர்களை அழைத்தால் என்ன? என்று எண்ணினார்.

தனது பணியாளர்களின் மூலம் மஹான் அவர்களுக்கு ஒரு தூதனுப்புகிறார் மன்னர். "கர்கான் நகர எல்லையில் மன்னர் முகாமிட்டுள்ளார். மஹான் அவர்கள் மன்னரை காண வந்தால் நல்லது" இந்த அழைப்புக்கும் வர அவர்கள் மறுத்தால் அல்லாஹ் வுக்கும், அவன் தூதருக்கும், அதிகாரம் பெற்றவர்களுக்கும் வழி படுங்கள்" என்ற கருத்தமைந்த குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டி, அதிகாரம் பெற்ற மன்னருக்கு வழிபட்டு, அவர் அழைப்புக்குட்பட்டு, வர வேண்டுமென்று கூறுங்கள்" என்று தெரிவித்தனுப்புகிறார்.

மன்னரின் தூதர் மஹான் அவர்களிடம் விபரம் கூறியபோது, வழமைபோல் வர இயலாது என்ற பதிலையே மஹான் அவர்கள் கூற, மன்னரின் தூதர் மன்னர் கூறிய இறைவசனத்தைக் கூறி, மன்னருக்கு வழிபடுவது தங்களின் கடமை என்று நினைவுபடுத்துகிறார்.

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

**மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.**

**அலைபேசி : 97156 04495, 95977 25934**

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **55 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

இறைவனின் வேதவாக்கு கூறப்பட்டபோது, கர்கானீ (ரஹ்) அவர்கள் சொன்னார்கள் : "அல்லாஹ்வின் கட்டளையை நிறை வேற்ற முடியாமல் இருக்கிறேன். ரஸூல் (ஸல்) அவர்களின் கட்டளைகளில் எண்ணற்றவை எஞ்சியிருக்கின்றன. இந்நிலை யில், அரசரின் உத்தரவுக்கு வழிபடும் சந்தர்ப்பம் என் வாழ்வில் வருமோ வராதோ? இறைவனுக்கே வெளிச்சம்."

மஹான் கர்கானீ (ரஹ்) அவர்களின் பதில் கஸ்னவீ அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. மஹானின் பதிலைக் கேட்டு மன்னர் வாயடைத்துப் போய், இனி நேரில் சென்றுவிட வேண்டியதுதான் என புறப்படத் தயாரானபோது ஒரு விபரீத எண்ணம் மன்னருக்கு ஏற்பட்டது.

தனது அரச ஆடைகளைத் தன் அடிமை அயாஸுக்கு அணிவித்து, அயாஸின் ஆடைகளை தான் அணிந்து கொண்டார். 10 பெண் களுக்கு தனது ராணுவ வீரர்களின் உடுப்புகளை அணியச் செய்தார்.

இந்த உடை மாற்றங்களுடன் அரசர் குழு, மஹான் கர்கானீ (ரஹ்) அவர்களின் சந்நிதியை அடைந்தது.

மஹான் அவர்கள், அரச தோற்றத்திலிருந்த அயாஸை பார்க்க வில்லை. அடிமையின் தோற்றத்திலிருந்த அரசரை பார்த்து, வீரர் களின் தோற்றத்தில் வந்திருந்த வனிதையர்களைக் குறித்து, இந்த அந்நியப் பெண்களை உடனே வெளியேற்றுங்கள். மிகப் பெரிய ஏமாற்று வேலையைச் செய்துள்ளீர்கள்" என்றார்கள்.

மனம் செம்மையான மஹான்களின் சந்நிதியில் தனது மாறு வேடம் எடுபடாது என்பதைத் தெரிந்து கொண்ட மஹ்மூது கஜ்னவீ அவர்கள், தன் தவறுக்காக வருத்தம் தெரிவித்து, மன்னிப்பைக் கோரி, பரக்கத்திற்காக தனக்கு ஏதேனும் தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

உயர் ஞான மேதையான மஹான் அவர்கள் ரொட்டித் துண்டை மன்னருக்குக் கொடுக்கிறார்கள்.

ரொட்டித் துண்டைப் பெற்றுக் கொண்ட மன்னர், புனிதரின் முன் ஒரு பொன்முடிப்பை காணிக்கையாக வைத்துவிட்டு, பரக்கத்திற்காகப் பெற்ற ரொட்டித் துண்டை உண்ணத் துவங்கினார். ரொட்டித் துண்டு, மன்னரின் தொண்டையில் சிக்கி, சிரமம் கொடுத்தது.

மஹான் காஜா அபுல் ஹசன் கர்கானீ (ரஹ்) சொன்னார்கள் : "மஹ்மூத்! நபி (ஸல்) அவர்களின் இந்த எளிய உணவான ரொட்டித் துண்டு உங்கள் தொண்டையில் இறங்காமல் சிரமம் தருமானால், அக்கிரமம் நிறைந்த இக்காலத்தில் அமானிதமாக வந்த இந்தப் பணம் எங்கள் தொண்டையில் செல்லுமா?" என்று கூறி அந்த பொன்முடிப்பைப் பெற மறுத்து விட்டார்கள். (தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

# வழங்கி வாழ்தல் – நயமிகு நல்வழி!

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

## 7. அறிவு (Knowledge)

கல்வி கற்பதை ஆண்-பெண் இரு பாலருக்கும் கடமை யாக்கியுள்ளது அல்-இஸ்லாம்.

ஏனெனில் "அறிவுடையவர் எல்லாம் உடையவராவார்."

ஆகவே, நாம் பெற்றுள்ள அறிவைப் பயன்படுத்தி, சக மனிதர்களின் பிரச்சனைகளுக்கு உதவுவது ஓர் அற்புதச் செயலாகும். சிறந்ததோர் சமூக சேவையுமாகும்.

"இக்ரஃ" - ஓதுவீராக! என்பதே, இறைமறையின் முதல் சொல்.

"[நபியே! அனைத்தையும்] படைத்த உங்களது இறைவனின் திருப்பெயரால் [எனது கட்டளை அடங்கிய திருக்குர்ஆனை] நீங்கள் ஓதுவீராக! அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான்.

[நபியே! பின்னும்] நீங்கள் ஓதுங்கள்! உங்களது இறைவன் மாபெரும் கொடையாளி.

அவன்தான் எழுதுகோலைக் கொண்டு [எழுதக்] கற்றுக் கொடுத்தான். அன்றி [அதன் மூலம்] மனிதன் அறியாதவற்றையெல்லாம் அவனுக்கு கற்றுக் கொடுத்தான்."

- அல்குர்ஆன் (96 : 1-5)

எழுதப்படிக்கத் தெரியாத (உம்மி) ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் அறிவைப் பெறுவதற்கு வழங்கிய போதனைகள் நம் சிந்தனைக்கு விருந்தாகும்!

"அறிவைத் தேடிப் பெறுங்கள். ஏனெனில் அறிவடையச் சென்றிடுவோர் இறைவழியில் இருக்கின்றார். அதைக் கூறுபவர் இறைவனைப் புகழ்கிறார். அதனை நாடுபவர் இறைவனை மேன்மைப்படுத்துகிறார். அதன் மூலம் பிற மனிதர்களுக்கு நேர் வழியைக் காட்டுகிறார். 'ஜகாத்' என்ற ஏழை வரி வழங்குகிறார். அதை நாடுபவருக்கு முறையாக உரைப்பவரின் செயல், அல்லாஹ்வை வணங்குவதற்கு ஒப்பாகிறது.

அறிவே எனது முதலீடு, ஆய்ந்தறிதலே எனது நெறி. அறிவு நன்மை தீமைகளைப் பிரித்தறிய உதவுகிறது. சுவனப் பாதைக்கு ஒளி சிந்தி

வழி காட்டுகிறது. பாலைவனத்தில் தனித்து பயணிக்கும் ஒருவருக்கு பெரும் உற்ற தோழனாகி விடுகிறது. துணையற்றவருக்குத் துணையாகிறது. தனித்த ஒருவருக்குத் துணை போகும் ஒரு சமுதாய அமைப்பாகி விடுகிறது. மகிழ்விற்கு வழிகாட்டுகிறது. துன்பத் தில் துவண்டு விடாமல் துணை நிற்கிறது. நண்பர்களுக்கிடையே நயமிகு ஆபரணமாகத் திகழ்கிறது. பாதுகாப்பு நல்கும் வலிமை மிகு கேடயமாகவும் திகழ்கிறது.

அல்லாஹ்வின் ஓர் அடிமை அறிவைப் பெறுவதால், சமுதாயத்தில் உயர்ந்த தகுதி பெறுகிறார். இவ்வுலக ஆட்சியைப் பெறுவதோடு மறுமையின் முழுமையான மகிழ்ச்சியையும் பெறுகிறார்'' என நபி [ஸல்] அவர்கள் கூறியுள்ளார்கள்.

"ரப்பீ ஸித்னீ இல்மா''

- அல்குர்ஆன் (20:114)

"என் இறைவனே! என்னுடைய கல்வி ஞானத்தைமென் மேலும் அதிகப்படுத்து" என்று (நபியே!) நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று இறைமறை வழிகாட்டுகிறது.

ஆகவே, உணர்வூட்டும் அருள்மறை கருத்துக்களும், அண்ணலாரின் அறிவுரைகளும் அறிவைப் பெற உணர்வூட்டுகின்றன. அறிவைப் பெற்றவர், சமுதாயம் சிறப்புற அதனை வழங்கி வாழ்வதே உத்தமச் செயலாகும்!

## 8. பணம் (செல்வம்)

நமது வாழ்நாட்கள் இடரின்றி பயணிப்பதற்கு பொருள்வளம் இன்றியமையாதது. ஆகவே நேர்மையான வழியில் பொருளீட்டுவது மட்டுமே சரியான வழியாகும். உழைத்து உண்டதே உத்தம வழியுமாகும்.

பணம், மனமகிழ்ச்சியை பெற்றுத்தர முடியாது. ஆனால், வாழ்வாதாரத்தை நிலை நாட்டவல்லது.

ஈருலக வெற்றிக்கு பொருளும், அருளும் வேண்டும். ஆகவே பொருள் வளம், எதிர்ப்படும் இடர்களை களையவும், குறிக்கோளை அடையவும் வழி ஏற்படுத்துகிறது.

நம் சமுதாயத்தில் செல்வந்தர்களை விட, ஏழ்மை மிக்கவர்களே அதிகம் உள்ளனர். ஏனெனில், அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கே செல்வத்தை வழங்குகிறான். எனது அறிவாலும், திறமையாலும் நான் செல்வத்தைக் குவித்தேன் என்று கூறுவது அறியாமையே.

செல்வம் பற்றி அல்லாஹ் கூறுகிறான்.

"செல்வம் இவ்வுலக வாழ்வின் அலங்காரம்''

- அல்குர்ஆன் (18:46)

"உங்களை உங் களின் செல்வங்கள் நம்மிடம் நெருங்க வைப்பதில்லை."

– அல்குர்ஆன் (34:37)

"செல்வங்களே சோதனை தான்" – அல்குர்ஆன் (64:15)

"உங்களின் செல்வம் உங்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும் திருப்பி விட வேண்டாம்"

– அல்குர்ஆன் (63 : 9)

"அவர்களுடைய செல்வங்கள் அல்லாஹ்விடமிருந்து அவர்களை காப்பாற்றாது"

–அல்குர்ஆன் (58 : 17)

"அல்லாஹ் உங்களுக்கு அளித்துள்ள செல்வத்திலிருந்து அடிமைகளுக்கும் அளிப்பீர்களாக" – அல்குர்ஆன் (24 : 33)

"அவன் உங்களுக்கு செல்வங்களைக் கொண்டு உதவி செய்வான்"

– அல்குர்ஆன் (71 : 12)

"அவர்களின் செல்வங்களில் நிர்ணயிக்கப்பட்ட உரிமை கேட்போருக்கும் கேட்காதோருக்கும் உரிமையுண்டு."

– அல்குர்ஆன் (70 : 24, 25)

"(பயபக்தியுடையவர்கள்) தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவே, தம் செல்வங்களை இறைவழியில் கொடுக்கிறார்கள்."

– அல்குர்ஆன் (92 : 18)

ஒருவருக்கு அல்லாஹ் செல்வம் வழங்கியிருப்பது, அவரது ஆடம்பர வாழ்க்கைக்காக அல்ல. அதனை, இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கே என்பதை செல்வந்தர் அறிந்து, உணர்ந்து செயல்பட வேண்டும்.!

"(நபியே!) அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய பொருளைச் செலவு செய்கின்றவர்களுடைய (பொருளின்) உதாரணம் ஒரு வித்தின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது. அ(ந்த வித்)து ஏழு கதிர்களைத் தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள். (ஆக எழுநூறு வித்துக்கள் அந்த ஒரு வித்திலிருந்து உற்பத்தியாயின), அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கு (இதை பின்னும்) இரட்டிப்பாக்குகின்றான். ஏனெனில், அல்லாஹ் (வழங்குவதில்) மிக்க விசாலமானவனும், மிக அறிந்தவனுமாகவும் இருக்கின்றான்"

–அல்குர்ஆன் (2 : 261)

நபி (ஸல்) அவர்கள் கூறினர் : 'மேல்கரம், கீழ் கரத்தை விடச்சிறந்தது' (அதாவது தர்மம் வழங்கும் கரம் மேலேயும், அதைப் பெறும் கரம் கீழேயும் உள்ளன). அறிவிப்பவர் : ஹள்ரத் ஹக்கீமுப்னு ஹிஷாம் (ரளி) அவர்கள்

(ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி)

## 9. கௌரவம் (Prestige)

ஒருவர் அறிவுத் திறனாலும், கடின உழைப்பினாலும், சாதனைகள் நிகழ்த்தும்போது, சமுதாயம் பாராட்டி அவரை உயர்த்துகிறது. அரசு, சமூக அமைப்புகள் மற்றும் அறிஞர் குழுக்கள் விருதுகள் வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் அவரை கௌரவிப்பதைக்காண் கிறோம். பொற்கிழிகளும் வழங்கப்படுகின்றன. வாழ்த்து பெறுபவரின் உள்ளம் மகிழ் கிறது. மென்மேலும் சாதனைகள் நிகழ்த்த வேண்டும் என்ற உறுதி அவர் மனதில் துளிர்க்கிறது. புகழுக்குரியவராகி விடுகிறார்.

பல்வேறு அறிவுத் துறை களில் ஆராய்ச்சி மேற்கொண்டு புதிய கண்டுபிடிப்புகள் மூலம் வரலாறு படைப்பவர்கள், இலக்கியத் துறையில் சாதனை கள் புரிபவர்கள், உலக அமைதிக் காகப் பாடுபவர்கள் ஆகியோர் நோபல் பரிசு வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு 'பாரத ரத்னா' என்ற இந்தியாவின் மிக்குயர்ந்த விருது வழங்கப் பட்டு சிறப்பிக்கப்பட்டார்.

சவூதி அரேபியாவின் உயர்ந்த "ஃபைசல் விருது" வழங்கப்பட்டு டாக்டர் ஜாகிர் நாயக் அவர்கள் சிறப்பிக்கப் பட்டார்.

உலகின் பல்வேறு நாடு களில் விருது வழங்குதல் பின்பற்றப்படுகிறது.

அழகிய முன்மாதிரியான நபி (ஸல்) அவர்களே, அறிஞர் களைச் சிறப்பிக்கும் முறையை, முதன்முதலில் உலகிற்குக் காண்பித்தவர்களாவர்.

இருபெரும் கவிஞர்களுக்கு போர்வை (பொன்னாடை) போர்த்திச் சிறப்பித்தனர்.

அரபிகளின் பிரபல கவிஞர் கஉபு இப்னு ஸுஹைர், நபி (ஸல்) அவர்கள் மீது வசை மாரி பொழிந்து கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்களின் மென் மனத்தை நோகச் செய்தார். ஆகவே, மக்கா வெற்றியின் போது கவிஞரை கண்ட இடத் தில் கொல்லுமாறு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கட்டளை பிறந்தது.

இதனையறிந்து, உயிருக்குப் பயந்து மதீனா சென்று, நபி (ஸல்) அவர்களின் கரம் பற்றி இஸ்லாத்தை ஏற்றபின், மன்னிப்பு வழங்கப்பட்டார். கவிஞர் ஹள்ரத் கஉபு இப்னு ஸுஹைர் (ரளி) அவர்கள், இப்பொழுது நபி (ஸல்) அவர்கள் மீது புகழ் மாரி பொழிந்தார். அண்ணலார் (ஸல்) அவர்கள் அதற்கு அனுமதி வழங்கினர். 'பானத் ஸுஆத்' என்ற பெயருடைய கவியைப் பாடினார்.

"நிச்சயம் நபி ஒளி மயமானவரே!
அவரால் நாமும் ஒளி பெறலாம்!

**மீரா டாக்குமெண்டேஷன் & லா அசோசியேட்ஸ்**

சட்ட ஆலோசனைகள் வழங்கி பத்திர பதிவிற்கு தேவையான அனைத்து விதமான ஆவணங்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து தரப்படும்.

**M.ஷேக் பரீத் அலீ,** M.Com.,M.L., **அட்வகேட்,**



100, சார்பதிவாளர் அலுவலக தெரு, அரவக்குறிச்சி – 639201. கரூர் Dt.

**9940787789 / 04320-231789**

**எங்கள் இதர நிறுவனம் :**

**மீரா இன்ஃபோநெட் இ-சேவை மையம்**

**அனைத்து விதமான ஆன்லைன் சேவைகளும் செய்து தரப்படும்**

100/2, S.R.O. தெரு, அரவக்குறிச்சி.

**9843062785 / 8148148177**

**MEERA DIGITAL HUB மீரா டிஜிட்டல் ஹப்**



அனைத்து விதமான கம்ப்யூட்டர், லேப்டாப், பிரிண்டர்ஸ், மொபைல் போன், CCTV கேமரா அனைத்தும் குறைந்த விலையில் கிடைக்கும்.

72, A.R.S. பில்டிங், கரூர் மெயின் ரோடு, அரவக்குறிச்சி.

**8248522455 / 9080360049**

---

**மக்களின் சேவையில் 18 ஆண்டுகள்!**
**நம்பிக்கையோடு வாருங்கள்!!**
**இன்ஷா அல்லாஹ் சுகம் பெறுவீர்கள்!!!**

Rx

**சன் மெடிக்கல்ஸ்**

**SUN MEDICALS**

1/180-A, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில்,
திருப்பூர் ரோடு, **மங்கலம் - 641663.** திருப்பூர் மாவட்டம்.

**9865261670**

அல்லாஹ்வின் வாட்களிலே உருவப்பட்ட இந்திய வாட்களைப் போல் நபி மிளிர்கிறார்கள்."

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்தான் ஒளி மயமானவன்" என்று கவிஞரை திருத்திவிட்டுமகிழ்ச்சிமீக்குற்று, தங்களது பச்சை நிற மேலங்கியை அவர் மீது போர்த்தினர். ஆகவே, அக்கவிதை 'கஸீதத்துல் புர்தா - போர்வைக் கவி" என்று புகழ் பெற்றது.

எகிப்துநாட்டின்புகழ்கவிஞர், புர்தா ஷரீஃபை இயற்றிய சான்றோர் ஹள்ரத் ஷர்ஃபுதீன் முஹம்மதுல் பூஸிரி (ரஹ்) அவர்களாவர். ஹிஜ்ரி 608ல் பிறந்தவர். அரசு பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின், பக்கவாத நோயால் பெரிதும் துன்புற்றார். படுத்த படுக்கையில் கிடந்தனர். அப்பொழுது அருள் வேண்டி, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது இயற்றிய பனுவல் தான் 'புர்தா ஷரீஃப்'. புர்தா என்பதன் பொருள் போர்வை.

நபி (ஸல்) அவர்கள் கவிஞரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, இவர்களின் பனுவலைப் பாடச் சொல்லி அசைந்து அசைந்து கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். 165 கண்ணிகளைக் கொண்டது இந்நூல். அதில் இரண்டு மீமோடு முடியும் பைத்துக்களைக் கேட்டதும் அண்ணலார் (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தனர் என்று கூறப்படுகிறது.

பனுவலின் 51வது அடியாகிய 'ஃபமப்லகுல் இல்மி ஃபீஹி அன்னஹு பஷருன்' என்பதைப் பாடியதும், அடுத்த அடி நினைவுக்கு வராமல் இவர்கள் திணறிய பொழுது, நபி (ஸல்) அவர்கள் "வஅன்னஹு கைரு கல்க்கில்லாஹி குல்லிஹிமி" என்று அடியெடுத்துக் கொடுத்தனர்.

பாடல்கள் முழுவதையும் கேட்டு மகிழ்ந்த மாநபி (ஸல்) அவர்கள், தங்களின் புனிதக் கரத்தால் பூஸிரி (ரஹ்) அவர்களின் உடலைத் தடவி, தங்களது பச்சை நிறப்போர்வையால் போர்த்தனர். அக்கணமே நோய் நீங்கி இவர்கள் நலம் பெற்றனர். அறையில் நாள் முழுவதும் கஸ்தூரி மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

இப்பனுவல் 'புர்தா' என்று புகழ் பெற்றது. 'நோயறு பனுவல்' என்று போற்றப்படுகிறது.

**"மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர், மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர், மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக்**

கொள்வதற்கல்ல.) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் [அனைத்தையும்] நன்கறிந்தவனும், நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான்."

- அல்குர்ஆன் (49:13)

நபி (ஸல்) அவர்கள் கூறினர்: "உங்களில் எவர் தமக்கு விரும்புவதையே, தம் சகோதரருக்கும் விரும்பாத வரை (பரிபூரணமான) விசுவாசங் கொண்டவராக ஆக மாட்டார்."

அறிவிப்பவர்: ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள், (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி)

## 10. மகிழ்ச்சி

நாம் உற்றார்கள், உறவினர்கள், நண்பர்கள், மற்றும் பிற மனிதர்கள் ஆகியோருடன் உரையாடியும், அன்பை வெளிப்படுத்தியும், துக்கத்திலும், மகிழ்ச்சியிலும் பங்கேற்று செயல்படுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. இவர்களனைவரிடமும் பயனுள்ள செயல்களை மேற்கொண்டு மகிழ்ச்சியூட்டுவது, நற்செயல்களைப் புகழ்வது, அன்பளிப்புகளை பரிமாறிக்கொள்வது, நகைச்சுவையுடன் சிரித்து மகிழ்வது மிகவும் விரும்பத்தக்கவையும், மனதில் நின்று நிலைத்திருப்பவையுமாகும்.

திருமறை கூறுகிறது:-

"மேற்கிலோ, கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்பி விடுவதனால் மட்டும் நன்மை செய்தவர்களாக ஆகி விட மாட்டீர்கள். [உங்களில்] எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் [மறுமை நாளையும்], மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும் நிச்சயமாக நம்பிக்கை கொண்டும், [தனக்கு விருப்பமுள்ள] பொருளை அல்லாஹ்வுக்காக, உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிபோக்கர்களுக்கும், யாசகர்களுக்கும், விடுதலையை விரும்பிய [அடிமைகள், கடன்காரர்கள்] ஆகியவர்களுக்கும் கொடுத்து [உதவி செய்து] தொழுகையையும் கடைப்பிடித்து தொழுது, ஜகாத் [மார்க்க வரி யு]ம் கொடுத்து வருகின்றாரோ அவரும், வாக்குறுதி செய்த சமயத்தில் தங்களுடைய வாக்குறுதியை[ச் சரிவர] நிறைவேற்றுபவர்களும், கடினமான வறுமையிலும், நோய் நொடிகளிலும், கடுமையான போர் நேரத்திலும் பொறுமையைக் கைக்கொண்டவர்களும் ஆகிய [இவர்கள் தாம் நல்லோர்கள்] இவர்கள் தாம் [அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில்] உண்மையாளர்கள். இவர்கள் தாம் இறையச்சம் உடையவர்கள்"

- அல்குர்ஆன் (2 : 177)

நபி(ஸல்) அவர்கள், மனைவி மார்களிடமும், தோழர்களுட னும், இனிமையாகவும், நகைச் சுவையுடனும் கலந்துரையாடி, மகிழ்ச்சியூட்டுவார்கள். விளையாட்டில் பங்கேற்பார்கள்.

“நாயகமே! நிச்சயமாகத் தாங்கள் எங்களிடம் ஹாஸ்ய மாகப் பேசுகிறீர்கள் என்று தோழர்கள் நபி [ஸல்] அவர்களி டம் கூறினர். [அதற்கு] அவர்கள் நிச்சயமாக நான் உண்மையை யன்றி [வேறு எதனையும்] கூறு வதில்லை” என்று கூறினர்.
அறிவிப்பவர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள், (ஆதாரம்: திர்மிதீ)

“நிச்சயமாக நபி [ஸல்] அவர்கள் என்னை ‘இரண்டு காதுகள் உடையவரே’ என்று நகைச்சுவையாக விளித் தனர்.” அறிவிப்பவர்: ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள், (ஆதாரம்: அபூதாவூத்)

“ஒரு பெண் நபி [ஸல்] அவர்களிடம் வந்து ‘நாயகமே! எங்களுக்கு வாகனமாக ஓர் ஒட்டகத்தைத் தாருங்கள் என்று கூறினார். அப்பொழுது நபி [ஸல்] அவர்கள் ‘உம்மை நான் ஒரு பெண் ஒட்டகத்தின் குட்டி மீது ஏற்றி அனுப்புகிறேன்’ என்று கூறினர். அதற்கு அப் பெண்மணி ‘நாங்கள் பெண் ஒட்டகக் குட்டியை வைத்துக் கொண்டு என்ன செய்வது?’ என்று வினவினார். அதற்கு நபி [ஸல்] அவர்கள், ‘ஒட்டகத்தைப் பெண் ஒட்டகம் தானே ஈன்று தருகிறது’ என்று கூறினார்கள்.” அறிவிப்பவர்: ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள், (ஆதாரம்: திர்மிதீ)

ஒரு மூதாட்டி ‘கிழவிகள் சொர்க்கம் செல்வார்களா?’ என்று அண்ணல் நபி [ஸல்] அவர்களிடம் வினவினார். கிழவிகள் சொர்க்கம் செல்ல மாட்டார்கள்’ என்றனர் அண்ண லார் [ஸல்] அவர்கள். இதனைக் கேட்டு அம்மூதாட்டி அழத் தொடங் கினார். அப்போது நபி [ஸல்] அவர்கள், ‘முதியவர்கள், இளமை வழங்கப்பட்டு, சொர்க்கம் செல் வார்கள்’ என்று கூறினர்.

நபி (ஸல்) அவர்கள் அன்னை ஆயிஷா (ரளி) அவர் களுடன் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டனர். அதில் அன்னை யார் வெற்றி பெற்றனர். மற் றொரு முறை அண்ணலார் (ஸல்) அவர்களும், அன்னை ஆயிஷா (ரளி) அவர்களும் ஓட்டப்பந்தயம் மேற்கொண் டனர். இதில் அண்ணலார் (ஸல்) அவர்கள் வெற்றி பெற்றனர். அன்னையார் அவர்கள் உடல் சற்று பருத்திருந்ததே தோல்விக்குக் காரணம்.

நபித்தோழர் ஹள்ரத் ஜாஹிர் இப்னு ஹிராம் அல் அஷ்ஜயீ (ரளி) அவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் விளை யாட்டில் ஈடுபட்டனர்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேரருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்®

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

Lalpet : No. 1, Quaide Millath Salai, Lalpet - 608 303, Cuddalore District Ph : 041 44268114 Mob : +91 94437 41264
Chennai : No. 37/77, Krishnan Koil Street, Mannady, Chennai - 1. Ph: 044 4600 0250, Mob. : +91 95669 92919 | +91 99942 54304

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2025

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் | 25-12-2024 | புதன் | 08-01-2025 | புதன் | 15 நாள் |
| ஜனவரி | 12-01-2025 | ஞாயிறு | 26-01-2025 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 22-01-2025 | புதன் | 05-02-2025 | புதன் | 15 நாள் |
| பிப்ரவரி | 02-02-2025 | ஞாயிறு | 16-02-2025 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 18-02-2025 | செவ்வாய் | 04-03-2025 | செவ்வாய் | 15 நாள் |

**புனித ரமலான் உம்ரா பயணம் - 2025**

| | | | | |
|---|---|---|---|---|
| முழு 30 நாள் | 01-03-2025 | சனி | 02-04-2025 | புதன் |
| முதல் 15 நாள் | 01-03-2025 | சனி | 15-03-2025 | சனி |
| இறுதி 15 நாள் | 16-03-2025 | ஞாயிறு | 02-04-2025 | புதன் |

**ஷவ்வால் மாத உம்ரா பயணம் - 2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 06-04-2025 | ஞாயிறு | 20-04-2025 | ஞாயிறு | 15 நாள் |
| ஏப்ரல் | 15-04-2025 | செவ்வாய் | 29-04-2025 | செவ்வாய் | 15 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜுலை | 07-07-2025 | திங்கள் | 21-07-2025 | திங்கள் | 15 நாள் |
| ஜுலை | 21-07-2025 | திங்கள் | 04-08-2025 | திங்கள் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 10-08-2025 | ஞாயிறு | 07-09-2025 | ஞாயிறு | 30 நாள் |
| ஆகஸ்ட் | 10-08-2025 | ஞாயிறு | 24-08-2025 | ஞாயிறு | 15 நாள் |
| ஆகஸ்ட் | 24-08-2025 | ஞாயிறு | 07-09-2025 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 14-09-2025 | ஞாயிறு | 28-09-2025 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 21-09-2025 | ஞாயிறு | 05-10-2025 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 06-10-2025 | திங்கள் | 03-11-2025 | திங்கள் | 30 நாள் |
| அக்டோபர் | 06-10-2025 | திங்கள் | 20-10-2025 | திங்கள் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2025 | திங்கள் | 27-10-2025 | திங்கள் | 15 நாள் |
| நவம்பர் | 03-11-2025 | திங்கள் | 30-11-2025 | ஞாயிறு | 30 நாள் |
| நவம்பர் | 03-11-2025 | திங்கள் | 17-11-2025 | திங்கள் | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2025 | ஞாயிறு | 30-11-2025 | ஞாயிறு | 15 நாள் |
| டிசம்பர் | 09-12-2025 | செவ்வாய் | 23-12-2025 | செவ்வாய் | 15 நாள் |
| டிசம்பர் | 25-12-2025 | வியாழன் | 08-01-2026 | வியாழன் | 15 நாள் |

**புனித ஹஜ் பயணம் - 2025 முன்பதிவு நடைபெறுகிறது..!! முந்துங்கள்..!!!**

**புனித ரமலான் உம்ரா பயணம் - 2025**

முதல் 15 நாட்கள் ரூ.1,40,000/-
இறுதி 15 நாட்கள் ரூ.1,80,000/-
முழு 30 நாட்கள் ரூ.2,10,000/-
சிறப்பு பேக்கேஜ் 30 நாட்கள் எக்கானமி ஸ்பெஷல் ரூ.1,65,000/-

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு செல்: 9994254304

காட்டில் வசிக்கும் தோழர், நபி (ஸல்) அவர்களைச் சந்திக்க வரும் போதெல்லாம் காட்டில் கிடைக்கும் காய்கறிகள் போன்ற வற்றைக் கொண்டு வருவார். நபி (ஸல்) அவர்களும், தோழர் பிரியும்போது மதீனத்துப் பொருட்களை அவருக்கு வழங்கு வார்கள். 'ஜாஹிர் காட்டைச் சேர்ந்தவர். நாம் அவரது நகரைச் சேர்ந்தவர்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை கூறினர்.

ஒரு தடவை ஜாஹிர் (ரளி) அவர்கள் தமது பொருட்களை ஓரிடத்தில் நின்று கொண்டு விற்பனை செய்து கொண்டிருந் தனர். நபி (ஸல்) அவர்கள் தங் களது இரண்டு கரங்களால், அவர் பார்க்காதவாறு அவரைப்பிடித்துக் கொண்டனர். 'யாரது? என்னை விட்டுவிடுங்கள்' என்று கூறியவ ராக, தமது ஓரக் கண்ணால் நபி (ஸல்) அவர்கள் தாம் எனக் கண்டு கொண்டனர். தமது முதுகை நிமிர்த்தி அண்ணலார் (ஸல்) அவர்களின் நெஞ்சுடன் இணைத்துக் கொண்டனர். (இந்த அளப்பரிய நிலை யாருக்குக் கிடைக்கும்) பின்னர் நபி (ஸல்) அவர்கள் கூறினர் : 'இந்த அடிமையை வாங்குபவர் யார்?' ஜாஹிர் (ரளி) அவர்கள், 'நபி (ஸல்) அவர்களே! என்னை விற்றால் குறையுள்ளதை விற்ற தாகத்தானிருக்கும்' என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள் 'அவ்வாறல்ல. நீர் குறையுள்ளவர் அல்ல (அல்லாஹ்விடத்தில் நீர் உயர்ந்தவராவீர்) என்று கூறினர்.

தோழரின் பின்னால் வந்து, தோழரின் கண்களை நபி (ஸல்) அவர்கள் மூடியது கேலியாக விளையாடுவதற்குத்தான். தோழர் அடிமையல்ல. அவ்விதம் பேசியதும், அவரை விற்பதாகக் கூறியதும் விளையாட்டிற் காகவே தான். அறிவிப்பவர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (ஆதாரம்: திர்மிதீ)

நகைச்சுவைஓர் அரிய பண்பு, மக்கள் கவலைகளை மறக்க வைக்கும் ஆற்றலுள்ளது. இறு கிய மனத்தை எளிதாக்க வல்லது.

நகைச்சுவை உணர்வும், பேசும் வல்லமையும் கெண்டவர் காந்தி ஜீ. 'உலகில் நகைச்சுவை இல்லையென்றால், தற்கொலை செய்து கொள்வேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

படைப்பில் சிறந்த மனிதன் மட்டுமே பேசும் திறனும், அதில் நகைச்சுவை சிந்தும் ஆற்றலும் வழங்கப்பட்டுள்ளான்.

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

உணவு, உடை, உறையுள், அறிவு என எதனைப் பகிர்ந்து கொண்டாலும், அச்செயல், நேர்மறை மாற்றத்தை தோற்று விக்கிறது. தாராள மனம் கொண்டு வழங்கி வாழும் செய் முறை பெறுபவர்களின் மனத்தில்

குதூகலம் துளிர்க்கிறது. சமுதாயத்தில் ஒற்றுமை உணர்வு மேலிடுகிறது.

திருமறையும், திரு நபிமொழிகளும், இஸ்லாமிய வரலாறும், தாராளம், பரிவு இரக்கம், ஆதரவு ஆகியவற்றை வலியுறுத்தி, மனிதர் களிடையே, நேசத்தையும், நெருக்கத்தையும் தோற்று விக்கின்றன. அமைதியான வாழ்வை பரிணமிக்கச் செய் கின்றன. வழங்கி வாழ்வதன் மூலம், மனிதர்களின் வாழ்வில் மிகப் பெரிய மாற்றங்கள் உருவாகக் காணலாம். அதுவே நனி சிறந்த நல்வழியாகும்.

## துணை நூற்கள் :


1. சங்கைமிகு குர்ஆன் - சிறப்புமிகு தமிழாக்கம்- அல்லாமா. ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி (ரஹ்) ஹள்ரத் அவர்கள். தாருல் ஹுதா வெளியீடு, மண்ணடி, சென்னை-1
2. திருக்குர்ஆன் விரிவுரை- தஃப்சீர் இப்னு கஸீர், பாகம் 10, வெளியீடு,-ரஹ்மத் பதிப்பகம். சி.ஐ.டி காலனி, மைலாப்பூர். சென்னை-4
3. தஜ்ரீதுல் ஜாமிஇஸ் ஸஹீ ஹுல் புகாரி - அல்லாமா எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதர் பாகவி (ரஹ்) ஹள்ரத் அவர்கள். முதற் பாகம், வெளியீடு : உத்தம நூலகம், உத்தமபாளையம். தேனி மாவட்டம்.
4. அர்ரஹீக்அல்மக்தூம்-இறைத் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு. அரபியில்-அல்லாமா அஷ்ஷைக் ஸஃபிய்யுர் ரஹ்மான் முபாரக் பூரி (ரஹ்) ஹள்ரத் அவர்கள். தமிழில்- முஃப்தீ உமர் ஷரீஃப் காஸிமி ஹள்ரத் அவர்கள். தாருல் ஹுதா வெளியீடு, மண்ணடி, சென்னை-1
5. 1. அல்ஹதீஸ், பெருமானா ரின் பொன்மொழிப் பேழை - 1, 2, 3 பாகம்.
   2. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்).
   3. இஸ்லாமியக் கலை களஞ்சியம் 2,3 பாகம் அல்லாமா மு.ற.மு அப்துற் றஹீம் (ரஹ்) அவர்கள். வெளியீடு - யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 2/3, வடக்கு உஸ்மான் சாலை, தியாக ராய நகர், சென்னை-17.
6. The Transformative Power of Generosity : Lessons from Islamic History - Dr. M.IQBAL Siddiqui, Radiance views weekly 9 - 15 June 2024, d-307, Dahwat Nagar, Jamia Nagar, New Delhi-25.
7. The Physiological Basis of Thurst - James T. Fitzimons, The Physiological Laboratory London, England – Internet.

# வரலாற்றில் ஓர் ஏடு

**“மர்யம் இருந்த மாடத்திற்குள் ஸகரிய்யா நுழைந்த போதெல்லாம், அவருக்கருகில் ஏதேனும் உணவுப் பொருள் இருப்பதைக் கண்டு “மர்யமே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?” என்று கேட்டார். அதற்கு அவர், “இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. அல்லாஹ், தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான்” என்று கூறினார்.”** - அல்குர்ஆன் ( 3 : 37)

வரலாற்றில் ஒரு நாள் :

பல நாட்கள் பசியுடன் இருந்ததால் நபி (ஸல்) அவர்கள் தம் மகள் ஹள்ரத் ஃபாத்திமா (ரளி) அவர்களிடம் வந்து “சாப்பிட உன்னிடம் உணவு இருக்கிறதா?” என்று கேட்டார்கள். “அல்லாஹ்வின் மீது சத்தியமாக எதுவுமில்லை” என்று கூற, நபி (ஸல்) அவர்கள் திரும்பி விட்டார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஹள்ரத் ஃபாத்திமா (ரளி) அவர்களுக்கு பக்கத்து வீட்டுப் பெண்மணி இரு ரொட்டிகள், சில இறைச்சித் துண்டுகளைக் கொடுத்தனுப்பினார். ஹள்ரத் ஃபாத்திமா (ரளி) அவர்கள் அவற்றை ஒரு பாத்திரத்தில் வைத்தார்கள். பின்னர் ஹசன் அல்லது ஹுசைன் (ரளி) அவர்களை அனுப்பி நபி (ஸல்) அவர்களை வரச் செய்தார்கள். அப்போது, ஹள்ரத் ஃபாத்திமா (ரளி) அவர்கள் “அல்லாஹ் சிறிதளவு உணவு கொடுத்துள்ளான்” என்று சொன்னார்கள். நபி (ஸல்) அவர்களிடம் உணவைக் கொண்டு வரும்போது, தட்டு நிறைய ரொட்டியும், இறைச்சியும் இருந்ததைக் கண்டார்கள். அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவனுடைய நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொன்னார்கள். தம் முன் உணவை வைத்தபோது, அல்லாஹ்வைப் புகழ்ந்து விட்டு, “மகளே! இது எங்கிருந்து உனக்குக் கிடைத்தது?” என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், “இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. அல்லாஹ் தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான்” என்றார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து விட்டு, “உன்னை இஸ்ரவேலப் பெண்களுக்குத் தலைவி(யான மர்யமைப்) போன்று ஆக்கிய அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்” என்றார்கள்.

ஆதாரம் : தஃப்ஸீர் இப்னு கஸீர் பாகம் 2/பக்கம் 62 & 63

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# இறைநெறியை ஏற்பீர் ஈடேற்றம் அடைவீர்!

கம்பம் மவ்லானா
பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்

அண்ணல் நபி (ஸல்) அவர்களோ அகிலமனைத்திற்கும் இறைவனின் திருத்தூதராக வந்தவர்கள்; எல்லா மனிதர்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் ஏற்றதொரு வழிகாட்டலைத் தந்தவர்கள். மதீனாவிலும் அதன் சுற்றுப்புறங்கள், கிராமங்களிலும் இறைநெறி அழைப்புப்பணி செய்ய அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்த அண்ணலார் (ஸல்) அவர்கள், எல்லை கடந்து பிற நாடுகளுக்கும் அதை எட்டச் செய்யும் முயற்சியில் இறங்கினார்கள்.

இஸ்லாம் உலகளாவிய அளவில் எனும் நிலை உருவானது. அவ்வாறு பரந்த அளவில் அழைப்புக் கொடுப்பது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீதிருந்த கட்டாயக் கடமையாக, தூதுத்துவப் பொறுப்பின் வெளிப்பாடாக இருந்தது. எனவே, நபி (ஸல்) அவர்கள் “தோழர்களே! எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது நெறியாம் இஸ்லாத்தை நமக்குத் தந்து நம் மீது பேரருள் புரிந்திருக்கின்றான். அதன் அறிவார்ந்த ஒளியில் நாம் நல்வழி பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அறியாமையில் மூழ்கி, கற்பனையில் சிக்கி உழன்று இருண்ட வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் பெரிய மனிதர்களுக்கும் இந்த ஒளி பாய்ச்சப்பட வேண்டும். அவர்களும் உண்மை இறைநெறியில் வர வேண்டும்” என்றார்கள்.

ஒரு வெற்றி விழாவில் பங்கேற்பதற்காக ரோமாபுரி மன்னர் ஷாம் (சிரியா) வந்திருந்தார். அவரிடம் நேரடியாக இறைநெறி அழைப்பைச் சேர்ப்பதற்காக திஹ்யதுல்கல்பி எனும் தோழரின் தலைமையில் ஒரு குழுவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். “இறைநெறியை ஏற்பீர்! ஈருலகிலும் வெற்றியடைவீர்!” என்பதுவே மடலின் உள்ளடக்கமாக இருந்தது. உண்மையில் இறைநெறிதான் நிரந்தர வெற்றியைத் தரும். காரணம் மனிதர் வாழும் வாழ்வு இறை தந்த வாழ்வாகும். வாழ்க்கையில் எவ்வாறு வாழ வேண்டும்? என்பதற்கான வழிகாட்டுதல்

தான் இறைவன் வழங்கிய இஸ்லாம் எனும் இறைநெறி.

உண்மைகளைச் சொல்லத் தயங்கக்கூடாது. நன்மைகளை எடுத்துக்காட்ட நாணக்கூடாது. வெறுமனே சந்தர்ப்ப சூழ்நிலை எனக்காரணம்காட்டி பூசிமெழுகி நடித்துப் பசப்பி பாவனை செய்து கொண்டு, காலத்தைக் கழித்தால் உண்மைகள் சொல்லப் படாமலேயே போய் விடும். மனிதர்கள் உண்மைகளை உணர முடியாமலேயே போவார்கள். அறியாமை, மடமை இருள்களை அகற்ற முடியாமல் நிரந்தரமாக மூடிக் கொண்டு விடும். சிந்தனை - பகுத்தறிவு - மெய்ப்பொருள் காணல் என்பவையெல்லாம் கனவாகிப் போகும். "கசப்பாக இருப்பினும் உண்மையைச் சொல்" என்பது உத்தமத் திரு நபி (ஸல்) அவர்களின் கண்டிப்பான உத்தரவு. உண்மையை உண்மையாகவே சொல்ல வேண்டும். மனிதன் அவசரக்காரன். எதையும் நிதானமாக நின்று அமைதியாகச் சிந்திக்க மாட்டான். எடுத்ததெற்கெல்லாம் உணர்ச்சிவசப்படுவதும், ஆத்திரப்பட்டு வெறித்தனமாய் மாறிவிடுவதும் மனிதர்களில் பெரும்பாலோரின் இயல்புகள்.

மனிதர்களிடம் எப்படியாவது உண்மையைச் சொல்லி விட வேண்டும். கேட்பதும் - கேட்காததும், ஏற்பதும் - ஏற்காததும் அவரவர்களின் விருப்பம், உரிமை. தவறுகள் சுட்டிக் காட்டப்பட வேண்டும். தீமைகள் தடுக்கப்பட வேண்டும். நன்மைகள் விதைக்கப்பட வேண்டும். உண்மைகள் சொல்லப்பட வேண்டும். அறிவார்ந்த மனிதர்கள் இதைச் செய்ய வேண்டும்.

பரந்து விரிந்த வல்லரசாம் ரோமப்பேரரசின் சக்தி வாய்ந்த சக்கரவர்த்தியிடம் இறைநெறி அழைப்புக் கொடுக்கப் புறப்பட்டனர் அந்தப் பெருமக்கள். மாமன்னன் கெய்ஸர் (ரோமபுரி மன்னர்கள் இந்தப் பொதுப் பெயரிட்டுத்தான் அழைக்கப் பட்டனர். எகிப்திய மன்னர்கள் ஃபிர்அவ்ன் என்று அழைக்கப் பட்டதுபோல. அன்றைய சோவியத் மன்னர்கள் ஜார்ஜ் என அழைக்கப்பட்டது போல்) மரியாதையுடன் மடலைப் பெற்றுக் கொண்டார்.

உண்மைகள் சொல்லப்படுவதை நியாயமாகச் சிந்திக்கும் - நடுநிலையுடன் செயல்படும் எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்; எதிர்க்கமாட்டார்கள். ஏனெனில், உண்மைக்கு எதிராக முரணாக பேசவும், எழுதவும், செயல்படவும் உரிமையும் சுதந்திரமும் இருக்கும்போது உண்மை சொல்லப்பட நிச்சயம் உரிமை இருக்கிறது. விரும்பினால் ஏற்கலாம். விரும்பாவிட்டால் விட்டு

விடலாம். மனிதனுக்கு சுய அறிவு, சுய தேர்வு தரப்பட்டுள்ளது. மறுமையே தீர்ப்புச் சொல்லும்.

மடலைப் படிக்கச் செய்தார் மாமன்னர்.

"அருளும் அன்பும் நிறை எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால்... இறைவனின் அடியாரும், அவனது தூதரு மாகிய முஹம்மத் (ஸல்) அவர் களிடமிருந்து ரோமப் பேரரசர் ஹெராக்லியஸ் அவர்களுக்கு...

உண்மை நேர்வழியை ஏற்றுப் பின்பற்றுவோருக்கு ஈடேற்றம் கிடைக்கட்டும். இறைநெறியாம் இஸ்லாத்தை உளப்பூர்வமாக ஏற்றுத் தழுவு மாறு உம்மை நாம் அழைக்கின் றோம். நீர் இஸ்லாத்தை ஏற்பீர்! இனிதாக வாழ்வீர்! இதனால் இறைவன் உமக்கு இரட்டைக் கூலியை வழங்குவான். இந்த உண்மையை நீர் ஏற்கவில்லை யாயின் உம்நாட்டு மக்கள் அனை வரின் பாவமும் உம்மையே சாரும்! இறைவனால் வேதம் வழங்கப்பட்டவர்கள் நீங்கள். உங்களுக்கும் எமக்கும் உடன்பாடாயிருக்கும் ஒரு உண்மையின் பக்கம் வாருங்கள்.

"எல்லாம் வல்ல இறைவனாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் எதையும் வணங்கக்கூடாது என்பதும், அந்த ஒப்புவமை இல்லாத ஏக இறைவனுக்கு எவரையும் எதையும் இணையாக்கக் கூடாது என்பதும் அல்லாஹ் வைத் தவிர வேறெவரையும் எதையும் இறைவனாகக் கருதக் கூடாது என்பதும் நமக்குள் இருக்கும் ஒற்றுமையான விஷய மாகும். மறுக்க முடியாத இந்தப் பேருண்மையை நீங்கள் ஏற்காது புறக்கணித்தால், அத னால் உங்களுக்குத்தான் பேரிழப்பே தவிர, எல்லாம் வல்ல இறைவனாம் அல்லாஹ்விற்கோ, அவனது மார்க்கமாம் இஸ்லாத் திற்கோ எவ்வித இழப்பும் இல்லை. ஆனால் நாங்கள் அவனது நெறியில் வாழும் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சான்றாக இருங்கள்."

அண்ணல் நபி (ஸல்) அவர் கள் மடலின் அடியில் "இறை வனின் தூதர் முஹம்மத்" என முத்திரை பதிக்கப்பட்டிருந்தது. மடல் படிக்கப்பட்டதும் அவை யில் அமைதி நிலவியது. அமைச்சர்களும், அதிகாரி களும், சிறப்புப் பிரமுகர்களும், மதகுருமார்களும் அங்கு வீற்றி ருந்தனர். அனைவரின் சிந்தனை யும் மடலின் செய்திகளில் படிந் திருந்தது. சிலர் மடலுக்கு எதி ராகவும், சிந்திக்கத் துவங்கினர். எங்கே மாமன்னரை இம்மடலின் செய்தி ஈர்த்திடுமோ, அவர் மனம் மாறி மதம் மாறி விடுவாரோ என்றும் எண்ண ஆரம்பித்தனர் சில சுயநல மதவாதிகள்.

மன்னர் மிகவும் நிதான மானவர். எதையும் அமைதி யாக ஆற அமர சிந்திக்கும் அறிவார்ந்த பண்பாளர். அங்கு நிலவிய நிலைமையை நன்கு புரிந்து கொண்டார். “அமைச்சர் களே! ஒரு மாமனிதர் தன்னை இறைவனின் தூதர் என்று கூறி அந்த இறைவனது நெறியின் பக்கம் நம்மை அழைத்துள்ளார். ஈஸாவுக்கு வேதத்தை அருளிய இறைவன் தமக்கும் வேதத்தை அருளியதாகக் கூறியுள்ளார். அவர் மக்காவைச் சார்ந்தவர். நமது இந்த ஷாம் நாட்டிற்கு மக்கத்து வணிகர்கள் பன்னெடுங்காலமாக வியாபாரத் திற்காக வந்து சென்று கொண்டி ருக்கின்றனர். அந்தவணிகக்குழு வினர் வந்திருந்தால் அவர் களை இங்கு அழைத்து வாருங் கள். இந்த இறைத்தூதர் பற்றிய பின்னணி, அவரது இயல்பு களைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம். மற்றவற்றை பின்னர் முடிவு செய்வோம்” என்று உத்தரவிட்டார்.

## மாமன்னர் முன் மக்கத்துத் தலைவர்

இறைவனின் நெறியை இதயப்பூர்வமாகஏற்று நடப்பதில் தான் ஈடேற்றம் உள்ளது என்ற உண்மை, மடல்வழி மன்னர் ஹெறாக்லியஸுக்கு உணர்த்தப் பட்டது. மடலை மரியாதை யுடன் பெற்றுப் படித்திட்ட மாமன்னர், மடல் அனுப்பியவரைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள ஆர்வம் கொண்டார். இந்த ஷாம் (சிரியா) சந்தைக்கு அரபு நிலத்திலிருந்து வர்த்தகர்கள் வந்து போவது நெடுங் காலத்திய பாரம்பரியமாயிற்றே. மக்கா - மதீனா அதன் சுற்றுப் பகுதிகளிலிருந்து எவராவது இங்கு வந்திருந் தால் உடனே அவர்களை அழைத்து வாருங் கள் என காவலர்களுக்குக் கட்டளை யிட்டார் மன்னர்.

அரசகட்டளையை ஏற்ற வீரர் கள் விரைந்தனர். துருவித் துருவித் தேடினர். காஸா பகுதி யிலிருந்து மக்கத்து வர்த்தகக் குழு ஒன்றைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தனர். அக் குழுவுக்கு மக்கத்துத் தலைவர் அபூஸுஃப்யான் அமீராக (தலைவர்) வந்திருந்தார்.

“உங்களில் நன்கு விபரம் தெரிந்த தெளிவான ஒருவர் முன் வரட்டும் என்றார் மன்னர். அபூசுஃப்யான் அரசர் முன் வந்து நின்றார். “மக்காவின் வணிகர் களே! இவரிடம் சில விளக்கங் களைக் கேட்கப் போகிறேன். இவரிடம் உண்மையை எதிர் பார்க்கிறேன். இவர் கூறும் தகவல் உண்மைக்கு மாறாக இருப்பின் உடனே நீங்கள் இவர் கூறுவது பொய் எனத் தெரிவிக்க வேண்டும். எவராவது உண்மைக்கு எதிரான தகவல் கூறியது தெரிய வந்தால் அவரை

நான் தண்டிக்கவும் தயங்க மாட்டேன்" மன்னர் எச்சரித்துக் கொண்டார். உண்மையை நன்கு தெரிந்து கொள்ள மன்னருக்கிருந்த ஆர்வத்தை இது புலப்படுத்தியது.

மக்காவைச் சார்ந்த முஹம்மத் எனும் பெயர் கொண்ட ஒரு மாமனிதர் தன்னை "இறைவனின் தூதர் எனச் சொல்லி மாபெரும் அறிவுப்புரட்சி செய்து மகத்தான நல்ல மாற்றங்களை உண் டாக்கிக் கொண்டிருக்கின்றா ராமே. அவரைப் பற்றித்தான் உம்மிடம் வினவப் போகின் றேன்" என்றார் மன்னர்.

அரபுத் தலைவர் அபூ ஸுஃப்யான் அதிர்ந்து விட்டார். ஆனால் வெளிக் காட்டவில்லை.

"மன்னர் மன்னவா! அவரைப் பற்றியா எம்மிடம் கேட்கப் போகின்றீர்கள்? நாம் அஞ்சுமளவுக்கு அவரொன்றும் முக்கியத்துவம் வாய்ந்தவரோ மகத்தான வலிமை வாய்ந்தவரோ அல்லர்" என்றார் அபூஸுஃப்யான். முஹம்மதின் செல்வாக்கும், அறிமுகமும் மாமன்னர் வரை எட்டிவிட்டதே என மனதிற்குள் நினைத்துக் கொண்டார் அந்த அரசியல் சாணக்கியர்.

"அவர் பற்றி நீர் எதுவும் கூற வேண்டாம். நான் கேட்ப தற்கு மட்டும் நீர் பதில் கூறி னால் போதும்" என்றார் மன்னர். ஆகட்டும் எனக் கூறி, அபூஸுஃப்யான் தலையை வலமும் - இடமும் பலமாக ஆட்டினார் அடக்கமாக.

"இறைத்தூதர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் அவரது பாரம்பரியமும், வம்சா வழியும் எத்தகையது?" மன்னர் வினவினார். அரபு நிலத்திலேயே மிகவும் சிறந்த குறைஷிகுலம் அவரது குலம். பனூ ஹாஷிம் கிளையைச் சார்ந்தவர்" என அபூஸுஃப்யான் கூறினார்.

"அவரது குடும்பத்தைச் சார்ந்த வேறெவரும் இதற்கு முன்னர் தம்மை இறைத் தூதர் எனச் சொல்லியிருக் கின்றார்களா?"

"அப்படி எதுவும் இல்லை. வேறெவரும் நபியென்று உரிமை கொண்டாடியதும் இல்லை"

"தலைமைத்துவம், அரசப் பதவி எதனையும் இழந்து அதற் காக இப்படி வேறு வழியில்லா மல் கூறிக் கொண்டிருக் கின்றாரா?" மன்னரின் வினா.

"அப்படி எதுவும் இல்லை. அவ்வாறு நாங்கள் எண்ணவும் இல்லை" அபூஸுஃப்யான் சொன்னார்.

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

“பெரும்பாலும் அவரைப் பின்பற்றி ஏற்றுக் கொண்டவர்கள் யார்? சாமானிய ஏழைகளா? பெரும் தனக்காரர்களான செல்வாக்குமிக்க பெரிய மனிதர்களா?” மன்னர் கேட்டார்.

“சாதாரண ஏழை எளியோர், அடிமைகள் - செல்வாக்கில்லாத சாமானியர்கள், பெண்கள் இப்படி சிலர் அவரை ஏற்றுப் பின்பற்றுகின்றனர்.”

“அவர் கூறும் இறை நெறியை ஏற்றதன் பின்னர் அதை விட்டும் எவரேனும் துறந்து வெளியேறியுள்ளனரா?”

“இல்லை. அப்படி எதுவுமே இல்லை. அவரது மார்க்கத்தை ஏற்றோர் அதை வலுவாகப் பற்றி அதை தமது வாழ்வாகவே ஆக்கிக் கொண்டு வருகின்றனர். கொள்கைப் பிடிப்புப் பற்றுடன் வாழ்கின்றனர்.”

“அவர் கடின சித்தமுள்ள கொடூரமானவரா?” மன்னர் கேட்டார்.

“இல்லை. இல்லவே இல்லை. மிகவும் மென்மையானவர். அமைதி, சாந்தி, மனித நேயத்தை விரும்புபவராகவே தெரிகின்றது.”

“அவர் எப்போதாவது பொய் பேசியிருக்கின்றாரா?” மன்னரின் வினா.

“இல்லை. அவரை அன்று முதல் இன்று வரை பார்த்துவருகின்றோம். ஒருபோதும் அவர் பொய் சொன்னதே இல்லை” அபூஸுஃப்யான் சொன்னார்.

அனைத்து விபரங்களையும் சொல்லக் கேட்ட மன்னரின் முகத்தில் ஒளி ரேகை படர்ந்தது. புன்னகைப் பூக்கள் பூத்தன. இதழ்கள் மலர்ந்தன.

“நீர் கூறியனவற்றைக் கேட்டேன். இவையாவும் உண்மையாக இருப்பின், உள்ளவாறே அவர் ஏக இறைவனின் தூதர் தான். இறைத் தூதருக்கான அனைத்துப் பண்புகளையும், அடையாளங்களையும் அவரில் காண்கிறேன். அந்தப் புனிதர் எம்மை வெற்றி கொள்வார். அவரை மதித்துப் போற்றுகிறேன். அவரது பாதங்களைக் கழுவுவதைப் புனிதமாகக் கருதுகின்றேன்” எனப் பெருமிதத்துடன் மாமன்னர் ஹெராக்லியஸ் மனம் திறந்து பேசினார். அவர்களை வணிகத்தைக் கவனிக்குமாறு அனுப்பி வைத்தார். முகம் தொங்கியவர்களாக சோக ரேகை படர மக்கத்து அரபுகள் வெளியேறினர். மற்றவர் என்னைப் பொய்யன் என்று சொல்லி விடுவார்களோ என்ற அச்சம் மட்டும் எனக்கில்லாதிருந்தால் மாமன்னரிடம் வேறு விதமாக பதிலளித்திருப்பேன் என்று பின்னர் கூறினார் அபூஸுஃப்யான்.

(தொடரும்)

# எங்களின் நெஞ்சார்ந்த நன்றிகள்...!

அல்லாஹ்வின் பேரருளால் கடந்த 67 ஆண்டுகளில் "குர்ஆனின் குரல்" மாத இதழின் வளர்ச்சியில் பங்கு கொண்டிருந்த நூற்றுக் கணக்கான எங்கள் அருமை விற்பனையாளர்களுக்கும், தங்கள் நிறுவனங்களை விளம்பரங்களின் மூலமாக குர்ஆனின் குரலை மெருகூட்டிக் கொண்டிருந்த அருமை விளம்பரதாரர்களுக்கும் இந்த நல்ல நேரத்தில் எங்களின் நெஞ்சார்ந்த நன்றிகளையும், துஆகளையும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். அல்ஹம்து லில்லாஹ்!

குர்ஆனின் குரலில் இன்னும் பல வளர்ச்சிகள் வர வேண்டும் என விரும்பும் அன்பான வாசக நேயர்களே! நம் இஸ்லாமிய சமுதாயத்தில் "மார்க்கம் என்றால் என்ன?" என்றே தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் பல்லாயிரம் பேர்களுக்கு இந்த குர்ஆனின் குரலின் மூலமாக மார்க்கத்தை எடுத்துச் சொல்வதற்கு ஒரு சிலர் கூட தயாராக இல்லையா?

## வாருங்கள்....!

**ஒவ்வொருவரின் மூலமாகவும் குறைந்தபட்சம் 10 - 10 இதழ்களையாவது ஏஜன்ஸீ அல்லது சந்தா என்ற முறையில் வாங்கி மக்களுக்கு பயன்தர**

## விரைந்து முன் வாருங்கள்!

**அத்துடன் உங்களின் மேலான நிறுவனங்களின் விளம்பரங்களை குர்ஆனின் குரலில் வெளிவரச் செய்து, அதன் மூலம் குர்ஆனின் குரலுக்கு பேராதரவு தாருங்கள்.**

## முயற்சி செய்யுங்கள்!
## முயற்சி செய்யுங்கள்!!

**விரைவில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் :**

**குர்ஆனின் குரல் ஊழியர்கள், மதுரை.**

தொடர்புக்கு : 9486729192, 9486729191

# மார்க்கக் கலாசாலையின் கட்டடம் உருவாக நிதியுதவி செய்யுங்கள்!

"அஸ்அதுல்மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்ட "அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" அரபு கல்லூரி தென் தமிழகத்தின் மார்க்கக் கலாசாலையின் மணி மகுடமாக திகழ்ந்து, கடந்த 40 வருடங்களாக மார்க்கக் கல்வி சேவையில் தனி முத்திரை பதித்து வருகிறது. நம் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆலிம்களும், ஹாஃபிழ் களும் உலகெங்கும் பரவி தீன் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், இறையருளால் நம் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை துவங்கியுள்ளோம். நம் கல்லூரி கட்டடம் முழுமை பெற **சுமார் 4½ கோடி செலவாகும்** என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. எனவே, தீன் பயிர் தழைத்தோங்க ஆணிவேராக உள்ள நம் கல்லூரியின் கட்டடம் நிறைவுபெற தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். கல்லூரிக்கு பணமாகவோ அல்லது கல்லூரி கட்டடத்திற்கு தேவையான கம்பி, ஜல்லி, மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றையோ தாராளமாக வழங்க வேண்டுகிறோம்.

**வங்கி விபரம் :**

**Name: AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST**

**INDIAN BANK : A/c. No. 429079510**

**BRANCH : Madurai KARUPPAYURANI**

**IFSC Code : IDIB000K136**

பணம் அனுப்பிய விபரத்தை கீழ்வரும் செல் நம்பருக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் அனுப்பி வையுங்கள்.

# J.M.S.ARABIC COLLEGE

**Jaamiyaa Nagar, Sivagangai Highway Road, MADURAI - 625020.**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 94430 66539 | 97900 64365 | 99948 57786 |


A Product of Seyadu Spinning Mills
Whites
As pure as it gets.
Seyad
Garments
SHIRTS
PREMIUM COTTON
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003. PH.: 0462 2323086
SCM

## மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோருக்காக)

## பார்வையற்றோர் மதரஸா மற்றும் பள்ளிவாசல் கட்டுமானத்திற்கு உதவுங்கள்

மதரஸா–யே–இம்தாதியா (பார்வையற்றோருக்காக, மேல்விஷாரத்தில் கடந்த 15 ஆண்டுகளாக பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவ, மாணவிகள் மார்க்கக் கல்வியுடன் உலகக் கல்வியும் பயின்று வருகின்றனர். இதுவரை 130 மாணவ, மாணவிகள் திருக்குர்ஆனை மனனம் செய்து முடித்துள்ளனர். மற்றும் 22 மாணவர்கள் ஆலிம்களாகப் பட்டம் பெற்றுள்ளனர்.

மதரஸா ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை மதரஸாவிற்காக சொந்த இடம் எதுவும் இல்லை. தற்போது நல்லுள்ளம் கொண்ட ஒருவர் தனது பெரும் மதிப்புமிக்க இடத்தை மதரஸாவிற்காக நன்கொடையாக வழங்கியுள்ளார். ஆனால், இந்த கட்டிடம் மிகவும் பழமையானது மற்றும் கூரையினால் (ஷீட்டினால்) ஆனது. எனவே, மாணவர்கள் கோடை, குளிர் மற்றும் மழைக்காலங்களில் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இன்ஷா அல்லாஹ், இந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டவும், மேலும் இதற்கு சுமார் 92 லட்சம் ரூபாய் செலவாகும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவது என்பது "ஸதகத்துல் ஜாரியா" அதாவது என்றென்றும் நன்மை தரக் கூடிய ஸதகா ஆகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எவர் ஒருவர் பள்ளிவாசலை கட்டுகிறாரோ, அவருக்கு அல்லாஹ் சுவனத்தில் ஒரு மாளிகையை கட்டுகிறான்."

எனவே, தாங்கள் அனைவரும், சுவனத்தில் மாளிகையைப் பெறும் நோக்கில், தங்களுக்காகவும், மறைந்த தங்கள் முன்னோர்களின் நன்மைக்காகவும் பள்ளிவாசல் மற்றும் மதரஸாவின் கட்டுமான பணிக்காக குறைந்தது 1,000 ரூபாய் நன்கொடை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (அதிகமாகக் கொடுக்க விரும்பினாலும் கொடுக்கலாம்). தங்கள் நண்பர்களையும் இந்நற்செயலில் பங்கெடுத்துக்கொள்ள ஊக்குவிக்கவும். மேலும் மதரஸாவின் வங்கி விவரங்கள் மற்றும் **QR CODE** மூலமாகவும் தங்களின் பங்களிப்பை அளிக்கலாம்.

**குறிப்பு**

★ கட்டுமானப் பொருட்களாகவும் தங்களின் பங்களிப்பை அளிக்கலாம்.
★ கட்டுமானப் பணிக்காக ஜகாத் தொகையை செலுத்த வேண்டாம்.

**9200 x Rs.1000 = 92,00,000/-**

**Cost around Rs.92,09,000/-**

### BANK DETAILS

**Name : Imdadiya Educational and Charitable Trust**
**A/C No : 6288904753**
**IFSC : IDIBO00M139**
**Branch : Melvisharam 1312**

इंडियन बैंक Indian Bank
UPI ID : imdadiya@indianbnk

**SCAN AND PAY**

BHIM UPI

+91-9952120340
539, Anna Salai, Melvisharam

# மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோருக்காக)

எண். 539, அண்ணா சாலை, மேல்விஷாரம் – 632509

அல்ஹம்துலில்லாஹ்! 2010–ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது நாழிரா, ஹிஃப்ழு, ஜூம்ரா மற்றும் கிராஅத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

மதரஸாவில் 100 மாணவர்கள் (ம) 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்) இதுவரை சுமார் 31 மாணவர்கள் 10–ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டப்படிப்பு முடித்துள்ளனர்.

ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில் சுமார் 1,000 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2,000/– செலவாகிறது. மதரஸாவில் 20 ஆசிரியர்கள் மற்றும் 11 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம் அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றன.

| பிரிவுகள் | பார்வையற்ற மாணவர்கள் | பார்வையுள்ள மாணவர்கள் | மொத்த மாணவர்கள் |
|---|---|---|---|
| நாழிரா | 10 | 18 | 28 |
| ஹிஃப்ழு | 17 | 22 | 39 |
| ஜூம்ரா | 10 | 18 | 28 |
| கிராஅத் | 03 | 02 | 05 |
| மக்தப் | - | 20 | 20 |
| மொத்தம் | 40 | 80 | 120 |

| செலவினங்கள் | |
|---|---|
| ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,500 |
| நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 6,60,000 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 66,000 |
| நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 79,20,000 |
| மதரஸாவின் கடன் | 10,00,000 |
| மதரஸாவின் கட்டுமான செலவு | 92,09,000 |

BHIM UPI — SCAN AND PAY

## *Bank Details*

**Name** : Imdadiya Educational and Charitable Trust

**A/C No** : 35612371063

**IFSC** : SBIN0003783

**Branch** : Melvisharam

SBI

UPI ID : imdadiyaeducationalct@sbi

+91-9952120340 539, Anna Salai, Melvisharam - 632509

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"


AL HUSSAM

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

Specialist in: Haj & Umrah

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
**(31 - 33 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
**(18 - 21 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,
**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

**"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."**

**- நபி (ஸல்) அவர்கள்**

(நூல் : திர்மிதீ)


**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

**சீமாட்டி**

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் – 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# பெருமையை விட்டொழிப்போம்!

لافضل لعربي علي عجمي ولا عجمي علي عربي ولا
اسود علي احمر ولا احمر على اسود الا بالتقوى رواه أحمد.

“நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்கிறார்கள் : “ஓர் அரபியருக்கு அரபி அல்லாதவரை விடவும், ஓர் அரபியல்லாதவருக்கு அரபியரை விடவும், ஒரு கருப்பருக்கு சிவப்பரை விடவும், ஒரு சிவப்பருக்கு கருப்பரை விடவும் இறை யச்சத்தைத் தவிர வேறு எந்த சிறப்பும் இல்லை.” (நூல் : அஹ்மத்)


சிறப்பான வழிகாட்டுதலோடு எந்தப் பெருமையுமின்றி
68ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும்
குர்ஆனின் குரல் இன்னும் பல அறுபதுகளை
கடக்க வாழ்த்தி துஆ செய்கிறோம் !

செய்யது சகோதரர்கள்

நாகூர்.

# மூன்று மாதங்களில் முத்தான முப்பெரும் அறிஞர்களை இழந்து விட்டோமே!

மவ்லானா மவ்லவீ முஃப்தீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ ஃபாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

"ஓர் ஆலிமின் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும், நிறைவு செய்ய முடியாத குறையாகும். அவர் தம் மரணத்தின் காரணமாக ஒளியிழந்த நட்சத்திரமாக ஆகிவிடுகிறார். ஓர் ஆலிமுடைய மரணத்தைவிட ஒரு கோத்திரத்தார் அனைவரின் மரணம் மிகச் சாதாரணமானது!'' என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல் : பைஹகீ)

அந்த வகையில் விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில் பிறந்து, "குர்ஆனின் குரல்" நிறுவனர் அல்லாமா அ.மு.அப்துல் ஜப்பார் ஹள்ரத் (ரஹ்) அவர்களின் வழிகாட்டுதலின்படி, மதரஸாவிற்கு ஓதச் சென்று "ரஹ்மானீ" என்ற பட்டத்தோடு வெளியில் வந்து, மதுரை செல்லூர் ஷாஃபீ பள்ளிவாசலில் நீண்ட காலம் இமாமாகவும், மற்ற பள்ளிவாசல்களில் இமாமாகவும் சிற்சில காலங்கள் பணியாற்றிவிட்டு, தனக்கு ஓய்வு தேவை என்று கருதியபோது, இமாமத் பணிகளிலிருந்து சற்று விலகி ஓய்வெடுத்துக் கொள்ள நினைத்தார்கள். ஆனால், மதுரை மாநகர இமாம்களின் "செல்லப் பிள்ளை" போன்று மிக எளிமையான நடையோடு, மிகச் சாதாரண உடையோடு, இமாம்கள் விட்டுச் செல்கின்ற இடை நேரத் தொழுகைகளை தொழ வைத்துக் கொண்டு, அந்த இமாம்களுக்கும் உதவி செய்து, தனக்கும் நன்மையை சம்பாதித்துக் கொண்டவர் மதுரை மாவட்டத்தின் வயது முதிர்ந்த ஆலிம் பெருந்தகை **அல்லாமா இக்பால் சேட் ரஹ்மானீ ஹள்ரத் அவர்கள்!**

ஆரம்பத்தில் அன்றைய குர்ஆனிய்யா புக் டிப்போவிலிருந்தே அவர்களின் மதரஸாவின் பாடங்களுக்குத் தேவையான கிதாபுகளை எடுத்துக் கொடுத்து "போய் ஓதி விட்டு வா!" என்று சொல்லி அன்போடும், பாசத்தோடும் அனுப்பி வைத்தார்கள். மதரஸாவிற்கு சென்ற ஹள்ரத் அவர்கள் தன் கல்வியை முழுமை செய்து கொண்டு, முதுகுளத்தூர் மவ்லானா மர்ஹூம் உமர் ஜாஃபர் ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அன்பு மகளாரை திருமணம் முடித்து,

இந்த சமுதாயத்திற்கு சிறந்த சேவைகளை செய்துள்ளார்கள். யாரிடமும் வளவளவென்று பேச மாட்டார்கள். அதே சமயம், பார்க்கும்போதெல்லாம் புன்முறுவலோடு முகத்தை பளபளவென்றே வைத்திருப்பார்கள்.

தனது புதல்விகளில் ஒருவரை மதுரை டவுன் ஹால் ரோடு பள்ளிவாசலில் இமாமாக பணியாற்றிக் கொண்டிருக்கும் மவ்லானா மவ்லவீ முஹம்மது ரஃபீக் மிஸ்பாஹி ஹள்ரத் அவர்களுக்கு மணமுடித்து கொடுத்தார்கள்.

குடும்பம் முழுவதும் ஆலிம்களால் நிரம்பி வழிந்தது. மாமனாரும், மைத்துனரும், மருமகனாரும் ஆலிம்களாகவே வந்து சேர்ந்தனர். அப்படிப்பட்ட பெருமகனார் சென்ற 27.10.24 அன்று அல்லாஹ்வின் அழைப்பையேற்றுக் கொண்டு விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அதைத் தொடர்ந்து,

குர்ஆனின் குரல் நிறுவனர்களில் ஒருவரான "அஸ்அதுல் மில்லத்" மர்ஹூம் அ.மு.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் (ரஹ்) அவர்களின் உடன்பிறவா சகோதரராக இருந்து அன்னாருக்கு மதரஸாவிலும், அவர்கள் நடத்தி வந்த தொழில் நிறுவனங்களிலும் மிக்க உறுதுணையாக இருந்து, அவர்களின் பல்வேறு பயணங்களில் உற்ற தோழராக வலம் வந்து, இந்த சமுதாயத்திற்கு பல்வேறு வகையில் நிறைவான சேவைகளை வழங்கி, மதுரை மாவட்டத்தின் மூத்த ஆலிம் என்ற பெயரோடு உலா வந்து கொண்டிருந்தவர்தான் **மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் முஹம்மது இல்யாஸ் தாவூதி ஹள்ரத் அவர்கள்.**

அன்னாரின் குடும்பமும் முழுக்க முழுக்க சமுதாய ஊழியர்களால் நிறைந்திருந்தது. அன்னாரின் தந்தை தப்லீக் ஜமாஅத்துடைய வேலைகளில் தன்னை முழுமையாக தியாகம் செய்து கொண்ட "தேவிப்பட்டிணம் அமீர் சாஹிப்" என்ற பெயரோடு வாழ்ந்து மறைந்த தேவிப்பட்டிணம் அவுலியாவாக பெயர் பெற்ற மஹான்.

அவரின் உடன்பிறந்த மூத்த சகோதரர், தன் தந்தையின் வழியையொட்டி, தஃவத்துடைய வேலையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்து மறைந்த சிவகாசி மர்ஹூம் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் யூசுஃப் ஹள்ரத் (ரஹ்) அவர்களாவார்கள்.

அவர் தன் பிள்ளைக்கு எடுத்துக் கொண்ட மருமகனார் மதுரை கட்ராப்பாளையம் பள்ளிவாசலின் தலைமை இமாமாக

இருப்பதுடன், மதுரை மாவட்ட ஷரீஅத் பாதுகாப்பு பேரவையின் தலைவராகவும், மதுரை அவனியாபுரம் பகுதியில் துவக்கப்பட்டு, நடந்து வரும் தாருல் ஸலாம் அரபு கல்லூரியின் நிறுவனராகவும் மற்றும் பல்வேறு மார்க்கப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் வலம் வருகிற மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் சைய்யது அபூதாஹிர் காஷிஃபீ ஹள்ரத் அவர்கள்.

மேலும், ஹள்ரத் (ரஹ்) அவர்கள் மிகுந்த நெருக்கடிக்கு நடுவில் மதுரை மஹபூப்பாளையத்தில் துவக்கி வைத்த மதரஸா மஃதினுல் அதப் என்ற மார்க்க கலா சாலையை அன்னாரின் இரண்டு ஆண் பிள்ளைகளும் மிகவும் கவன மாகவும், நேர்த்தியாகவும் கொண்டு சென்று கொண்டிருக்கின்ற மவ்லானா மவ்லவீ அபூபக்கர் சித்தீக் மற்றும் மவ்லவீ முஹம்மது உமர் ஹள்ரத் ஆகியோர் ஆவார்கள்.

அன்னாரின் மைத்துனர்கள் இரண்டு பேரும் தலைசிறந்த ஆலிம்கள். ஒருவர் வேலூர் மதரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபு கல்லூரியில் பேராசிரியராகவும், மற்றொருவர் சென்னை தி.நகர் பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசலில் தலைமை இமாமாகவும் பணியாற்றி, இவ்வுலகை விட்டும் மறைந்த விட்ட மவ்லானா மவ்லவீ முஹம்மது இஸ்மாயீல் ஹள்ரத் (ரஹ்), மவ்லானா மவ்லவீ முஹம்மது இல்யாஸ் காஷிஃபீ ஹள்ரத் (ரஹ்) அவர்கள் ஆவார்கள்.

இப்படி குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் சுற்றிச் சுற்றி ஆலிம்களாகவும், சமுதாய சேவகர்களாகவும் பணியாற்றி வந்த நிலையில், அன்னாரின் இழப்பு மதுரை மாவட்ட மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் மிகுந்த பேரிழப்பாகும் என்பதை இந்த நேரத்தில் மிக்க வருத்தத்தோடு நினைவுபடுத்திக் கொள்கிறோம்.

அன்னார் கடந்த 26.11.24 அன்று நம்மை விட்டும் மறைந்து விட்ட செய்தி வேதனையான செய்தியாகும்.

இவ்வாறே, கடையநல்லூரில் பிறந்து, லால்பேட்டை மதரஸா மன்பஉல் அன்வாரில் தனது ஆரம்ப கல்விகளைக் கற்று, சங்கரன்பந்தல் பைஜுல் அன்வார் மதரஸாவில் ஸனது பெற்று, ஓதுகின்ற காலத்திலேயே உடுமலைப்பேட்டை பூர்வீக மஸ்ஜிதில் தராவீஹ் தொழ வைக்கக்கூடிய ஹாஃபிழாக நியமனம் பெற்று, ஓதி முடித்தவுடன் அதே பள்ளியில் நிரந்தர இமாமாக பதவி உயர்வு பெற்று, கடைசி வரை அந்த பள்ளிக்கு மட்டுமல்லாமல், அந்த ஊருக்கு மட்டுமல்லாமல், அந்த மாவட்டத்திற்கு மட்டுமல்லா

மல் கோவை, ஈரோடு, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் தன் சேவைகளை விரிவடையச் செய்து கடைசி வரை அதில் ஸ்திர மாக இருந்து பலமுறைகள் சாதனையாளர் விருதுகள் பெற்று வாழ்ந்து மறைந்த **மாமேதை மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் சைய்யது ஈஸா ஃபைஜி ஹள்ரத் அவர்கள்!**

மேற்கூறப்பட்ட மதுரை மாவட்டத்தின் இரண்டு ஆலிம்களை போன்றே ஹள்ரத் அவர்களும் குடும்பத்தின் உறுப்பினர்கள் எல்லோருமே ஆலிம்கள் என்று சொல்லும் அளவிற்கு ஆலிம்களால் சூழப்பட்ட ஒரு மாபெரும் சன்மார்க்க அறிஞராக உடுமலைப்பேட்டையில் சுமார் 55 ஆண்டுகளாக உலா வந்தவர்கள்.

எப்பொழுதும் எளிமையான நடையோடு இருப்பவர்கள். யார் எந்த கஷ்டத்தை சொன்னாலும் "அல்லாஹ் இலேசாக்கி வைப்பான்" என்ற துஆவோடு அவர்களை மன நிறைவடையச் செய்து அனுப்பி வைக்கும் பழக்கமுடையவர்கள்.

தன் மஹல்லாவை நோக்கி வரக்கூடிய ஆலிம்கள் வயது குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களை அன்போடு அரவணைத்து உபசரிக்கும் வழமையுடைவர்கள். தனக்கு வாழ்வின் எல்லாக் காலங்களிலும் உதவி செய்த சீதேவிகளை மிக்க நன்றியுணர்வோடு, நினைவுகூரும் பழக்கமுடையவர்கள்.

குர்ஆனின் குரல் காலஞ்சென்ற ஆசிரியர் "அஸ்அதுல் மில்லத்" அவர்களுடன் தாம் ஓதும் காலத்தில் ஒரு சில கிதாபுகளை ஹள்ரத் அவர்களிடமே ஓதி தர்பியத்தும் பெற்றிருப்பதாக மிகுந்த நன்றிப்பெருக்கோடு பலதடவை பகிர்ந்து கொண்டவர்கள்.

இவ்வாறே, தாம் இமாமத் பொறுப்பில் வந்ததற்குப் பிறகு, தனக்காக நடத்தப்பட்ட சாதனையாளர் விருது வழங்கும் விழா வில் பேசும்போது கூட, தன் பள்ளி நிர்வாகிகளை இவ்வளவு உயர்வாகவும், கண்ணியமாகவும், நன்றியுணர்வோடும் நினைவு கூர்ந்த சமுதாய ஊழியர்கள் யாரையும் நாம் பார்க்கவில்லை.

தன் காலத்தில் ஆரம்பத்திலிருந்து பொறுப்பிலிருந்து வந்த ஒவ்வொரு நிர்வாகியையும் மிக்க மகிழ்ச்சியோடு அந்த விழாவில் நினைவுகூர்ந்தது அங்கிருந்த அனைத்து மக்களையும் குறிப்பாக உலமாபெருமக்களையும் மிகவும் பரவசமடைய செய்தது.

அன்னாரின் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் எல்லோ ரும் ஆலிம்கள் என்பதைப் போன்றே பிள்ளைகளும் ஆலிம்களாக உருவாகி சமுதாயத்திற்கு சிறந்த சேவைகளை செய்து கொண்டிருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி தரும்

# நிரந்தர நன்மை பெற ஓடி வாருங்கள்!

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்....

வேலூர் மாவட்டம் அரியூரில் அமைந்துள்ள **ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரியில்** பயிலும் மாணவர்களின் இட நெருக்கடியைப் போக்கும் விதத்தில் அருகிலுள்ள காலி இடம் **(ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம்)** விலை பேசப்பட்டு அதை வாங்குவதற்காக கடந்த ஓராண்டாக தங்களைப் போன்ற நல்லுள்ளம் கொண்டவர்களிடம் உதவி வேண்டி கோரிக்கை வைத்திருந்தோம். அதன்படி, தாங்கள் செய்த பெரிய உதவிகளின் மூலம் நிறைந்த பணங்களைப் பெற்றுக் கொண்டோம். அல்ஹம்துலில்லாஹ் !

இன்னும் ரூபாய் 30 இலட்சங்கள் தேவைப்படுவதால் தயாள சிந்தனையுள்ளவர்கள் தாராளமாக அள்ளிக் கொடுத்து உதவினால் இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் மேற்படி இடத்தை முழுமையாக நாம் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்கும்.

**எனவே, விரைவாக தங்களின் பேருதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.**

தங்களின் இந்த உதவியால் கியாமத் நாள் வரை தங்களுக்கும், தங்கள் பெற்றோர் மற்றும் தாங்கள் யாருக்காக நிய்யத் செய்தீர்களோ அவர்களுக்கும் ஸதக்கா ஜாரியாவாக தொடர்ந்து நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

| | |
|---|---|
| ஒரு சதுர அடி ரூபாய் | **1,000/-** |
| ஒரு முஸல்லா அளவு ரூபாய் | **6,000/-** |

इंडियन बैंक Indian Bank

## AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST

**A/C No. : 6845938157**

**BRANCH NAME : ARIYUR**

**IFSC CODE : IDIB000A198**

Estd.: 2007.1427

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா **உபைதுல்லாஹ்** சாஹிப் காஸிமி, **நிறுவனர் & முதல்வர்**

**ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி**

அஜீஸ் நகர், **அரியூர், வேலூர்–632055.** தமிழ்நாடு **Cell : 9443491834**

செய்தியாகும். அவர்களில் ஒருவர் மவ்லானா மவ்லவீ அஷ்ரஃப் அலீ காஷிஃபீ ஹள்ரத் அவர்கள் கடையநல்லூர் பைஜுல் அன்வார் மதரஸாவில் சிறந்த பேராசிரியராகவும், மற்றொருவர் மவ்லானா மவ்லவீ முஹம்மது யூசுஃப் ஸிராஜி ஹள்ரத் அவர்கள் அதே உடுமலைப்பேட்டையின் சிறந்த இமாமாகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்னார் உடுமலைப்பேட்டையில் பணி செய்த கால கட்டத்தில் அந்த மக்களால் மிக மிக கண்ணியத்தோடு பார்க்கப் பட்டார்கள். **பாசக் கயிற்றைக் கொண்டு என்னை அந்த மக்கள் கட்டிப் போட்டு விட்டார்கள். அதனால்தான் இந்த இடத்தை விட்டும் வெளியில் எங்கும் செல்ல முடியவில்லை** என்ற வார்த்தைகளை ஹள்ரத் அவர்களே உதிர்த்திருக்கிறார்கள்.

கடையநல்லூர் மதரஸாவை உருவாக்கிய அக்காலத்து மாமேதைகளில் ஒருவரான மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் யூசுஃப் அன்சாரி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் உடன்பிறந்த தங்கையைத்தான் ஹள்ரத் அவர்கள் மணமுடித்திருந்தார்கள்.

ஹள்ரத் அவர்கள் ஓரிரு நாட்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்ததும், ஹள்ரத் அவர்களின் ஜனாஸாவை தங்கள் ஊரில்தான் அடக்கம் செய்ய வேண்டும் என்பதில் ஒவ்வொருவரும் மிகுந்த போட்டி போட்டுக் கொண்டாலும் ஹள்ரத் அவர்கள் ஏற்கனவே செய்திருந்த வஸிய்யத்திற்கு தகுந்தவாறு ஹள்ரத் அவர்களின் ஜனாஸா அவர்களின் சொந்த ஊரான கடையநல்லூருக்கே கொண்டு செல்லப்பட்டது.

இதற்கு அந்த ஊர் மக்கள் சம்மதித்தாலும் ஹள்ரத் அவர்கள் இங்கு இமாமத் பணி செய்வதற்காக ஆரம்ப கால கட்டத்தில் பஸ்ஸ்டாண்டில் வந்து இறங்கி பெட்டி படுக்கையோடு வந்ததைப் போன்று நாங்களும் எங்களின் ஹள்ரத் அவர்களை பஸ் நிலையம் வரை சென்றாவது வழியனுப்பி வைப்போம் என்ற உறுதியோடு அந்த மக்கள் பள்ளிவாசலில் இருந்து பஸ் நிலையம் வரை அன்னாரின் ஜனாஸாவை ஆயிரக்கணக்கான மக்களுக்கு நடுவிலே தங்களின் தோள்களில் சுமந்து கொண்டு வந்து அங்கிருந்துதான் வேனில் ஏற்றி வழியனுப்பி இருக்கிறார்கள். முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர்களும், அந்த ஊர் மக்களும் ஹள்ரத் அவர்கள் மீது கொண்டிருந்த அளவிலா மரியாதையும், அன்பும் அன்றுதான் வெளிப்பட்டது.

ஏதோ பெரிய மாநாடு போன்று இரவு 9 மணிக்கு உள்ளூர் மக்களும், வெளியூர் மக்களும் திரண்டு வந்து அன்னாரை வழியனுப்பி வைத்த காட்சி பார்ப்போரை நெகிழச் செய்தது. சாதாரணமாக இமாமத் பணியில் இருந்த ஓர் ஆலிம் இத்தனை பல ஆயிரம் மக்களை சம்பாதித்துக் கொண்டார் என்றால் நம்பவா முடிகிறது? அல்லாஹு அக்பர்! எவ்வளவு பெரிய மாமேதை!

அப்படிப்பட்ட மஹான் சென்ற 07.12.24 அன்று நம்மை விட்டும் மறைந்தது மிகுந்த அதிர்ச்சியூட்டும் செய்தியாகும்.

மேற்படி மூன்று உலமா பெருமக்களின் அனைத்து தீனுடைய சேவைகளையும் அல்லாஹ் கபூலாக்கி அவர்களின் பிரிவால் துவண்டு போய் இருக்கக் கூடிய குடும்பத்தார்களுக்கும், நண்பர் களுக்கும், ஊர் மக்களுக்கும், சொந்த பந்தங்களுக்கும் அல்லாஹ் “ஸப்ரன் ஜமீல்” எனும் அழகிய பொறுமையை கொடுத்து மேற்படி உலமாபெருமக்களுக்கு மறுமையில் உயர்ந்த ஜன்னத்துல் ஃபிர்தௌஸை நஸீபாக்கி வைக்க நாங்களும் துஆ செய்கிறோம். அருமை வாசகர்களே! அந்தப் பெருமக்களின் மறுமைப்பேறுக்காக நீங்களும் துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் கபூலாக்குவானாக. ஆமீன்.

---


# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412,414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://**oxfordenglishschool.info**

# ஏதருமை சமுதாயமே! நாம் மரணித்து விடாத சமுதாயம்!

மவ்லவீ அஹமது மீரான் ஃபைஜி, கூத்தாநல்லூர்

தாத்தாரிகள், மங்கோலியர்கள்
பக்தாத் நகரில் நுழைந்து 40 நாட்கள்
ஜும்ஆ தொழுகையை தொழவிடாமல் தடுத்தனர்.

முஸ்லிம்களின் இரத்தத்தால் டைக்ரிஸ்
நதியின் நீரை சிவப்பு நிறமாக மாற்றினர்.
பின்னர் அது இஸ்லாமிய நூல்களின்
மையினால் கருப்பு நிறமாக ஆனது.

இஸ்லாம் அழிந்துவிட்டதா ?
இல்லையே...

கஃபாவின் இரட்சகன் மீது ஆணையாக !

தாத்தாரிகள் செத்துப் போயினர்.

செங்கிஸ்கான் மாண்டு போனார்.

ஹுலாகு கான் மரணத்தை தழுவினார்.

இஸ்லாம் இன்னும் நிலைத்திருக்கிறது....
பல மங்கோலியர்கள் இஸ்லாமிய
மார்க்கத்தில் திரளாக நுழைந்தனர்.

முஸ்லிம் சமுதாயம் வீழ்ச்சியின்
காலகட்டங்களை கடந்து செல்கிறது...
பின்னர் அது விழித்தெழுந்து தனது
எதிரியை ஒழுங்குபடுத்துகிறது.

நம் சமுதாயம் நோய்வாய்ப்படலாம்.
ஆனாலும் மரணித்து விடாத சமுதாயம் !

# நம்மை வலம் வரும் வளமான மாதங்கள்

மவ்லவீ ஹாஃபிழ் டி.எம்.முஜீபுர்ரஹ்மான் சிராஜி

## நன்மைகள் பொழியும் மாதங்கள்

ஒவ்வொரு தொழிலை செய்பவர்களுக்கும், வியாபாரம் செய்பவர்களுக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட சீஸன் மாதங்களும் காலங்களும் உண்டு. அந்த குறிப்பிட்ட நாட்களில் அவர்களின் வியாபாரப் பொருட்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு இலாபமும் கொழிக்கும். அது போன்ற சீஸன் காலங்களில் வியாபாரிகள், வணிகர்கள் தூக்கம் மறந்து - பசி மறந்து, ஓய்வு மறந்து வியாபாரத்திலும், தொழிலிலேயும் கண்ணும் கருத்துமாக ஈடுபடுவார்கள். காரணம் அந்த குறிப்பிட்ட சீஸன்காலங்களில்வணிகத்தில் கோட்டை விட்டோம் என்றால் அடுத்த ஆண்டுகளில்தான் அந்த வளமான இலாபத்தை அடையமுடியும். எனவே தனது முழுக் கவனத்தையும், உழைப்பையும் வியாபாரத்தை கவனிப்பதில் மட்டுமே செலவு செய்வார்கள்.

வணிகர்களுக்கு எவ்வாறு குறிப்பிட்ட வியாபார சீஸன் காலங்கள் வருகிறதோ அது போன்று நன்மைகளை பெருமளவு சம்பாதிக்க வேண்டும், மறுமையில் அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்று மிகப்பெரிய வெற்றி ஈட்ட வேண்டும் என்ற குறிக்கோள் உடைய முஃமின்களுக்கு நன்மைகளை வாரி வழங்கும் சீஸன் மாதங்கள் வருகை புரிகின்றன. முஃமின்களின் வாழ்வில் அவர்கள் நன்மைகளை அளவில்லாமல் பெறும் பொருட்டு இத்தகைய மாதங்களை அருள் நிறைந்ததாக அல்லாஹுதஆலா வலம் வரச் செய்கின்றான். அந்த மாதங்கள் எவையென்றால் ரஜப், ஷஃபான், ரமளான் ஆகியவை.

இந்த மாதங்களில் முதலில் நாம் அடைய இருக்கும் மாதமான ரஜப் மாதம் அல்லாஹ்வால் “புனித மாதங்கள்” என்று புகழப்பட்ட நான்கு மாதங்களில் ஒன்றாகும். அல்லாஹுதஆலா இது குறித்து அல்குர்ஆன் ஷரீபில், **“சிறப்புப் பெற்ற மாதத்திற்கு சிறப்புப் பெற்ற மாதமே ஈடாகும்”** (அல்குர்ஆன் 2:194) என்று கூறுகிறான். அல்லாஹ்வால் சிறப்புப்படுத்தப்பட்ட மாதங்

கள் எவையென்றால் ரஜப், துல்கஅதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய மாதங்களாகும். இம் மாதங்களில் யுத்தம் செய்வது, சண்டை சச்சரவு செய்வது ஆகியவற்றிலிருந்து விலகி யிருப்பதன் மூலம் இம்மாதங் களை கௌரவப்படுத்தும்படி அல்லாஹுதஆலா அரபியர் களுக்கு வலியுறுத்தியிருந்தான். அல்லாஹ்வால் இவ்வாறு புனிதப்படுத்தப்பட்ட இம்மாதங் களிலும் ரஜப் மாதத்திற்கு தனிச் சிறப்புண்டு. மற்ற மாதங்கள் எல்லாம் (மூன்று) மாதங்களும் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றன. ரஜப் மாதம் மட்டும் தனியாக இருந்து தனித் துவம் பெற்று விளங்குகிறது. அந்த வகையிலும் ரஜப் மாதம் தனிச் சிறப்பை பெறுகிறது.

## நன்மைகள் அடைய தயாராகுவோம்

ரஜப் என்ற அரபி வாக்கியம் தர்ஜுப் என்ற மூலச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். தர்ஜுப் என்றால் "தயாராகுதல்" என்று பொருளாகும். முஃமின் களை பொறுத்தமட்டில் நன்மைகள் அடைய தயாராகு தல் என்று கூறுவது பொருத்த மாகும். எனவே தான் அண்ண லார் (ஸல்) அவர்கள் ரஜப் மாதத் தின் பிறையை கண்டதும் "அல்லாஹும்ம பாரிக் லனா ஃபீ ரஜப வஷஃபான வபல்லி க்னா ரமளான் ("எங்கள் இரட்சகா! இந்த ரஜப் மற்றும் ஷஃபான் மாதங்களில் உன் அருளை எங்களுக்கு பெருமளவு வழங்கி புனித ரமளானை நாங்கள் அடைய அருள் புரிவாயாக!) என்று பிரார்த்தனை புரி வார்கள். மேலும் அண்ணலார் (ஸல்) அவர்கள் புனிதம்நிறைந்த இம்மாதங்கள் குறித்து கூறும் போது "ரஜப் மாதம் அல்லாஹ் வுடைய மாதமாகும். ஷஃபான் மாதம் என்னுடைய மாதமாகும். ரமளான் மாதம் என் உம்மத்தின ரின் மாதமாகும்" என்று கூறியுள் ளார்கள். அப்போது ஒரு தோழர் "அண்ணலார் (ஸல்) அவர்களே! ரஜப் மாதம் அல்லாஹ்வுடைய மாதம் என்பதன் தத்துவார்த்தம் என்ன? என்று வினவினார். அதற்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் "இம்மாதத்தில் பிரத் யேகமான "மஃபிரத்" என்னும் மன்னிப்பு அருளப்படுகிறது. மேலும் இம்மாதத்தில் அல்லாஹ் தன் இறைதூதர் களின் இறைஞ்சுதல்களை ஏற்றுக் கொண்டான்" என்று பதில் பகர்ந்தார்கள்.

அல்லாஹ்வின் அருட் கொடைகளை இம்மாதத்தில் அடையும் பொருட்டு கலீபா உஸ்மான் (ரளி) அவர்கள் ரஜப் மாதம் பிறந்து விட்டது என்றால் தங்களின் ஜும்ஆ பேருரையில் "முஃமின்களே! இது அமைதி நல்கும் மாதமாகும். ஜகாத் மற்றும் தான தர்மங்கள் வழங்

கும் மாதமாகும். எனவே தயாள உள்ளம் படைத்தோர் இம்மாதத்திலேயே தான தர்மங்கள் வழங்கி அல்லாஹ்வின் அருட்கொடைகளை பெறுங்கள்...” என மக்களுக்கு ஆர்வமூட்டி உரையாற்றுவார்கள்.

## அல்லாஹ்வுடன் வியாபாரம் செய்வோம்

வியாபாரிகளுக்கு குறிப்பிட்ட காலங்கள் லாபம் கொழிக்கும் சீஸன் நாட்களைப் போன்று அல்லாஹ்வின் அருளையும் நன்மையையும் வாரிக்குவிக்கும் பேராவல் கொண்ட முஃமின்களுக்கு ரஜப், ஷஃபான், ரமளான் ஆகிய மாதங்கள் ஒரு வரப் பிரசாதமாகும். அதிலும் துவக்க மாதமான ரஜப் மாதத்தில் நன்மைகள் அடைய நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களிடம் வணிகம் செய்துலாபம்அடைவது போன்று ஒவ்வொரு முஃமினும் அல்லாஹ்விடம் வணிகம் செய்து இலாபம் பெற வேண்டும். அதற்கு பொருத்தமான மாதம் இந்த ரஜப் மாதமாகும். அல்லாஹ்வுடன் வணிகம் செய்ய அல்லாஹ்வே குர்ஆனின் மூலம் அழைப்பு விடுக்கிறான். **“அல்லாஹ், விசுவாசி (முஃமின்) களுடைய உயிர்களையும், பொருட்களையும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் வழங்குவதாகக் கூறி மெய்யாகவே விலைக்கு வாங்கிக் கொண்பான்”** (அல்குர்ஆன்(9:111)என்பதாக அல்லாஹ் முஃமின்களை தன்னுடன் வணிகம் செய்ய அழைக்கின்றான்.

தன் உயிர், உடைமைகள், உறவுகள் ஆகியவற்றின் மூலம் பெரும் பெரும் தியாகம் செய்து அல்லாஹ்வுடன் வணிகம் செய்து மிகப்பெரிய வெற்றியை ஈட்டிய நபிமார்கள், ஸஹாபாக்கள், வலிமார்கள் ஆகியோரின் சம்பவங்களை எண்ணற்ற முறையில் வரலாறுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

## அல்லாஹ்வுடன் வணிகம் செய்த நல்லார்

அல்லாஹ்வுடன் வணிகம் செய்து இலாபம் அடைந்தவர்களில் ஒரு நல்லாருடைய வரலாற்று நிகழ்வை இப்போது நாம் எண்ணிப் பார்ப்போம்.

ரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டம். அப்போது ரோமர்களுடன்யுத்தம் செய்ய முஸ்லிம் படையினர் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப் படையினரை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றிருந்த ஷைகு அப்துல் வாஹிது இப்னு ஸஈது (ரஹ்) அவர்கள் தன் படையினரை

அழைத்து யுத்தத்தின் வியூகங் களையும், ஒழுக்கங்களையும் கற்றுக் கொடுத்தார்கள். அப்போது தனது பொருள், ஆவியை அல்லாஹ்வின் வழி யில் தியாகம் செய்வது குறித்து அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ள சில வசனங்களை ஓதிக் காட்டி னார்கள். அப்போது மேற்கண்ட **"அல்லாஹ் முஃமின்களுடைய உயிர்களையும், பொருட்களை யும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் வழங்குவதாகக் கூறி மெய்யாகவே விலைக்கு வாங்கிக் கொண்டான்."** (அல் குர்ஆன் 9:111) என்ற ஆயத் தையும் ஓதிக் காட்டினார்கள். இந்த ஆயத்தை ஓதிக்காட்டிய வுடன் படையிலிருந்த இளைஞர் ஒருவர் எழுந்து, "ஷைகு அவர்களே! அல்லாஹ் முஃமின்களிடம் அவர்களின் உடைமைகள், உயிர் ஆகியவற்றை சுவர்க்கத்திற்கு பகரமாக விலைக்கு வாங்கிக் கொண்டானா?" என்று வியப் புடன் கேட்டார். "ஆம்!" என்று ஷைகு அப்துல்வாஹிது (ரஹ்) பதிலளித்தனர். அப்படியென் றால் ஷைகு அவர்களே! நீங்கள் சாட்சியாக இருங்கள். எனக்கு எனது தந்தை ஏராள மான சொத்துக்களை விட்டுச் சென்றுள்ளார். அவை அனைத் தையும் மேலும் எனது உயிரை யும் சுவர்க்கத்திற்கு பகரமாக அல்லாஹ்விடம் விற்று விட் டேன்" என்று கூறினார். சிறிது நேரம் கழித்து - தனது வீட்டுக்குச் சென்ற அந்த இளைஞர் போருக்குத் தேவை யான குதிரை, வாள் போன்ற பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு மற்ற உடைமைகள் அனைத்தையும் ஷைகு அவர் களிடம் கொடுத்து "அல்லாஹ் வின் வழியில் இவையனைத்தை யும் செலவு செய்து கொள்ளுங் கள்" என்று கூறி விட்டு படை யினருடன் கலந்து கொண்டார். முஸ்லிம்களின் படை போர்க் களத்தை அடைந்தது. படை யினருடன் கலந்து கொண்டதி லிருந்து அந்த இளைஞர் இரவு முழுவதும் தொழுகையிலும், பகல் முழுவதும் நோன்பு வைப்பதிலும் கழித்து வந்தார். ஒரு நாள் இரவு அந்த இளைஞர் இரவுத் தொழுகை தொழுது கொண்டிருக்கும் போது சிறிது நேரம் கண்ணயர்ந்தார். திடீரென எழுந்து "அய்னாவே! மர்ளிய்யாவே! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? இதோ நான் வரு கிறேன்" என்று கூக்குரலிட்ட படி எழுந்து அமர்ந்தார். சுற்றிலும் படுத்திருந்தவர்கள் அலறியடித்தபடி அந்த இளைஞர் அருகில் வந்தார்கள். "இந்த இளைஞருக்கு என்ன ஆயிற்று? நன்றாகத் தானே இருந்தார்!" என்று ஒருவருக்கொருவர் வியந்தவாறு அந்த இளைஞ ரிடம் "ஏனப்பா! உனக்கு என்ன ஆயிற்று? உனக்கு என்ன

CERTIFIED ISO 9001:2008 COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு

4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

வாழ்த்துக்களுடன் ...!

☎ 04175 - 223786
222528 (E)

மலைவலம் வரும் நகரில்
கலை நயம் பொருந்திய

# பூம்புகார்

துணியகம் & ஆடையகம்!

55 தேரடி வீதி திருவண்ணாமலை - 606 601

ஆனது? அய்னா மர்ளிய்யா! என்றெல்லாம் பெண்களின் பெயர்களைகூறினாயே! அவர்கள் யார்?" எனக் கேட்டனர். உடனே அந்த இளைஞர், "நான் அல்லாஹ்வை தொழுது கொண்டிருந்தபோது திடீரென கண்ணயர்ந்து தூங்கிவிட்டேன். அப்போது கனவில் நான் அழகிய தோட்டத்தினுள் இருந் தேன். என்னை ஒருவர் 'வாருங்கள் உங்களை அய்னா மர்ளிய்யா அழைக்கிறார்! என்று அழைத்துச் செல்கிறார். தோட்டத்தினுள் பசுமை படர்ந்த அந்த சோலை யினுள் என்னை அழைத்துச் செல்கின்றார். நானும் அவரை பின் தொடர்ந்து செல்லும் போது அந்த தோட்டத்தினுள் ஆங் காங்கே நின்றிருந்த அழகிய பெண்கள் எல்லாம் என்னை காண்பித்து, "இதோ! அய்னா மர்ளிய்யாவின் கணவர் வந்து விட்டார்! என்று ஒருவருக்கொரு வர் மகிழ்ச்சி பொங்க கூறிக் கொள்கின்றனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. தோட்டத்தினுள் வியாபித்திருந்த பசுமை புல் வெளிகள், பூச்செடிகள், நீரூற்று கள் ஆகியவற்றையெல்லாம் கடந்து மிகப்பெரிய அழகிய மாளிகையை அடைந்தோம். அங்கு தலைவாயிலில் நின்றி ருந்த பெண்கள் எல்லாம் அகம் மலர "இதோ! அய்னா மர்ளிய்யா வின் கணவர் வந்து விட்டார்". என்று கூறிக்கொண்டு என்னை வரவேற்கின்றனர். பிரம்மாண்ட மான அந்த மாளிகையினுள் நுழைந்த நான் அதன் கட்டமைப் பில் பிரமித்துப் போய் நிற்கும் போது என்னை அழைத்துச் சென்ற அந்த நபர் மாளிகையின் அந்தப்புரத்தை கைகாட்டி "அங்கே செல்லுங்கள்! உங்கள் துணைவி அய்னா மர்ளிய்யா உங்களுக்காக காத்துக் கொண்டி ருக்கிறார் என்று கூறி விட்டுச் செல்கிறார். அவர் காட்டிய திசை யில் அந்தப்புரத்தில் நுழைந்த வுடன் அங்கு வீற்றிருந்த நங் கையை பார்த்தவுடன் என்னை நானே அந்த மங்கையின் அழகில் பறிகொடுத்து விட்டேன். இது வரை அப்படிப்பட்ட அழகான பெண்ணை நான் பார்த்ததே இல்லை. என்னைக் கண்டதும் அந்தப் பெண் எழுந்து நின்று வாருங்கள் கணவரே! என்னை நீங்கள் அடைவதற்கு இன்னும் நேரம் வரவில்லை. இன்றிரவு நீங்கள் ஸஹர் செய்கிறீர்கள். இன்ஷா அல்லாஹ் நோன்பை என்னுடன் திறப்பீர்களா? என்று கூறி மறைகிறார். இத்துடன் எனது கனவு கலைந்து விட்டது" என அந்த இளைஞர் கனவில் கண்டவற்றை விளக்குகிறார்.

## மர்ளிய்யாவுடன் நோன்பு திறந்த மாண்பாளர்

தன்னிடம் விசாரிக்க வந்த வர்கள் விபரத்தை தெரிந்து கொண்டு சென்றுவிட, மீத

முள்ள இரவு நேரத்தை தொழு கையில் கழிக்கிறார். ஸஹர் நேரம் வந்தவுடன் எளிமையான முறையில் தனது ஸஹரை முடித்துக் கொள்கிறார். மறுநாள் ரோமர்களுடன் யுத்தம் புரிய போர் வீரர்களுடன் நோன்பு வைத்த நிலையிலேயே போர்க் களம் செல்கிறார். ரோமர்களுக் கும், முஸ்லிம்களுக்கும் கடுமை யாக யுத்தம் நடைபெறுகிறது. எதிரிகளுடன் அந்த இளைஞர் வீர தீரமான முறையில் போரிடு கிறார். ஒரு கட்டத்தில் அந்தோ விபரீதம்! திடீரென ஓர் எதிரி அந்த இளைஞரின் உடலில் தன் நீண்ட வாளை பாய்ச்சுகிறார். உடல் துளைக்கப்பட்ட நிலையில் வேரறுபட்ட மரம் போல் அந்த இளைஞர் கீழே விழுகிறார்.

நோன்பு வைத்த நிலையில் அல்லாஹ்வுக்காக வீர தீரமாக போரிட்ட அந்த இளைஞரின் உடலிலிருந்து உயிர் பிரிகிறது. (இன்னாலில்லாஹ்....) அல்லாஹ்வுடைய வழியில் நோன்பு வைத்த நிலையில் ஷஹீதான அந்த இளைஞர், சுவனத்தில், அய்னா மர்ளிய்யா என்ற ஹூருல் ஈன் என்ற தூய்மையான நங்கையுடன் நோன்பு திறக்கச் சென்று விட்டார். இந்த நிகழ்வு நமக்கு கூறும் சான்று என்னவெனில், அந்த இளைஞர் அல்லாஹு தஆலா குர்ஆனில் கூறியதைப் போன்று தனது சொத்து மற்றும் உயிரை அல்லாஹ்வுடைய வழியில் தியாகம் செய்து அதாவது அல்லாஹ்விடம் வாணிபம் செய்துமிகப் பெரும் இலாபத்தை அழிவில்லாத மறுஉலகத்துக் காக சம்பாதித்துக் கொண்டார். இவ்வாறு தனது இவ்வுலக வாழ்வில் அல்லாஹ்வுடன் வணிகம் செய்து மிகப்பெரும் வெற்றியடைந்தவர்களின் சம் பவங்கள் வரலாறு நெடுகிலும் நமக்கு காணக் கிடைக்கின்றன. அதை நாம் படிக்கின்ற போதும், கேட்கின்ற போதும் நாமும் இவர்களைப்போன்று "அழியாத மறுவுலக வெற்றியைப் பெற" தயாராக வேண்டும் எனும் எண்ணம் நம் மனதில் பொங்க வேண்டும்.

அண்ணலார் (ஸல்) அவர் கள் அருள்கிறார்கள்.

"அல்லாஹு தஆலா படைப்பினங்களை படைத்த பொழுது தன்னிடமுள்ள லவ்ஹுல் மஹ்பூல் என்னும் ஏட்டில் "என் கருணை என் கோபத்தை மிகைத்துவிட்டது" என்று எழுதியுள்ளான். இந்த வார்த்தைகள் அர்ஷின் மீது எழுதப்பட்டுள்ளன".

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் - 6969)

அளவில்லாத அருளை நம் மீது பொழிய அல்லாஹ் காத்திருக்கிறான். எனவே

அந்த அருளைப் பெற நல்அமல் களை அதிகமாக செய்வதின் மூலம் அதாவது அவனுடன் வாணிபம் செய்வதின் மூலம் அவனின் அருள் என்ற இலாபத்தை பெருமளவு பெற்று மறுஉலக வாழ்வில் நாம் வெற்றி பெற முடியும். அல்லாஹ்வின் அதிகமான பேரருளை சுமந்த மாதமான ரஜப் மாதம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஷஃபான் மற்றும் ரமலான் மாதம் நம்மிடையே வலம் வர இருக்கின்றன. இம் மாதங்களை "நன்மை பொழியும் சீஸன் மாதங்களாக நாம் ஏற் படுத்திக் கொண்டு நன்மைகள் பெற நம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

## நன்மைகளை விதைக்கும் மாதம்

நன்மையை பொழியும் மாதங்களில் முதல் மாதமாக நம்மிடையே வலம் வரக் கூடிய ரஜப் மாதம் குறித்து ஹள்ரத் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர் கள் "ரஜப் மாதம் விதைக்கும் மாதமாகும். ஷஃபான் மாதம் விதைத்தவற்றுக்கு நீர் பாய்ச்சும் மாதமாகும். ரமளான் மாதம் விளைச்சலை அறுவடை செய்யும் மாதமாகும். ஒவ்வொரு மனிதரும் எதை விதைத்தானோ அதனைத்தான் அறுவடை செய் வார். அவரவர் செய்த நன்மை களுக்குரிய பலன்களை பெறு வார். எதையுமே விதைக்காதவர் அறுவடை காலத்தில் வெட்கப் பட்டு நிராசையடைந்து தான் நிற்க வேண்டியது வரும். அவ னுடைய முடிவும் தீய நிலை யில்தான் அமையும்" என்று கூறியுள்ளார்கள். அவர்களின் கூற்றுப்படி அருள் பொழியும் மாதங்களின் வரிசையில் துவக்க மாதமான ரஜப் மாதத்திலேயே நன்மைகள் செய்ய தயாராகிட வேண்டும். நம்மால் இயன்றதை தான தர்மங்கள் செய்வதின் மூலமாக மேலும் இயன்றளவு நஃபிலான தொழுகைகள் தொழுவதின் மூலமாக மேலும் ரஜப் மாதத் தில் முடிந்தளவு நோன்பு நோற் பதின் மூலமாக நன்மை களை அதிகம் பெற முயல வேண்டும்.

"அல்லாஹ்வின் அருள் மாதமான இந்த ரஜப் மாதத்தில் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமின் கவலையை கஷ்டத்தை போக் கும் விதமாக அவருக்கு உதவி செய்தால் அல்லாஹ் ஃபிர்தவ்ஸ் எனப்படும் சுவனத்தை, உதவி செய்த முஃமினுக்கு வழங்கி கௌரவப்படுத்துவான்" என ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரளி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, முஸ்லிமான சகோதரர்களுக்கு அவர்களின் கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள இந்த ரஜப் மாதத்தை நாம் பயன்படுத்தி மறுமையில் அல்லாஹ்விடம் அந்தஸ்தை

பெறுபவர்களாக திகழ வேண்டும்.

## ரஜப் மாத அமல்கள்

ஹள்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் பஸரா நகரின் கவர்னருக்கு எழுதிய கடிதத்தில் (1) ரஜப் மாதத்தின் முதலாம் இரவு (2) ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் இரவு (3) ரமளான் மாதத்தின் 27ம் இரவு (4) இரு பெருநாளின் இரவு ஆகியவற்றில் விழித்திருந்து வணங்குவதை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எனவே இது போன்ற இரவுகளை நபிலான தொழுகைகள் மற்றும் தவறிப் போன தொழுகைகள் மற்றும் குர்ஆன் ஷரீப் ஓதுவது, திக்ரு செய்வது ஆகியவற்றின் மூலம் விழிப்பாக்க வேண்டும்.

ரஜப் மாதத்தில் அல்லாஹ்வின் உத்தரவுப்படி ஹள்ரத் நூஹ் (அலை) அவர்களும், அவர்களின் கூட்டத்தாரும் கப்பலில் பயணம் செய்தார்கள். அப்போது நபி நூஹ் (அலை) அவர்கள் நோன்பு வைத்தார்கள். தன்னுடன் இருப்பவர்களை யும் நோன்பு நோற்கச் செய்தார் கள். அதன் காரணமாக “தூஃபான்” என்ற மிகப் பெரிய வெள்ளத்திலிருந்து அல்லாஹ் அவர்களை காப்பாற்றினான் என்பதாக

“(தொழுகை) வரிசைகளில் (இடைவெளியின்றி) சேர்ந்திருப்போருக்கு அல்லாஹ் அருள்புரிகிறான். வானவர்கள், அவர்களுக்காக அல்லாஹ்விடம் அருளைக் கேட்கின்றனர்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் (முஸ்னது அஹ்மத் : 25270)

பாவா மெடிக்கல்ஸ்
53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-1.
04373-254354; 253339; 99444 54354

வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

ரஜப் மாதத்தில் நோற்கப் படும் நோன்புகளால் நோன் பாளியின் பாவங்கள் முழுமை யாக அழிக்கப்படுகின்றன. எனவே தான் இந்த ரஜப் மாதத்திற்கு "ஷஹ்ருல் முத்தஹ்ஹர்" (பரிசுத்தப் படுத்தும் மாதம்) என்ற பெயருண்டு என்பதாகவும் ரஜப் மாத நோன்பின் சிறப்பைப் பற்றி கூறப்படுகின்றன.

புனிதமிகு இந்த ரஜப் மாதத்தில் குறிப்பாக வியாழன், வெள்ளி, சனி, ஆகிய மூன்று நாட்களில் நோன்பு வைப்பவருக்கு அல்லாஹ் 900 ஆண்டுகள் நோன்பு வைத்ததின் நன் மையை வழங்குகிறான். ரஜப் மாதத்தில் நோன்பு வைப்ப வருக்கு சுவனத்தில் பிரத்யேக மான ஒரு மாளிகையுண்டு. மேலும் ரஜப் மாதத்தில் நோன்பு வைக்கும் வழக்கம் கொண்ட வருக்கு அவரின் உயிர் பிரியும் வேளையில் அல்லாஹ் ஜன்னத் துல் ஃபிர்தவ்ஸ் என்ற சுவனத் தின் நீரை மலக்குமார்கள் மூல மாக அவரின் வாயில் ஊற்றச் செய்வான். அதன் காரணமாக உயிர்பிரியும்வேதனை (சகராத்) அவருக்கு இலேசாகும். என்பதாக அண்ணலார் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹள்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள்.

ரஜப் மாதத்தின் முதல் வியாழன் அன்று நோன்பு வைத்து அன்று மஃரிபுக்குப் பின் இரண்டு ரக்அத் நஃபில் தொழவேண்டும். இரு ரக்அத்தி லும் சூரா பாத்திஹாவுக்குப் பின் சூரா கத்ரை 3 முறையும், சூரா இக்லாஸை 12 முறையும் ஓத வேண்டும். இவ்வாறு இரண்டு ரக்அத் தொழுது கேட்கப்படும் துஆக்கள் உடனடி அங்கீகாரம் பெறும் என்பதாகவும் நபி மொழி களில் காணப்படுகின்றன.

வியாபாரிகளுக்கு இலாபம் கொழிக்கும் சீஸன் மாதங்கள் வருவது போன்று நன்மைகளை முஃமின் களுக்கு வழங்க அல்லாஹ் வின் அருள் பொழியும் மாதங் களாக ரஜப் மாதம் ஷஃபான் மற்றும் ரமளான் மாதம் ஒரு அருமையான அற்புத மாதங்களாக இருக்கின்றன.

எனவே. நாம் இம்மாதங் களில் தொழுகை, நோன்பு, தான தர்மங்கள் ஆகியவற்றின் மூலமாக அல்லாஹ்வுடன் வணிகம் செய்து அளவற்ற அருளையும், நன்மைகளையும் பெற நம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் அதற்கு நல்லுதவியை நமக்கு வழங்குவானாக.

## சட்டப்பூர்வ, ஜனநாயக வழிமுறைகள் மூலம் வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவை திரும்பப் பெற ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்!

சட்டப்பூர்வ, அரசியலமைப்பு, ஜனநாயக வழிமுறைகள் மூலம் வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவை திரும்பப் பெற ஒன்றிய அரசை வலியுறுத்துவோம் என்று பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் தெரிவித்துள்ளது.

பெங்களூரில் அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் மாநாடு இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்த மாநாட்டில் வக்ஃபு சட்டத் திருத்த மசோதா, பொது சிவில் சட்டம் உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதுகுறித்து அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் செய்தி தொடர்பாளர் சையது காசிம் கூறுகையில், "இந்த இரண்டு நாள் மாநாட்டில் முஸ்லிம் சமுதாயத்தை பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது குறித்து விவாதிக்கப்பட்டது. வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை எதிர்ப்பது என்றும், அதனை தடுத்து நிறுத்துவதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. பொதுசிவில் சட்டம் குறித்தும் நாங்கள் பேசினோம். இந்தச் சட்டம் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்கனவே அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க முடிவு செய்துள்ளோம். நாட்டில் அதிகரித்து வரும் வெறுப்பு பேச்சுக்கள் குறித்தும் எங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொண்டோம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறித்து மக்களுக்கு வெறுப்பூட்டக்கூடிய வகையில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை உலகம் முழுவதிலுமுள்ள முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

மஸ்ஜிதுகள் விவகாரத்தில் சச்சரவு உருவாக்கப்பட்டு வருகிறது. 1991ஆம் வருட மத வழிபாட்டு பாதுகாப்பு சட்டம் அமலில் உள்ள நிலையில், நீதிமன்றங்களின் உத்தரவால் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

வக்ஃபு சட்டத் திருத்த மசோதா தொடர்பாக ஆலோசனைகள் பெற அமைக்கப்பட்ட நாடாளுமன்ற

கூட்டுக் குழு தன்னிச்சையாக செயல்படுகிறது. இந்தத்திருத்த மசோதாவில் குறிப்பிடப்பட்ட 44 திருத்தங்கள் மற்றும் அதன் உட்பிரிவுகள் வக்ஃபு சொத்தை அழிப்பதாக மற்றும் அபகரிப்பதாக அமைந்துள் ளது" என்று தெரிவித்தார்.

உத்தரபிரதேச மாநிலத் தில் அரங்கேறிய சம்பல் வன் முறை குறித்து அவர் கூறுகை யில் "வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்பு சட்டம் நடைமுறை யில் உள்ள நிலையில் அவ்வப் போது மஸ்ஜிதை கோவில் என்று திரும்பத் திரும்ப கூறிவருவது சட்ட விரோதமானது" என்று மேலும் தெரிவித்தார்.

## இந்திய அரசியலில் அதிரடி ஆதிக்கம் செலுத்தும் ஒரு முஸ்லிம் பெண் ஆளுமை இக்ரா ஹசன்...!

இந்திய அரசியல் மற்றும் ஜனநாயகம் குறித்து பிரபல பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர் ராஜ்தீப் சர்தேசாய் "இந்தியாவை ஆச்சரியப்படுத் திய தேர்தல் 2024 – ஜனநாயகம் உயிரோடு உள்ளது" என்ற தலைப்பில் புதிய புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டுள் ளார். இந்தப் புத்தகத்தில் பல நம்பிக்கையின் செய்திகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப் பினர்கள் உள்ளிட்டோரின் சுவையான தகவல்களை மிக அருமையாக ராஜ்தீப் சர்தேசாய் எழுதியுள்ளார். சமநிலை இல் லாத ஓர் அரசியல் சூழலில் 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தல் மக்கள் மற்றும் தலைவர் கள் மத்தியில் ஒரு சண்டை யாக மாறியபோது இந்திய வாக்காளர்கள் அரசியல் நிலைத் தன்மையை முன்னிறுத்த போராடினார்கள் என்று ராஜ்தீப் சர்தேசாய் வாதாடுகிறார். இந்த அருமையான புத்தகத்தில் முஸ்லிம் பெண் எம்.பி. இக்ரா ஹசனின் போராட்டங்கள், அவர் சந்தித்த சவால்கள், எதிர்கொண்ட அடக்குமுறை கள் ஆகியவற்றை மிகவும் சுவையான முறையில் தகவல் களாக அள்ளி வழங்கியுள்ளார் எழுத்தாளர் ராஜ்தீப் சர்தேசாய். முஸ்லிம் பெண் எம்.பி. இக்ரா ஹசன் குறித்து நூலில் இடம் பெற்றுள்ள அத்தியாயத்தி லிருந்துஒருபகுதியைஇப்போது பார்க்கலாம்.

### இக்ரா ஹசன் எம்.பி. :

தனது இருபது வயதின் நடுப்பகுதியில் ஒரு முஸ்லிம் இளம் பெண், இங்கிலாந்து தலைநகர் இலண்டனிலுள்ள புகழ்பெற்ற ஓரியண்டல் அண்ட் ஆப்ரிக்கன் ஸ்டடீஸில் (OAAS) அரசியல் அறிவியலில் முனைவர் பட்டம் பெற வேண்டும் என்று கனவு காண்கிறார். ஆனால், வாழ்க்கையின் விசித்திரம்

வேறு மாதிரியாக இருக்க, சில ஆண்டுகளிலேயே மேற்கு உத்தரபிரதேசத்திலுள்ள கைரானாவில் பரந்து விரிந்த கரும்பு வயல்களுக்குச் சென்று தேர்தலை சந்திக்கிறார். அரசியல் களத்தில் நிலைத்து நின்று சில ஆண்டுகளுக்குப் பிறகு மக்களவைக்கு 30 வயதான இக்ரா ஹசன் தேர்வான கதை மிகவும் அசாதாரணமானது.

(OAAS)இல் முதுகலைப் படிப்பை முடித்த நிலையில், கல்வியில் ஆர்வம் கொண்ட ஹசன், 2021 கோடையில், கோவிட் 19 தொற்று நோய் காரணமாக அவரை தாயகம் திரும்பும்படி கட்டாயப்படுத்திய போது, மேலும் படிப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டார். அவருடைய கவலைகள் அங்கு முடியவடையவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு 2022 உத்தரபிரதேச சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக கைரானாவிலிருந்து மூன்று முறை சமாஜ்வாதி கட்சி எம்.எல்.ஏ.வாக இருந்த அவரது சகோதரர் நஹித் ஹசன், உத்தர பிரதேச குண்டர்கள் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் 1986இன் கீழ் கைது செய்யப்பட்டார்.

இதுகுறித்து கருத்து கூறியுள்ள இக்ரா ஹசன், "எனது முழு உலகமும் ஒரே இரவில் சிதைந்தது போல் இருந்தது. என் தந்தை வெகு காலத்திற்கு முன்பே இறந்து விட்டார். என் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை. யோகி ஆதித்யநாத் அரசுக்கு சவால் விட்டதால்தான் என் சகோதரர் சிறையில் இருந்தார். எங்கள் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. எங்கள் சொத்துக்கள் வழக்கின் கீழ் வைக்கப்பட்டன. எனவே, கல்வியை மறந்துவிட்டு, குடும்பத்தை ஒன்றாக நடத்துவதில் நான் கவனம் செலுத்த வேண்டியிருந்தது" என்று தான் சந்தித்த சவால் மற்றும் சந்திக்கப் போகும் அடக்குமுறைகள் மற்றும் சவால்கள் குறித்து இப்படி தெரிவித்திருந்தார்.

**சவால்கள் முறியடிப்பு :**

இலண்டன் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, உத்தரப் பிரதேசம் திரும்பிய இக்ரா ஹசன், சந்திந்த முதல் அரசியல் சவால் மிகவும் புகழ் பெற்ற ஒரு வரலாற்று சம்பவமாகும். உத்தரப்பிரதேச சட்டப் பேரவைக்கு கடந்த 2022ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் போது சிறையிலிருந்த நஹித் ஹசனுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்த இக்ரா ஹசன், தனது சகோதரரின் வெற்றிக்காக இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தார். பாரதீய ஜனதா அரசின் பழிவாங்கும் செயல்

மற்றும் மக்கள் மத்தியில் வெறுப்பை விதைத்து தேர்தல் காலங்களில் அறுவடை செய்யும் போக்கு ஆகியவற்றை அவர் வாக்காளர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். இக்ரா ஹசனின் புதிய பிரச்சார பாணி மக்களை வெகுவாகக் கவர்ந்தது. இதன் காரணமாக சிறையிலிருந்தபடி அவரது சகோதரர் நஹித் ஹசன் சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

தாம்சந்தித்த முதல் அரசியல் சவால் மிகவும் நெருக்கடியாக இருந்தபோதும் அதை துணிச்சலுடன்எதிர்கொண்டுமுறியடித்த இக்ரா ஹசனுக்கு மீண்டும் ஒரு நல்ல வாய்ப்பு கிட்டியது. ஆம் 2024ஆம் ஆண்டுமக்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட சமாஜ்வாதி கட்சி அவருக்கு வாய்ப்பு அளித்தது. கைரானா மக்களவைத் தொகுதியில் போட்டியிட சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உத்தரவிட்டபோது இக்ரா ஹசன் அதனை மறுக்கவில்லை. கைரானா மக்களவைத் தொகுதி முஸ்லிம் வாக்காளர்கள் மிகவும் குறைவாக உள்ள தொகுதியாகும். இந்தத் தொகுதியில் அனைத்து சமுதாய வகுப்பைச் சேர்ந்த வாக்காளர்கள் இருந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தொகுதியில் முஸ்லிம் இளம் பெண்ணான இக்ரா ஹசன் எப்படி வெற்றி பெற முடியும்? என்ற கேள்விகள் எழுந்தன.

ஆனால், மீண்டும் துணிச்சலுடன் அரசியல் சவாலை எதிர்கொண்ட இக்ரா ஹசன், மக்கள் மத்தியில் அன்பை விதைக்கும் வகையில் பிரச்சாரம் செய்தார். பாரதீய ஜனதாவின் வெறுப்பு அரசியல், மக்களைப் பிரித்தாளும் போக்கு, சகோதரத்துவத்தின் முக்கியத்துவம், அனைத்துத் தரப்பு மக்களும் ஒற்றுமையுடன் இருப்பதால் கிடைக்கும் பலன்கள், நன்மைகள், முன்னேற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவை குறித்து மிகச் சிறந்த முறையில் தனது அழகான உருது மொழி மற்றும் ஆங்கில அறிவுதிறமையை பயன்படுத்தி, மக்களின் கவனத்தை கவர்ந்தார். இதன் காரணமாக கைரானா மக்களவைத் தொகுதியில் சுமார் 69 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் பாரதீய ஜனதா வேட்பாளரை அவர் தோற்கடித்தார். இப்படி மகத்தான வெற்றி பெற்ற இக்ரா ஹசனை 'கைரானா தொகுதியின் செல்ல மகள்' என அனைத்துத் தரப்பு மக்களும் அழைக்க ஆரம்பித்தனர்.

18வது மக்களவைத் தேர்தலில் மூன்று முஸ்லிம் பெண் எம்.பி.க்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவராக இக்ரா ஹசன், கைரானா தொகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட இளம் முஸ்லிம் பெண் எம்.பி. என்ற பெருமையையும் பெற்றுள்

ளார். நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, கைரானா தொகுதி முஸ்லிம் வாக்காளர்கள் பெரும்பான்மையாக இல்லாத தொகுதியாகும். அந்தத் தொகுதியில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், வெறுப்பு பிரச்சாரத்தை விதைக்காமல் அன்பு வழியில் மக்களின் மனங்களைக் கவர்ந்து மக்களவைத் தேர்தலிலும் இக்ரா ஹசன் வெற்றி பெற்றிருப்பது மிகவும் வியப்பான ஒன்றாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

**மகத்தான பணி :**

மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட இக்ரா ஹசன், தன்னுடைய பணிகளை தற்போது மேலும் விரிவுபடுத்தியுள்ளார். உத்தரப்பிரதேச பாரதீய ஜனதா அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி வரும் இக்ரா ஹசன், மக்கள் விரோத பாரதீய ஜனதா அரசுக்கு எதிராக தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறார். முஸ்லிம்விரோதபோக்கை கண்டித்துஆர்ப்பாட்டம்செய்வதுடன் அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் அரசின் திட்டங்கள் போய் சேர வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன்இக்ரா ஹசன், ஆற்றிவரும் பணிகள், கைரானா தொகுதி மக்களை மட்டுமல்லாமல் உத்தரபிரதேச மாநில மக்களையும் கவர்ந்து வருகின்றன.

மக்களவையில் தொகுதி சார்ந்த பிரச்சனைகளை மட்டும் பேசாமல் பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் வெறுப்பை விதைத்துப் பலனடையும் போக்கையும் இக்ரா ஹசன் கண்டித்து தனது உரையை ஆற்றுகிறார். இதன் காரணமாக மற்ற எம்.பி.க்களின் கவனத்தையும் அவர் தற்போது கவர்ந்து வருகிறார். இந்திய அரசியலில் அதிரடி ஆதிக்கம் செலுத்தும் ஒரு முஸ்லிம் பெண் ஆளுமை இக்ரா ஹசன் என்றால் அது மிகையாகாது.

## பாத்திமா ருமைஸாவின் அறிவியல் ஆய்வின் மீது மருத்துவ உலகில் புதிய நம்பிக்கை!

கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோடு கூட்டு மணி குடும்பத்தைச் சேர்ந்த தற்போது திருவனந்தபுரத்தில் வசிக்கும் அப்துல் கபூர் அவர்களின் மகளார் ஃபாத்திமா ருமைஸாவின் அறிவியல் ஆய்வு மருத்துவ உலகில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிக் கல்விக்குப் பின் கேரள பல்கலைக்கழகத்தின் காரியவட்டம் வளாகத்தில் B.Sc., Bio Chemistry பாடத்தில் தேர்ச்சி பெற்று தொடர்ந்து அதே கல்லூரியில் 2018ல் M.Sc., Bio Chemistry-ல் முதல் ரேங்குடன்

தேர்ச்சி பெற்றதுடன் அடுத்த ஆண்டு பயோ கெமிஸ்ட்ரி பாடத்திலேயே Ph.D. ஆய்வும் முடித்தவர்.

2019இல் பாலராமபுரத்தைச் சேர்ந்த ஷஃபீக் என்பவரை திருமணம் செய்த பின்பு பெற்றோர் மற்றும் கணவர் குடும்பத்தினரின் ஊக்கம் காரணமாக கேரள பல்கலைக்கழகத்தின் Advance Centre for Tissue Engineering-ல் பயோ கெமிஸ்ட்ரி பாடத்திலேயே ஞான ஆராய்ச்சி மாணவியாக 2021ல் பதிவு செய்தார்.

நீரிழிவு நோய் முற்றிய நிலையிலுள்ள நோயாளிகளுக்கு காயங்கள் நாள்பட்ட நிலையில் ஆறாத புண்களாகி விடுவதால் அந்த உறுப்புகளை முறித்து மாற்றுவதற்கு பதிலாக மருந்து கண்டுபிடிக்க தனது ஆய்வை தொடர்ந்த ருமைஸா, தாவரங்கள், காய்கறிகள், அரிசி, கோதுமையில் காணப்படும் ஃபெறூலிக் அமிலம் நாள்பட்ட புண் காயங்களை குணப்படுத்த உதவும் என்று முதல் கட்டமாக கண்டுபிடித்தார்.

நான்கு வருடங்கள் தொடர்ந்த ஃபாத்திமா ருமைஸாவின் நீண்ட ஆய்வு முடிவில் Hydrogel Dressing எனும் நாள்பட்ட காயங்களுக்கு கட்டுப் போடும் சிகிச்சை முறைக்கு "Synthetic of Ferulic Acid Incorporated Alginate Dialdehyde Gelatin Hydrogel Film" என்ற ஆய்வறிக்கை தயாரானது.

இவரது Hydrogel Dressing ஆய்வுகள் இவரது ஆய்வு வழிகாட்டியான பேராசிரியை எஸ்மினியின் முயற்சியில் பல்கலைக் கழகம் மூலம் விண்ணப்பித்து 20 ஆண்டுகளுக்கு காப்புரிமையும் கிடைத்துள்ளது.

Hydrogel Dressing எனும் காயங்களுக்கு கட்டுப்போடும் சிகிச்சை முறை கண்டுபிடிப்பு Antioxidant, Anti-microbiel, Anti-Inflammatory, Anti-Diabetic Effect என்று பல்வேறு சிகிச்சைக்கு பயன்படுத்த முடியும் என்றும், நாள்பட்ட காயங்களுக்கு இந்த ஜெல்லுடன் கூடிய துணிகளை பயன்படுத்தி கட்டுப் போடும்போது இரண்டு முதல் மூன்று வாரங்களில் முழுமையாக நிவாரணம் கிடைக்கும் என்பதுடன் தோலின் காயத்தின் நிறத்தில் கூட மாற்றம் ஏற்படும் என்பதும் மருத்துவத் துறையில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

## இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் 17 முஸ்லிம் உறுப்பினர்கள் வெற்றி!

இலங்கையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இலங்கை அதிபர் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 159 தொகுதி

களில் வெற்றி பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கு பலத்துடன் பாராளுமன்றத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களில் தமிழ் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்த்து ஏனைய 21 தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி 61.56 சதவீத வாக்குகளைப் பெற்று 159 தொகுதிகளில் ஆட்சியை முழுமையாகக் கைப்பற்றியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 17.66 சதவீத வாக்குகளைப் பெற்று 40 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி 4.49 சதவீத வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களை வென்றெடுத்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன் 3,50,429 வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களை வென்றெடுத்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 87,038 வாக்குகளைப் பெற்று 3 தொகுதிகளை வென்றெடுத்துள்ளது. அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். இது தவிர சாவ்ஜலா அதிகாரம், ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முற்போக்கு தமிழர் தேசிய கூட்டமைப்பு, யாழ்ப்பாண சுயேச்சை குழு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை தலா ஒரு ஆசனங்களை வென்றெடுத்துள்ளன. 1,71,40,354 வாக்காளர்களில் 53 இலட்சம் பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரம் 6,67,340 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ள இத்தேர்தலில் கடந்த பாராளுமன்றத்தில் 20 முஸ்லிம் பிரதிநிதிகள் இருந்தார்கள். இம்முறை அது 17 ஆகக் குறைந்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் கண்டி மாவட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார். அதே நேரம் கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் டாக்டர் றிஸ்வி சாலிஹ் வெற்றி பெற்றுள்ளதோடு, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் மற்றும் மரிக்கார் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் அஷ்ஷெய்க் முனீர் முழப்பர் வெற்றி பெற்றுள்ளார். பாராளுமன்றத்துக்குச் செல்லும் முதலாவது நளீமி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக் களப்பு மாவட்டத்தில் எம்.எல்.ஏ.எம். ஹிஃபுல்லாஹ், கேகாலை மாவட்டத்தில் கபீர் ஹாசிம், கண்டி மாவட்டத்தில் எம்.ஜே.எம்.அஸீம் ஆகியோர் தேசிய மக்கள் சக்தி சார்பிலும், திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இம்ரான் மஹ்ருபும், அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எம்.எஸ்.உதுமான் லெப்பையும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். அதே நேரம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் அம்பாறை மாவட்டத்தில் எம்.எம்.தாஹிர் தேர்வாகியுள்ளார். முன்னாள் அமைச்சர் றிஷாத் பதீஉதீன் மன்னார் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளதோடு, முன் னாள் பிரதி ராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மன்னார் மாவட்டத்தில் தேர்வு செய்யப் பட்டுள்ளார். மாத்துறை மாவட்டத்தில் அக்ரம் முனீர் தேசிய மக்கள் சக்தி மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். குரு நாகல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் எம்.கே.எம்.அஸ்லம் தேர்வாகி யுள்ளார். புத்தளம் மாவட்டத் தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் எம்.ஜே.எம்.பஸால் தேர்வாகி யுள்ளார். முஸ்லிம்கள் கணிசமாக வாழ்கின்ற புத்தளம், களுத்துறை மாவட்டங்களில் எந்த ஒரு கட்சியிலிருந்தும் முஸ்லிம்கள் தேர்வாகவில்லை.

ஒவ்வொரு பாராளுமன்றத் திலும் குறைந்தது 20க்கும் மேற் பட்ட முஸ்லிம்கள் பாராளு மன்றத்தில் இருந்திருக்கிறார் கள். இம்முறை அது 17 ஆக குறைந்திருக்கிறது. தேசியப் பட்டியல் நிரப்பப்பட்டாலன்றி இந்த அங்கத்துவம் தொடர்ந்து இதே நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். வழமைக்கு மாறாக முஸ்லிம் அபேட்சகர்கள், சுயேட்சை மற்றும் அரசியல் கட்சிகளில் போட்டியிட்டதன் காரணமாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைந்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றவர்களில் 176 பேர் புதியவர்கள் ஆவர்.

18 பேர் தேசிய மக்கள் சக்தி சார்பிலும் தேர்வு செய்யப்பட்டி ருக்கிறார்கள். இருவர் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இம்முறை பாராளுமன்றத்துக்கு 21 பெண்கள் தேர்வு செய்யப் பட்டது குறிப்பிடத்தக்கது.

## சல்மான்கானும் டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேலும்...!

மத்திய பிரதேச மாநில தலைநகர் போபாலில் வசிப் பவர் சல்மான்கான். சாதாரண

العرفة لخدمات الحج والعمرة

# அல் அரஃபா ஹஜ் சர்வீஸ்

# AL ARAFAH HAJJ SERVICE

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால்
தொடர்ந்து 17-ஆம் ஆண்டு சேவையில்....

இன்ஷா அல்லாஹ்...
2025

## புனித ஹஜ்

## ₹5,50,000/-

முதல்.....

மாதந்தோறும்

## உம்ரா

## ₹95,000/-

**பயணங்களுக்கு முன் பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது**

எண். 3/4, பத்மாவதி நகர், அண்ணாசாலை,
மேடவாக்கம், சென்னை -100.

**Mobile : 98400 90067**

Email : hajjalarafah@gmail.com

முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த சல்மான்கானிடம் இஸ்லாமிய மார்க்கம் சொல்லித் தந்த ஈகை குணம் கொஞ்சம் அதிகமாகவே இருந்து வருகிறது. போபாலில் உள்ள முக்கிய வீதியில் சாலையோர கடை ஒன்றை நடத்தி வரும் இவர், காய்கறி, பழம் உள்ளிட்ட உணவு வகைகளை விற்பனை செய்து வருகிறார். வணிகத்தில் நேர்மையுடன் செயல்படும் சல்மான், ஏழை - எளிய மக்களிடம் பணம் வாங்காமல் பொருட்களை கொடுத்து விடுவார். அவர்கள் விரும்பிக் கொடுக்கும் பணத்தை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியடைவார்.

வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என நினைக்கும் இளைஞர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அவர்களிடம் பணத்தை வாங்காமல் காய்கறி, பழம் ஆகியவற்றை இலவசமாகக் கொடுத்து அவர்களின் இலட்சியப் பயணம் தொடர உதவுவார்.

இப்படி சல்மான்கான் உதவி செய்த பலரில் ஒருவர், தற்போது இந்தூரில் டி.எஸ்.பி. யாக பணியில் சேர்ந்துள்ளார்.

**டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேல் :**

போபாலில் கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு, சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்த இளைஞர் தான் சந்தோஷ் பட்டேல். அவரிடம் கைகளில் காசு இல்லை. ஆனால் உயர்ந்த இலட்சியம் மட்டுமே பட்டேலிடம் இருந்தது. அப்போது தான் சல்மான் கானின் அறிமுகம் சந்தோஷ் பட்டேலுக்கு கிடைத்தது.

சல்மான்கானின் சாலையோர கடைக்கு வந்த இளைஞர் சந்தோஷ்பட்டேல், அவரிடம் காய்கறி, பழம் மற்றும் சமையலுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் சென்று தன்னுடைய அறையில் சமைத்து சாப்பிடுவார். இலட்சிய இளைஞர் சந்தோஷ் பட்டேலிடம் பணமில்லை என்பதை அறிந்து கொண்டு அவருக்கு கொடுக்கும் பொருட் களுக்கு சல்மான் கான் பணம் வாங்கியதேயில்லை. இப்படி நீண்ட நாட்கள் தொடர்ந்த போதும் சல்மான் கான், இளைஞர் சந்தோஷ் பட்டேலிடம் தாம் விற்பனை செய்த பொருட்களுக்கு பணம் கேட்டதேயில்லை.

காலம் விரைவாக ஓடியது. சந்தோஷ் பட்டேல் சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று இந்தூரில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளராக (டி.எஸ்.பி.) நியமிக்கப்பட்டார்.

**இன்ப அதிர்ச்சி :**

இலட்சியத்தை அடைந்து உயர் பதவியில் அமர்ந்த டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேலுக்கு தன்னுடைய நெருக்கடியான நேரங்களில்

உதவி செய்த சல்மான்கானை சந்திக்க வேண்டும் என மனதில் ஆவல் இருந்து கொண்டே யிருந்தது. போபாலுக்கு சென்று சல்மான்கானை சந்திக்க முடிவு செய்த பட்டேல், 14 ஆண்டு களுக்குப் பிறகு அண்மையில் சல்மான்கானை சந்தித்தார். போபாலிலுள்ள அதே சாலை யோர கடையில் வழக்கம் போல் வணிகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சல்மான்கானை அழைத்துஎன்னை அடையாளம் தெரிகிறதா? என்ற கேள்வியை முன் வைத்தது தான் தாமதம். சல்மான்கான் புன்னகையுடன் “நன்றாக அடையாளம் தெரிகிறது. பட்டேல் பாபு தானே நீங்கள்” என்று சொன்னதுதான் தாமதம் டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேல், சல்மான்கானை கட்டித் தழுவி தன்னுடைய அன்பை வெளிப் படுத்தி மகிழ்ச்சியடைந்தார்.

ஒரு காவல்துறை அதிகாரி, சாதாரண சாலையோர முஸ்லிம் வணிகரை கட்டித் தழுவி நலம் விசாரிப்பதை அங்கு கூடியி ருந்த மக்கள் கண்டு வியப்பும், ஆச்சரியமும் அடைந்தனர்.

அப்போது டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேல் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் மனிதநேயம் கொண்டது.

போபாலில் நான் கஷ்டப் பட்டபோது எனகு உதவி செய்த சல்மான் கானை எப்படி என்னால் மறக்க முடியும்? என்னிடம் பணமில்லாதபோதும் அதைப் பற்றி கவலைப்படாமல் எனகு உணவுப் பொருட்களை தந்த மனிதநேய புனிதர் சல்மான்கான். எப்போதும் என் மனதில் உயர்ந்த இடத்திலிருந்து வருகிறார். வாழ்க்கையில் நல்ல மனிதர்களை நாம் காண்பது அரிதாகிப் போன இந்த காலத் தில், சல்மான்கான் எனக்கு செய்த உதவிகளை நான் எப்படி மறக்க முடியும்? அப்படி மறந் தால் நான் மனிதனே இல்லை” இப்படி டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேல் கூறியதை கேட்ட மக்கள்,அவரது பெருந்தன்மைக்கு பாராட்டு தெரிவித்தனர்.

சல்மான்கானை 14 ஆண்டு களுக்குப் பிறகு சந்தித்த டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேல், அவருடைய தற்போதைய நிலை, பழைய இடத்திலேயே வணிகம் செய்கிறாரா போன்ற விபரங்களைக் கேட்டறிந்து கொண்டு, அவரை அழைத்துக் கொண்டு அந்த சாலையோர கடைக்குச் சென்று, காய்கறி, பழம் ஆகியவற்றை வாங்கி மகிழ்ச்சியடைந்தார். அத்துடன் எந்த உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேட்க வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்ட சந்தோஷ் பட்டேல், தன்னுடைய தனிப்பட்ட செல்பேசி எண்ணை யும், சல்மான்கானிடம் கொடுத்தது மட்டுமின்றி, அவருடைய செல்பேசி எண்ணையும் கேட்டு வாங்கிக் கொண்டார். விடை பெறுவதற்கு

முன்பு மீண்டும் ஒரு முறை சல்மான்கானை டி.எஸ்.பி. சந்தோஷ் பட்டேல் கட்டித்தழுவி அன்பை வெளிப்படுத்தினார்.

**மக்கள் மத்தியில் வரவேற்பு :**

இந்த அற்புதமான அன்பை வெளிப்படுத்தும் சம்பவம் தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி நாடு முழுவதும் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியது. ஒரு இந்து சகோதரர், தனக்கு உதவி செய்த முஸ்லிம் தோழரை 14 ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்து, நன்றி கூறி, அன்பை வெளிப்படுத்திய சம்பவம் பாரதீய ஜனதா போன்ற கட்சி கள் மக்கள் மத்தியில் வெறுப்பை விதைத்தாலும் நாட்டில் சல் மான் கான், சந்தோஷ் பட்டேல் போன்ற நல்ல உள்ளங்கள் இருக்கும் வரை இந்துத்துவ அமைப்புகளின் எண்ணங்கள் நிச்சயம் நிறைவேறாது என உறுதியாகக் கூறலாம்.

**“முஸ்லிம்களின் ஆதரவில்லாமல் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றிருக்க முடியாது” அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் டிரம்ப் புகழாரம்**

அமெரிக்காவின் புதிய அதிபரை தேர்வு செய்யும் தேர்தல் நவம்பர் 5ஆம் தேதி நடந்து முடிந்தது. இந்த தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்ட் டிரம்ப், அமோக வெற்றி பெற்று அமெரிக்கா வின் 47வது அதிபராக தேர்வு செய்யப்பட்டார். ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டி யிட்ட கமலா ஹாரிஸ், டிரம்பை விட குறைவான வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

உலகம் முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்தத் தேர்தல் முடிவுகள் பலரை வியப்பில் ஆழ்த்தியிருக்கலாம். பொதுவாக கமலா ஹாரிஸ் வெற்றி பெறுவார் என ஒரு சில கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. ஆனால், தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக இருந் தன. டொனால்ட் டிரம்ப்பின் வெற்றிக்கு முக்கிய காரணம் யார்? என்ற கேள்விகள் எழுந்து கொண்டேயிருக்கின்றன. அதற்கு டொனால்ட் டிரம்ப் மிகவும் அழகான முறையில் பதிலளித்துள்ளார்.

**அமைதியின் மார்க்கம் இஸ்லாம் :**

அமெரிக்காவில் தற்போது மக்களை வேகமாக ஈர்த்து வரும் மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருகிறது. இதனை நன்கு உணர்ந்து கொண்ட டொனால்ட் டிரம்ப் தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது இஸ்லாம் குறித்தும், இஸ்லாமியர் கள் குறித்தும் மிகவும் புகழ்ந்து பேசினார். “அமைதியின் மார்க்கம் இஸ்லாம்” எனக்

குறிப்பிட்ட அவர், முஸ்லிம்கள் அமெரிக்காவின் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த முறையில் சேவை யாற்றி வருவதாக புகழாரம் சூட்டினார். இஸ்லாம் குறித்து முன்பு தவறான புரிதல் தமக்கு இருந்ததாக குறிப்பிட்ட அவர், தற்போது அந்தக் கருத்து நீங்கி விட்டதென்றும் உலகில் மக்களை அமைதிப்படுத்தும் மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருகிறது என்றும் டிரம்ப் கூறியது அமெரிக்க முஸ்லிம்களை மிகவும் வியப்படையச் செய்தது.

இஸ்லாம் மற்றும் இஸ்லாமியர்கள் குறித்து டொனால்ட் டிரம்புக்கு நல்ல எண்ணம் ஏற்பட்டிருப்பதை அறிந்துகொண்ட அமெரிக்க முஸ்லிம்கள், அதிபர் தேர்தலில் அவருக்கு முழு ஆதரவளித்தார்கள். முஸ்லிம்களின் இந்த முழு ஆதரவு காரணமாக அதிபர் தேர்தல் சவால் நிறைந்திருந்த போதும் மிகவும் எளிதான முறையில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றார். தனது வெற்றிக்குப் பிறகு கூட அவர் முஸ்லிம்களைப் புகழ்ந்து கருத்து கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**வேகமாகப் பரவும் இஸ்லாம் :**

உலகம் முழுவதும் மிகவும் வேகமாகப் பரவும் மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருகிறது. அமைதி மற்றும் சகோதரத்துவம், சகிப்புத்தன்மை உள்ளிட்ட பல காரணங்களால் இஸ்லாமிய மார்க்கத்தை தேடி மக்கள் அலை அலையாக வந்து கொண்டேயிருக்கிறார்கள். ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் இஸ்லாமிய மார்க்கம் மக்களை மிகவும் வேகமாக கவர்ந்துவரும் நிலையில், அமெரிக்காவில் அது இன்னும் முழுவீச்சில் பரவி வருகிறது.

அமெரிக்காவின் ஒவ்வொரு மாகாணங்களிலும் மஸ்ஜிதுகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இஸ்லாமிய மார்க்கம் குறித்து மக்களிடையே நல்ல முறையில் எடுத்துக் கூற இஸ்லாமிய மையங்கள் (Islamic Centres) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக இஸ்லாம் எத்தகைய மார்க்கம்? அதில் வாழ்க்கையின் அமைதிக்கு என்ன தீர்வு சொல்லப்பட்டிருக்கிறது? போன்ற கேள்விகள் சகோதரச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களிடம் எழுந்து வருகின்றன. இந்தக் கேள்விகளுக்கு இஸ்லாமிய மையங்கள் நல்ல விளக்கங்களை அளித்து வருகின்றன. இஸ்லாமிய மையங்கள் அளிக்கும் விளக்கங்கள் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளும் வகையில் இருப்பதால் அமெரிக்கர்கள், இஸ்லாமிய மார்க்கம் மீது பற்று கொண்டு அதனை தங்களுடைய வாழ்வியல் மார்க்கமாக ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். இதனால் தற்போது அமெரிக்காவில்

வேகமாக பரவும் மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருகிறது.

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நாடாக அமெரிக்கா இருந்துவரும் நிலையில், அங்கு அமைதி மற்றும் சகோதரத் துவத்தின் மார்க்கமாக இருக்கும் இஸ்லாம், மக்களை கவர்ந்துவரு வது பலரை வியப்பில் ஆழ்த்தி வருகிறது. அமைதியின் மார்க்க மாக இஸ்லாம் இருப்பதால், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என புதிய அதிபர் டொனால்ட் டிரம்ப் வேண்டு கோள் விடுத்துள்ளார். டிரம்ப்பின் இந்த அழைப்பு முஸ்லிம்கள் குறித்து அவர் ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாட்டி லிருந்துமாறுபட்டிருந்தது. இதன் மூலம் ஓர் உண்மை மிகவும் தெளிவாக தெரிய வருகிறது. இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்பதையும், இஸ்லாமியர்கள் சகோதரத்துவத்தை நேசிப்பவர் கள் என்பதையும் டொனால்ட் டிரம்ப் உணர்ந்து கொண்டிருப் பது உறுதியாக தெரியவருகிறது.

அமெரிக்காவில் மட்டு மல்லாமல் ஐரோப்பியா முழு வதும் இஸ்லாமிய ஒளி தற்போது வேகமாகப் பரவி வருகிறது. மக்களின் மனங்களை பெரிதும் கவரும் மார்க்கமாக இஸ்லாம் இருந்து வருகிறது. இஸ்லாம் மிகவும் சக்தி வாய்ந்த ஆன்மிக நெறிமுறைகளை மக்களுக்கு சொல்லித் தருவதால் அதன் மூலம் அமைதியான வாழ்க்கைக்கு வழிகிடைக்கிறது. இதனை அமெரிக்க மக்கள் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடு களின் மக்களும் தற்போது நன்கு உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

**எதிரியாக நினைத்தவர்களின் மனங்களில் மாற்றம் :**

ஒரு காலத்தில் இஸ்லாமிய மார்க்கத்தை தங்கள் எதிரியாக நினைத்த அமெரிக்கர்கள் தற் போது அது ஒரு சக்தி வாய்ந்த ஆன்மிக நெறி என்பதை நன்கு உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இஸ்லாத்தை வெறுத்தவர் களின் மனங்களில் மிகப் பெரிய மாற்றம் தற்போது ஏற் பட்டுள்ளது. ஒவ்வொரு முறை யும் இஸ்லாத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தா லும் இஸ்லாமிய வளர்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. வெறுப்பு பிரச்சாரம்தான் அமெரிக்க மக்கள் மத்தியில் ஒருவித தேடுதல் வேட்டையை உரு வாக்கியது. அவர்கள் இஸ்லாம் குறித்து அறிந்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டார் கள். அந்த முயற்சிகள் அனைத் தும் அவர்களை இஸ்லாமிய மார்க்கத்திற்குள் நுழைய வைத் தன. அதன்மூலம் அமைதியின் மார்க்கத்தில் அமெரிக்க மக்கள் நுழைய ஆரம்பித்து தற்போது அமைதியான மற்றும் மகிழ்ச்சி யான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இஸ்லாம்

என்பது உண்மையான மார்க்க நெறி என்பதை புரிந்து கொண்ட அமெரிக்க மக்கள் அவர்களின் மனங்களில் ஏற்கனவே இருந்த எதிர்ப்பு எண்ணங்களை கைவிட ஆரம்பித்தார்கள். சரியான புரிதல் எற்பட்ட காரணத்தால் இஸ்லாமிய மார்க்கம் மீது அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டு, அதுவே வாழ்க்கை நெறியாக மாறிவிட்டது.

இதன் காரணமாக அமெரிக்காவில் மிகவும் வேக மாகப் பரவும் மார்க்கமாக இஸ் லாம் இருந்துவருகிறது. இதனை நன்கு உணர்ந்து கொண்ட டொனால்ட் டிரம்ப் தான் ஏற் கனவே முஸ்லிம்கள் குறித்து தவறாகநினைத்திருந்ததாகவும், தற்போது அந்த எண்ணம் மாறி விட்டதுஎன்றும் டிரம்ப் கூறினார். தேர்தல் வெற்றிக்குப் பிறகு பேசிய அவர் “அமெரிக்க முஸ்லிம் கள் மட்டுமல்ல. உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் அமைதியான உலகிற்கு தங் களது பங்களிப்பை வழங்க வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் எதிரி மார்க்கமாக இருந்த இஸ்லாம் தற்போது அமெரிக்கர்களின் ஆதரவு மார்க்கமாக மாறி விட்டது என்பதை உறுதியாக அறிந்து கொள்ள முடிகிறது.

**பிரிட்டனில் மாற்றம் :**

அமெரிக்காவில் மட்டு மல்ல, பிரிட்டன், ஜெர்மனி உள் ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இஸ்லாமிய மார்க்கத்தின் மீது மக்கள் ஆர்வம் கொண்டு வரு கிறார்கள். அதன் காரணமாக பிரிட்டனில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிறப்பு பிரசங்கம் (பயான்) செய் வதை வானொலி மூலம் ஒலிபரப்ப அந்நாட்டு அரசு முடிவு செய் துள்ளது. இதே போன்று ஜெர்மனியில் அதான் எனும் பாங்கு ஒலிப்பரப்பப்பட்டு வரு கிறது. கனடா, நியூசிலாந்து உள் ளிட்ட நாடுகளின் நாடாளு மன்றங்களிலும் அல்குர்ஆனின் வசனங்கள் ஓதப்பட்டு வரு கின்றன. ஒரு காலத்தில் பாங்கு ஒலியை தடை செய்த நாடுகள், தற்போது அந்த தடையை நீக்கி விட்டன. அதற்கு முக்கிய காரணம் மக்களின் மனங்களில் மிகப் பெரிய அளவுக்கு மாற்றம் ஏற்பட்டுவரும் நிலையில் அதை தடைகள் மூலம் தடுக்க முடி யாது என்பதை அந்த நாடுகள் நன்கு உணர்ந்து கொண்டிருப்ப தாகும். அமெரிக்கா உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகளில், மக்கள் சந்திக்கும் மனரீதியான பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வு தரும் மார்க்கமாக இஸ்லாம் இருப்பதால் அது மிகப் பெரிய சக்திவாய்ந்த ஆன்மிக நெறியாக மக்கள் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

செய்தி :

**பாவா, ஜே.அப்துஸ் ஸலாம்**

துவக்கம் : 1958

குர்ஆனின் குரல் 68வது ஆண்டு

நம்பர் 1 மாத இதழ்

# குர்ஆனின் குரல்

நிறுவனர்கள் :

அல்லாமா **அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி ஹள்ரத்** (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்" **அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ ஹள்ரத்** (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா முஃப்தீ **மு.முஹம்மது இஸ்மாயீல்**

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ ஹள்ரத்

**குர்ஆனின் குரல்** தபால் பெட்டி எண் : 45,

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை-625020.**

**அலுவலக அலைபேசி எண் : 94420 56547**

**E.mail : quraaninkural@gmail.com ★ web : www.quraaninkural.com**

**ஓராண்டு சந்தா ரூ.300/- ⬟ தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :**

**Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,**

**M.MOHAMED ISMAIL**

**S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003**

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**

**M/s. INDIAN OVERSEAS BANK, Madurai Meenakshi College Branch,**

**M.MOHAMED ISMAIL**

**S.B. A/c No. 17570100003467 IFSC Code : IOBA0001757**

**Google Pay Name: QURANIN KURAL Google Pay No. : 9486729192**

**QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH**

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

**ஒட்டகம்**

அரேபியாவில் ஒட்டகங்களைப் பணமாகப் பயன்படுத்தினர்.

**கல்**

மதிப்புக்கருவி எதுவாகவும் ஆகலாம். கல்லாகவும், மண்ணாகவும் இருக்கலாம்.

**யாப்**

யாப் என்னும் தீவில் வசித்த மக்கள் கற்களை பெருஞ்செல்வமாகக் கருதினர். அந்தத் தீவில் கொடுக்கல், வாங்கல் முதலிய எல்லா வர்த்தகங்களிலும் இக்கற்களே நாணயங்களாக வழங்கப்பட்டன. தூக்க முடியாத கற்களை மாற்றிக் கொள்ளும்போது வாங்குபவர் தனது பெயரை பொறித்துக் கொள்வார்.

**தங்கம்**

தற்காலத்தில் தங்கத்தை அனுப்பாமலே ஒரு வங்கியிலுள்ள தங்கத்தை வேறொரு வங்கியின் கணக்கிற்கு மாற்றிக் கொள்ளும் வழக்கத்திற்கும் அனுமதியிருப்பதாக கெய்ன்ஸ் கூறுகிறார்.

**பொன்**

ஆதியில் சீனா, இந்தியா, பாபிலோனில் பொன், பண்ட மாற்றுப் பொருளாக வழங்கப் பட்டது. கிரேக்கத்தில் இரும்பு பண்ட மாற்றுப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டது.

**செம்பு**

இத்தாலியில் செம்பும், மலேசியாவில் தகரமும் பண்டமாற்றுப் பொருளாக உபயோகிக்கப்பட்டது.

**பொன் - வெள்ளி**

இறுதியில் எல்லாத் தேசங்களிலும் பெரும்பாலும் வெள்ளியும், பொன்னும் ஆகிய இரண்டு உலோகங்களே பண்ட மாற்றுப் பொருள்களாயின. அவை கிடைப்பதற்கரியவை. எல்லோராலும் விரும்பப்படுபவை. சிறிய உருவில் உயர்ந்த விலை மதிப்புடையவை. சேமித்து வைக்கவும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டு செல்லவும் எளிதானவை.

**பவுண்டு**

பண்டமாற்றுக் கருவியாக ஆங்கிலேயர் 20 அவுன்ஸ் நிறையுள்ள ஒரு பவுண்டு (Libra) வெள்ளியை

உபயோகித்தனர். அந்நிறையில் செய்யப்பட்ட நாணயம் ஒரு பவுண்டு என வழங்கப்பட்டது. நாளடைவில் நாணயத்தின் வெள்ளியின் அளவு குறைக்கப் பட்டு, 5 அவுன்ஸ் எடையாக மாறியது. எனினும் இவ்வெள்ளி நாணயம் 20 அவுன்ஸ் நிறை யுள்ள பழைய பெயராலேயே வழங்கப்பட்டது.

## கி.பி. 1816 கால் காசு பெறாத காகிதம்

கி.பி.1816இல் இந்நாணயம் அதில் அடங்கிய வெள்ளி மதிப் பிற்குச் சரியான சுமார் கால் அவுன்ஸ் தங்க எடை கொண்ட தங்க நாணயமாகச் செய்யப் பட்டது. ஆனால் பெயரோ பவுண்டுதான்; தற்சமயம் ஆங்கிலேயர் வழங்கும் நாணயம் தங்கமல்ல; கால் காசு பெறாத காகிதம்; எனினும் அதன் பெயர் பவுண்டு அதாவது 20 அவுன்ஸ் வெள்ளி எடை என்றே கூறப்படுகிறது.

## உலோகக் கட்டிகளில் முத்திரை

பொன், வெள்ளியிலான கட்டிகளில் வர்த்தகர்கள் தங்கள் முத்திரையை (Seal) இட்டனர். இவ்வாறு முத்திரையிடப்பட்ட கட்டிகளை, பொருள்களை வாங்கும் போதும், விற்கும் போதும் பயன்படுத்தினர்.

## அரசாங்க முத்திரை

சிறிது காலத்தில் முத்திரை கட்டிகளைப் போன்று போலிக்கட்டிகள் தோன்றின. வணிகர்களும், அரசாங்கமும் சதுரவடிவமான சிறு சிறு துண்டுகளாக்கி இரு பக்கமும் விளிம்புவரை முத்திரையிட்ட னர். சதுரவடிவில் முத்திரையிட சிரமமானது. எனவே, வட்டவடிவ மாகச் செய்யப்பட்டு விளிம்பு வரை முத்திரையிடப்பட்டது. இவ்வாறு அரசாங்க முத்திரை யிடப்பட்ட உலோகத் துண்டு களே நாணயங்களாயின (Coins).

## லிதியா

சிறிய ஆசியாவிலுள்ள (Asia Minor) லிதியா (Lydia) நாட்டில் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் இத்தகைய நாணயங்கள் உரு வாக்கப்பட்டதாக ஸ்டென்லி சிவோன்ஸ் குறிப்பிடுகிறார்.

## ஸோலோன்

கிரேக்கர்கள் ஏழு பேரை பரம ஞானிகள் என்று போற்றி வந்தார்கள். பெரியாண்டர் (Periandar) கி.மு.625 - 585) தேலீஸ் (Thales) பையாஸ் (Bias), ஸோலோன் (Solon), ஃபிட்டாக்கஸ் (Fitacus), சைலோன் (Chilon), கிளியோபூலஸ் (Cleobulus), ஆத்தென்சுக்கு அரசியலை வகுத்துக் கொடுத்தவன் ஸோலோன். ஆதென்சின் மகா மேதாவி, கர்மவீரன், கவிதை உள்ளம் படைத்தவன், பரம்பரை பிரபு வம்சத்தைச் சேர்ந்தவன்.

## கி.மு. 594 - 572

கி.மு. 594இல் ஸோலோனுக்கு 44 அல்லது 45வது வயது இருக்

கும். ஆர்க்கோன் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவி யிலிருந்து விலகும்போது வயது 66. கி.மு.572-ல் எல்லோரும் திருப்தியுடன் இவரைப் பதவி யில் அமர்த்தினார்கள். ஆனால், பதவியிலிருந்து விலகுகிற போது, எல்லோருடைய அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டான். இதனால் ஸோலோன் எல்லோருடைய நன்மையையும் நாடினான். எல்லோருக்கும் நியாயமாக நடந்து கொண்டான் என்று புலனாகிறதல்லவா?

### சீர்திருத்தங்கள்

ஸோலோன் செய்த சீர்திருத்தங்கள் பலப்பல. அடிமைகளை விடுவித்தான்; விவசாயக் கடன்களை ரத்து செய்தான்; தொழில் வளர்ச்சிக் கும், வியாபாரப் பெருக்கத்திற் கும் ஏற்பாடுகள் செய்தான்.

### நாணய மாற்று விகிதம்

ஸோலோன் நாணய மாற்று விகிதத்தை ஒழுங்குபடுத்தி னான். ஸோலோன் இயற்றிக் கொடுத்த சட்டங்கள் ஸோலோனுக்குப் பிறகு ஐந்து நூற்றாண்டு வரை, காலத்திற் கேற்ற சிற்சில மாறுதல்களுடன் அமலில்இருந்தன. கி.மு.558இல் ஸோலோன் இறந்தான்.

### லைக்கர்கஸ் (Lycurgus)

கிரேக்கத்தில் லைக்கர்கஸ் ஆட்சியின்போது இரும்பு நாணயத்தை பணமாகப் பயன்படுத்தியதற்கு வரலாற் றில் குறிப்புகள் உள்ளன.

### வெள்ளி நாணய எடை குறைப்பு

கி.மு.594இல் ஆதென்ஸின் சர்வாதிகாரியாக ஏகமனதாக நியமிக்கப்பட்ட ஸோலோன், அந்த நாட்டு வெள்ளி நாணயங் களின் எடையில் கால் பகுதி யைக் குறைத்தான். அத்தோடு புதிய நாணயங்களை பழைய நாணயங்களின் மதிப்பின்படியே அங்கீகரிக்க வேண்டும் என்றான். மக்களும் அவ்வாறே செய்தனர்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுக்கு முன் நடை பெற்ற சரித்திர நிகழ்வு அது.

### இந்தியாவின் ஸோலோன் முஹம்மது பின் துக்ளக்

கிரேக்கத்திலிருந்து இந்தியாவிற்கு வருவோம். இந்தியாவின் ஸோலோன் முஹம்மது பின் துக்ளக் ஆவார்.

அரை அணா மதிப்புள்ள (3 காசுகள்) 100 காசுகள் ஒரு ரூபாய் செப்புக்காசுகளின் மதிப்பிலிருந்து அவற்றை வெள்ளிக்காசுகளாகிய ரூபாயின் மதிப்பிற்குச் சமமாக குடிமக்கள் பயன்படுத்த வேண்டுமென முஹம்மது பின் துக்ளக் உத்தரவிட்டான். மக்களும் சில காலம் அவற்றை அவ்வாறே வழங்கி வந்தனர்.

ஆனால் செப்புக்காசுகளைப் பதிப்பித்து அவற்றை உயர்ந்த

மதிப்புடன் பயன்படுத்துவதால் உண்டாகும் இலாபத்தை அறிந்த பலரும் முஹம்மது பின் துக்ளக் பதிப்பித்த செப்புக் காசு களைப் போல தத்தம் சொந்தச் செப்புக்காசுகளை வெளியிட் டனர். அதனால் முஹம்மது பின் துக்ளக் இயற்றிய அடையாள நாணயத்திட்டம் பிழையானது.

**அரியதோர் உண்மை**

கிரேக்க ஸோலோன், கி.மு.594; இந்திய முஹம்மது பின் துக்ளக் (கி.பி.1325 - 1351) இரு உதாரணங்களிலும் அரிய தோர் உண்மை அறியக்கிடைக் கின்றன. அந்த நாணயம் உலோகத்தால் ஆனதாலும் அவ் வுலோகத்தின் விலை மதிப் பிற்கும், நாணயத்தின் விலை மதிப்பிற்கும் நேர் சம்பந்தம் இருக்க வேண்டும் என்ற நிமித்தம் இல்லை. நாணய மதிப்பு உலோக மதிப்பினின் றும் வேறாக இருக்கலாம் என்பதே உண்மையாகும். இதைத்தான் ஸோலோனும், முஹம்மது பின் துக்ளக்கும் கடைபிடித்தார்கள்.

**கி.பி.1504 - ஷிலிங்**

இங்கிலாந்தில் கி.பி.1504இல் ஷிலிங் (Shilling) வெள்ளி நாணயம் வெளியிடப்பட்டது. வெள்ளி மதிப்பும், (bullio in value), அரசாங்கம் இட்ட நாணய மதிப்பும் (Value in the money account) சமமாக இருந்தன.

16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் வெள்ளி உற்பத்தி மிகுந்தது. ஷிலிங் நாணயத்தில் அடங்கிய உலோக மதிப்புக் குறைந்தது.

1504ஆம் ஆண்டிற்குப் பின் வெளியிடப்பட்ட ஷிலிங் நாணயங்கள் முழு மதிப்புடை யவையாக இருந்தன. நல்ல நாணயங்களாகக்கருதப்பட்டன. குடிமக்கள் நல்ல நாணயங் களை கைவசப்படுத்தினர். பொற்கொல்லர்கள் அதனை உலைக்கு அனுப்பி உலோகமாக மாற்றி விற்றனர். நல்ல நாண யங்கள் செலாவணியற்றவை. கெட்ட நாணயங்களே புழக்கத்தில் இருந்தன.

(தொடரும்)

---

**விறகு வெட்டியே சிறந்தவர்!**

“உங்களில் ஒருவர் விறகு (சேகரித்து அதன்) கட்டு ஒன்றை முதுகில் சுமந்து (விற்கச்) செல்வது அவர் ஒருவரிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும். ஏனெனில், (அப்படிக் கேட்கும் போது) அவர் இவருக்குக் கொடுக்கவும் செய்ய லாம்; கொடுக்காமலும் போகலாம்” என்று இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா(ரளி) அவர்கள் (புகாரீ)

# நம் வழி நபிமார்களின் வழி

மவ்லவீ **பி.எம்.கல்லூர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

இறைவன், மனித இனத்தை தன்னை வணங்குவதற்காகவே படைத்திருக்கின்றான். அந்த நோக்கத்திலிருந்து மனிதர்கள் திசை மாறிச் சென்றுவிடக் கூடாது என்பதற்காகவே நபிமார்களையும், வேதங்களையும் அல்லாஹ் வழங்கினான்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் மனிதர்களிடம் குற்றங்கள் பெருகும்போது அல்லாஹ் புதிது புதிதாக நபிமார்களை அனுப்பி வைத்துக் கொண்டே இருந்தான்.

மனிதர்களை நல்வழிப்படுத்த மனிதர்களிலிருந்தே ஒரு தூதரை அல்லாஹ் தேர்வு செய்து அனுப்பி வைத்தான்.

மனிதன் நாகரீகமாகவும், பிறருக்கு அடிமையாக இல்லாமல் சுதந்திரமாக வாழவும், சக்தி வாய்ந்த ஒரே இறைவனை முறையாக வணங்கவும் வழிகாட்டுவதற்காகவே நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள்.

ஒரு வேளை இறைவனால் நபிமார்கள் அனுப்பப்படாமல் போயிருந்தால் இன்று மனித நாகரீகம் எப்படி இருந்திருக்கும்?

மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் அனைத்தும் சுயமாக வாழத் தேவையான அனைத்து அறிவுகளையும் அல்லாஹ் வழங்கியிருக்கின்றான்.

ஆனால், மனிதனுக்கு ஆறாவது அறிவு என்ற பகுத்தறிவை வழங்கியதால் அவன் ஒன்றைப் பார்த்து அல்லது ஒருவரின் அறிவுரையை கேட்டுத்தான் ஒன்றை விளங்குவான். அதனால் அவனுக்கு சரியான வழிகாட்டுதல் வழங்கப்பட்டு விட்டால் அவன் சிறப்பாக வாழ்வான் என்பதை அறிந்திருந்த அல்லாஹ் அந்த வழிகாட்டுதலை வழங்குவதற்காக நபிமார்களை அனுப்பினான்.

## நபிமார்களின் சேவை சமூகத்திற்குத் தேவையா?

உலகத்தில் மதம் மற்றும் மார்க்கம் என்பது ஒன்றுதான். அதை வலுப்படுத்தவும், அதில் மக்களை நெறிப்படுத்தவும் அனுப்பப்பட்டவர்களே நபிமார்கள்.

ஒருவர் ஒரு பொருளைத் தயார் செய்து வைத்திருக்கின்றார். அதை விற்பனை செய்ய விற்பனை முகவர்களை அழைத்துத் தன் பொருளின்

தரம் மற்றும் அதன் ஏற்றத் தாழ்வுகள் குறித்துச் சொல்லிக் கொடுக்கின்றார்.

பின்னர் அந்த முகவர்கள் பொதுமக்களிடம் சென்று பொருட்களின் தரம் மற்றும் அதன் ஏற்றத்தாழ்வுகள் குறித்துச் சொல்லி அதை வாங்கும்படி செய்வார்.

அதுபோலத்தான் அல்லாஹ் இந்த உலகத்தைப் படைத்து உலகத்திலுள்ள வற்றை பயன் படுத்தும் வரை முறைகளை நபிமார்களிடம் எடுத்துச் சொன்னான்.

நபிமார்கள் மக்களிடம் சென்று, இந்த உலகத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் நீங்கள் தொழ வேண்டும், நோன்பு நோற்க வேண்டும், பொய் பேசக்கூடாது, பொய் சத்தியங்கள் செய்யக் கூடாது" என்பது போன்ற வரை யறைகளை பொதுமக்களிடம் பிரகடனப்படுத்தினார்கள்.

அதாவது அல்லாஹ்விற் கும் பொது மக்களுக்கும் இணைப்பை ஏற்படுத்தும் ஒரு மத்தியஸ்தர்களாக நபிமார்கள் இருக்கிறார்கள்.

பூமியை தவறாகபயன்படுத்தி னால் என்ன நிலை ஏற்படும்? தொழுகவில்லை என்றால் என்ன ஏற்படும்? என்பதை அல்லாஹ்விடமிருந்து கேட்டு மக்களிடம் சொல்லும் முக்கியஸ் தர்களாக இருந்தார்கள்.

## தீர்க்கதரிசிகள் அனைவரும் முஸ்லிம்களே!

**"மார்க்கம் என்பது அல்லாஹ்விடத்தில் இஸ்லாம் மட்டுமே மார்க்கமாகும்"**

- அல்குர்ஆன் (3 : 19)

**"இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எவர் (எதைக்) கருதினாலும், அவரிடமிருந்து அது ஏற்கப்படாது; அவர் மறு உலகத்தில் இழப்பை சந்தித்தவர்களில் இருப்பார்"**

- அல்குர்ஆன் (3 : 95)

**"எனது சமுதாயத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொள்பவர்களாக இருந்தால் அவனிடமே பொறுப்பு சாட்டுவீர்களாக! நீங்கள் முஸ்லிம்களாக இருந் தால் (அவனிடமே பொறுப்பு சாட்டுவீர்களாக)" என்று மூஸா (அலை) அவர்கள் தம் கூட்டத்தாரிடம் கூறினார்கள்.**

- அல்குர்ஆன் (10 : 84)

**"அல்லாஹ்வை வணங்குங் கள்; அட்டகாசம் செய்யும் ஷைத் தான்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல் வதற்காக ஒவ்வொரு சமுதாயத் திலும் ஓர் இறைத்தூதரை நாம் அனுப்பி வைத்தோம்"**

- அல்குர்ஆன் (16 : 36)

## களமாடிய கனவான்கள்

மனிதர்களின் மனதை சரி செய்யவும், அதை அழகுப்படுத்

தவும், அதை தூய்மைப்படுத்தவும், அதை அனைத்து வகையான தீங்குகளிலிருந்தும் விடுவித்து தீமைகளுக்கு எதிராக களமாட கற்பிக்கவும் அனுப்பப்பட்டவர்களே நபிமார்கள்.

மேலும், நேரான பாதையில் மக்களை வழிநடத்தவும், நிலையான நல்வழிகளில் நிலைத்திருக்கச் செய்யவும், போற்றுதலுக்குரிய நல்லொழுக்கங்களின் பக்கம் மக்களை ஒருமுகப்படுத்தவும், விரும்பத்தகாத செயல்களை செய்வதிலிருந்து பாதுகாக்கவும் அனுப்பப்பட்டவர்களே நபிமார்கள்.

**"அவன் தான் கல்வியறிவு இல்லாதவர்களுக்கு அவர்களில் ஒருவரை தூதராக அனுப்பினான்; அவனுடைய வசனங்களை அவர்களுக்கு அவர் படித்துக் காட்டுகிறார்; அவர்களை மனத்தூய்மைப்படுத்துகிறார்; வேதத்தையும், ஞானத்தையும் அவர்களுக்கு கற்றுத் தருகிறார்; இதற்கு முன்னர் அவர்கள் பகிரங்கமான வழிகேட்டில் இருந்தார்கள்"**

– அல்குர்ஆன் (62 : 2)

மக்களை எச்சரிக்காமலும், அச்சுறுத்தாமலும், கண்டுகொள்ளாமலும் விட்டுவிட்டால், அவர்கள் அறியாமைக்குள்ளும், மூடப்பழக்க வழக்கங்களுக்குள்ளும், குருட்டுத்தனமான செயல்களுக்குள்ளும், தவறான செயல்களுக்குள்ளும், தீய குணங்களுக்குள்ளும் தள்ளப்பட்டு, துன்பமான வாழ்க்கையை தேர்ந்தெடுத்து வாழ்வார்கள்.

மேலும், மனிதர்களிலுள்ள வலிமையானவர்கள், பலவீனமானவர்களை சுரண்டி வாழ்வார்கள்.

நல்ல மனிதர்களை நல்ல மனிதர்கள் போர்வையில் வாழ்வோர் அவமானப்படுத்தியும், தாழ்த்தப்பட்டவர்கள் என சொல்லியும் ஒதுக்கி வைப்பார்கள்.

இதுபோன்ற நிலைகள் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான்.

**"மனிதன் (கேள்வி கணக்கின்றி) வீணாக விடப்படுவான் என்று அவன் நினைத்துக் கொண்டானா?"**

– அல்குர்ஆன் (75 : 36)

அதாவது, மனிதன் படைக்கப்பட்டு அவனுக்கு தேவையான வாழ்வியல் வழிகாட்டுதல்கள் வழங்காமல் அல்லாஹ் விட்டுவிடுவானா? என அல்லாஹ் கேட்கின்றான்.

இல்லை. அவன் விடப்பட மாட்டான் என்பதே உண்மை!

நபிமார்கள் அண்டத்தின் உயிராகவும், அதன் ஒளி விளக்காகவும், அதன் போக்கை நிர்ணயிக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

அண்டத்திற்கு உயிர் இல்லாமல், ஒளி இல்லாமல் அது செயல்பட வழிகாட்டி இல்லா

மல் எப்படி இயங்கும்? அதாவது நபிமார்கள் இல்லாமல் உலகம் எப்படி இயங்க முடியும்?

நபிமார்கள் எனும் சூரியன் பூமியில் உதிக்காத போது, பூமி சபிக்கப்பட்டதாகவும், இருளில் மூழ்கியதாகவுமே இருந்தது.

அதைப் போலவே நபிமார் களின்போதனைஓர் அடியானின் உள்ளத்திற்கு சென்றடையா மல்போனால் அவன் ஆன்மாவும், வாழ்க்கையும் வீணாகி விடும்; அர்த்தமற்றதாகவும் ஆகி விடும்.

நபிமார்களையும், நபிமார் களின் வழிகாட்டுதல்களை யும் பெற்றவன் இருளிலா சிக்கித் தவிப்பான்? இல்லை; நேர்வழி பெறுவான்.

## நபிமார்களை கண்ணியப்படுத்துங்கள்

அனைத்து நபிமார்களும் ஒரே இறைவனை வணங்கும் படி சொல்லி ஒரே பணியைச் செய்து வந்தார்கள்.

அதைப் போல் திருகுர்ஆனும் அல்லாஹ் ஒருவனே என்கிற தத்துவத்தை பல்வேறு வடிவங் களில் திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டுகிறது.

நபிமார்களின் வரலாற்றை அல்லாஹ் திருகுர்ஆனில் மீண்டும் மீண்டும் சொல்லிக் காட்டுவதின் மூலம், நம்மை அவர்களைப் போல் வாழுங்கள் எனவும், அவர்கள் காலத்தில் வாழ்ந்த தீயவர்களைப் போல் வாழாதீர்கள் எனவும் சொல்லவே திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது.

ஒருவரின் மனதில் உள்ளதை மற்றொருவர் புரிந்து கொள்ள இயலாது. அப்படித் தான் அல் லாஹ் தன் மனதில் உள்ளதை நபிமார்களிடம் சொல்லி அவர்கள் நம்மிடம் சொன்ன வாழ்வியல் தான் இஸ்லாம்.

அளவிட முடியாத அளவிற்கு சேவைகளை ஆற்றிய நபிமார் களை கவிஞர், பொய்யர், சூனியக் காரர், மனநிலை பாதிக்கப்பட்ட வர் என்றெல்லாம் சொல்லி கேவலப்படுத்தினார்கள்.

இதை அல்லாஹ் கூறுகின் றான் :

**“(நபியே!) நிச்சயமாக உமக்கு முன்னர் வந்த தூதர் களும் (இவ்வாறே) பரிகசிக்கப் பட்டார்கள். ஆனால் அவர்கள் பரி காசம் செய்து கொண்டிருந் தார்களோ அ(ந்த வேதனை யான)து அவர்களிலிருந்து பரிகாசம் செய்தவர்களை சூழ்ந்து கொண்டது”**

- அல்குர்ஆன் (21 : 41)

நபிமார்களை கேவலப் படுத்தியவர்கள், உதாசீனப் படுத்தியவர்கள், புறந்தள்ளிய வர்கள் எவரும் சிறப்பாக வாழ்ந்ததாக வரலாறு இல்லை.

நபிமார்களை நேசிப்போம்; அவர்களை கண்ணியப்படுத்த வேண்டிய அளவிற்கு கண்ணியப்படுத்துவோம்.

# இஸ்லாம் கூறும் நாவடக்கம்

பேராசிரியர் வி.ஏ.எம். யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

நாக்கை அடக்காவிட்டால் அவமானம் ஏற்படும் என்று காடுவெளி சித்தர் கூறுகிறார் :

நவில்வதற்கு நாவிருக்கு என்று
புவிமீது புகல்வதெல்லாம்
சரியாக மாட்டா!
அவித்திடும் உன்னை
அனுசாரா வார்த்தைகள்
அவிழ்க்காதே அவசரத்தில்
நாவென்னும்
அடக்கமில்லா அஸ்திரத்தை
அவமானம்தானே!

"நாம் பாதுகாத்து வைக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அவற்றில் முக்கிய மான ஒன்று நாக்கு என்ற உறுப்பு நாவுகள் செய்யும் அறுவடை களால் மனிதர்கள் நரகத்தில் முகம் குப்புற விழும் அபாயம் இருக்கிறது" என்று நபி (ஸல்) அவர்கள் நம்மை எச்சரித்துள்ளார்கள்.

உறுப்புகளால் செய்யும் தீயச் செயல்கள் குற்றங்களாக கருதப் படுகின்றன. நாவில் எழும் அசிங்கமான வார்த்தைகள் இது போன்று கருதப்படுவதில்லை.

இந்த எண்ணத்தில் ஒரு நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் "நாவினாலும் நாம் தண்டிக்கப்படுவோமா?" என்று கேட்டபோது, "நாவு சம்பாதித்த தீமைகள்தான் மக்களை நரகில் தள்ளுகின்றன" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள் : "(வணக்க வழிபாடு கள்) அனைத்திற்கும் அடிப்படை யாக இருப்பதை உனக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் "அவர்களிடத்தில் அல்லாஹ்வின் நபியே! ஆம். (எனக்கு சொல்லுங்கள்)" என்று கூறினேன். அவர்கள் தங் களுடைய நாவைப் பிடித்து "இதை நீ பாதுகாத்துக் கொள்" என்றுகூறினார்கள். "அல்லாஹ் வின் தூதரே! நாம் பேசுகின்ற வற்றிற்காகவா நாம் தண்டிக்கப் படுவோம்" என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆச்சரியத்துடன், "மக்களை முகம்குப்புற நரகில் தள்ளுவது அவர் களுடைய நாவுகள் அறுவடை செய்தவை யாகும்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் முஆத் இப்னு ஜபல் (ரளி) அவர்கள்
(நூல் : அஹ்மது 21008)

குழப்பமான சந்தர்ப்பங்களிலிருந்து மீள்வதற்கு நாவைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் குழப்பமான சந்தர்ப்பங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கையில் அதிலிருந்து மீள என்ன வழி என ஹள்ரத் உக்பதிப்னு ஆமிர் (ரளி) அவர்கள் வினவ, அதற்கு நபி (ஸல்) அவர்கள் "நாவைக் காப்பாயாக! உன் வீடே உனக்கு விசாலமானதாக இருக் கட்டும். உன் தவறுக்காக நீ அழுவாயாக" என பதிலளித்தார்கள். (திர்மிதீ - 2408)

உயர்ந்த ஆற்றல்கள் நிறைந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அடக்கத்தோடு இருந்தால்தான் பெருமை பெறுவார்கள். அடக்கமற்றவர்களைப் பண்பாடற்றவர்கள் என நம் மரபு புறக்கணிக்கிறது. அடக்கமுடைமைஎன்ற உயர்ந்த குணத்திற்கு இலக்கணமாக இருப்பது நாவடக்கம் ஆகும். ஆகவே, நாக்கை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களிடம் உங்களுக்குப் பிறகு (வேறு யாரிடமும் விளக்கம்) நான் கேட்காத அளவிற்கு இஸ்லாத்திலே ஒரு விஷயத்தை எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டார். "அல்லாஹ்வை நம்புகிறேன் என்று கூறி (அதில்) நிலைத்து நில்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! நான் எதைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய கையால் நாவை சுட்டிக் காட்டினார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஸுஃப்யான்பின் அப்தில்லாஹ் (ரளி) அவர்கள்

(நூல் : அஹ்மது 14870)

"ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! சொர்க்கத்தில் என்னை கொண்டு சேர்க்கும் நற்காரியத்தை கற்றுக் கொடுங்கள்" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள் (சில விஷயங்களைக் கூறிவிட்டு) உன்னால் இதற்கு முடியாவிட்டால் பசித்தவனுக்கு உணவு கொடு; தாகித்தவனுக்கு நீர் புகட்டு; நல்லதை ஏவி தீமையை தடு. இதற்கும் உன்னால் முடியாவிட்டால் உனது நாவை நல்லவற்றிலிருந்தே தவிர (மற்றவற்றிலிருந்து) பாதுகாத்துக் கொள்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அல்பர்ரா பின் ஆஸிப் (ரளி) அவர்கள்

(நூல் : அஹ்மது 17902)

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து சொர்க்கம் செல்வதற்கான வழியைக் காட்டும்படி கேட்டபோது, நல்ல பேச்சைப் பேசும்படி அவருக்கு கட்டளையிட்டார்கள்.

**நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! உங்களை நான் கண்டால் எனது உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. எனது கண் குளிர்ச்சியடைகிறது. எனக்கு அனைத்துப் பொருட்களைப் பற்றியும் சொல்லுங்கள்" என்றேன். அதற்கு அவர்கள் "அனைத்தும் நீரிலிருந்து படைக்கப்பட்டுள்ளன" என்று கூறினார்கள். "எந்தக் காரியத்தை நான் செய்தால் சொர்க்கத்திற்குச் செல்வேனோ அப்படிப்பட்ட ஒரு காரியத்தை எனக்கு கற்றுக் கொடுங்கள்" என்று கூறினேன். "ஸலாமைப் பரப்பு; நல்ல பேச்சைப் பேசு; உறவுகளை இணைத்து வாழ்; மக்கள் உறங்கும்போது இரவில் நின்று வணங்கு. சாந்தியுடன் சொர்க்கத்தில் நுழைவாய்" என்று கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : அஹ்மது 9996)

நாவையும், பிறப்புறுப்பையும் கட்டுப்பாட்டில் வைக்காவிட்டால் அது நரகத்திற்கு வழிவகுக்கும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**"நரகில் எது மனிதனை அதிகம் நுழைவிக்கும்?" என்று கேட்கப்பட "நாவும் மறைவு உறுப்பும்" என பதிலளித்தார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : திர்மிதீ - 1927)

---

## ஐந்தாவது வகையினராக ஆகி விடாதீர்கள்!

"நீங்கள் ஆலிமாக இருங்கள் அல்லது இல்மைக் கற்பவராக இருங்கள் அல்லது இல்மை கவனத்துடன் கேட்பவராக இருங்கள். இல்லையெனில் இல்மை (கல்வி) அறிஞர்களை நேசிப்பவராக இருங்கள். இந்த நான்கிலும் இல்லாமல் ஐந்தாவது வகையினராக ஆகி விடாதீர்கள். இல்லையெனில் நீங்கள் அழிந்துபோய் விடுவீர்கள். ஐந்தாவது வகையினர் கல்வியுடனும், கல்விமான்களுடனும் வெறுப்புக் கொள்வதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூபக்ரா (ரளி) அவர்கள்.
(நூல் : தப்ரானீ, பஸ்ஸார், மஜ்ம உஸ்ஸவாயித்)

**தருபவர் :** அல்ஹாஜ் **கே.கே.செய்யது சுலைமான்,** தென்காசி.

இரண்டு கண்களையும், இரண்டு கைகளையும், இரண்டு கால்களையும் மனிதர்களுக்கு கொடுத்த இறைவன் ஒரே ஒரு நாக்கை மனிதர்களுக்கு கொடுத்திருக்கிறான். மனிதர்களுக்கு ஏற்படும் பெரும்பாலான கேடுகள் அவர்களின் நாவினால் உண்டாகின்றன என்று கிரேக்க நாட்டு தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் கூறியிருக்கிறார். நாக்கு மனிதர்களை நரகத்திற்கே எடுத்துச் செல்லும் வலிமையுடையது என்பதனால் நாவடக்கத்தை இஸ்லாம் பெரிதும் வலியுறுத்துகிறது.

**“[மனிதன்] எதைக் கூறிய போதிலும் அதனை எழுதக் காத்துக் கொண்டிருக்கும் ஒருவர் அவனிடம் இல்லாமலில்லை. [அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் உடனுக்குடன் பதியப்படுகின்றது]”**

-அல்குர்ஆன் (50 : 18)

நாம் எதைப் பேசினாலும் அதனை வானவர்கள் பதிவு செய்கின்றனர். மேலும் பேசும் பேச்சுக்கள் சொர்க்கத்தையும், நரகத்தையும் தீர்மானிக்கும் அளவுகோலாக இருக்கின்றன. நம்முடைய முக்கிய குறிக்கோளாக இருக்கின்ற சொர்க்கத்தை நாம் அடைவதற்குரிய வழிகளில் ஒன்று நல்ல பேச்சுக்களை பேசுவதாகும். ஆகவே, அல்லாஹ் திருமறையில் நமக்கு இட்ட கட்டளைகளின் படியும், நபி (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துக் கூறியிருக்கும் அறிவுரைகளின்படியும் நாவடக்கத்தை பேணி இம்மையிலும், மறுமையிலும் நற்பேறு பெறுவோமாக.

## ஆயிரமாயிரம் நன்மைகள்!

“நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் தினமும் ஆயிரம் நன்மைகள் சம்பாதிக்க உங்களில் ஒருவருக்கு இயலுமா?” என்று கேட் டார்கள். அப்போது அருகில் இருந்தோரில் ஒருவர் “ஆயிரம் நன்மைகளை எப்படி சம்பாதிப்பது?” என்று கேட்டார். ஒருவர் நூறு தடவை “சுப்ஹானல்லாஹ்” என்று கூறினால் அவருக்கு ஆயிரம் நன்மைகள் எழுதப்படும். ஆயிரம் பாவங்கள் மன்னிக்கப்படும்” என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

(நூல் : முஸ்லிம் 2698)

# தயாராகலாம் வாங்க...!

மவ்லவீ எஸ்.என்.ஆர்.ஷவ்கத் அலீ மஸ்லஹி

மார்ச் என்றாலே நம் பள்ளிப் பிள்ளைகளுக்கு சட்டென நினைவுக்கு வருவது முழு ஆண்டுத்தேர்வு தான். இத்தேர்வு தான் அவரவரது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன. குறிப்பாக பத்தாம், பனிரெண்டாம் வகுப்புத் தேர்வுகள்! தேர்வுகள் பள்ளிப் பிள்ளைகளுக்கு அவசியமான ஒன்று தான்! தேர்வின் வழியாகத் தான் ஒரு மாணாக்கரின் திறன், திறமை, தகுதி என்ன என்பதை அறிய முடியும். இது விஷயத்தில் தமிழகப் பள்ளி கல்வித் துறை யினரின் திட்டங்கள் பல நடை முறைக்கு முற்றும் மாற்றமாக இருந்தாலும் இதைத்தவிர நமக்கு மாற்றுவழி வேறில்லை என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஒருவேளை தன்னெழுச்சி பெற்று வலுப்பெற்ற ஜல்லிக் கட்டைப் போல நமக்கு நாமே கல்விக்காக மீண்டும் தன்னெழுச்சிப் போராட்டம் நடைபெற்றால் ஒருவேளை கல்வி நிலை சற்று மாறக்கூடும் என நாம் நம்பலாம். இன்றைய பாட முறைகள் முற்றும் மனப் பாடத்தை மையமாக வைத்தே அமைக்கப்பெற்றுள்ளன. இதில் நாம் விரைவாக மனனம் செய்து கொள்வதற்காக தனித் தனி கைடுகள் வேறு. இப்படிப் பட்ட படிப்புகளால் பிற்காலங் களில் அவர்கள் எப்படிப்பட்ட பட்டப்படிப்புகளை படிக்க முடியும்? உயர்மிகு இடங்களை பிடிக்க முடியும்?

எந்த ஒன்றையும் நாம் நன்கு நிறுத்தி நிதானமாக விளங்கிப் படிக்கும்போது தான் அது நம் ஆழ்மனதில் அச்சு அசலாக மனதில் பதியும். சும்மா மனனம் செய்வதால் நமக்கும் நம் கல்விக் கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இப்படிப்பட்டவர்கள் தான் பின்னாட்களில் மேல் நோக்கிச் செல்ல முடியாமலும், கீழ்நோக்கி இறங்க முடியாமலும் வசமாய் மாட்டிக் கொள்கிறார் கள். குறிப்பாக முஸ்லிம் பிள்ளை கள் இத்தேர்வுகளில் மிகவும்

பின்தங்கியபடி இருப்பது பெரும் வருத்தத்திற்குரிய ஒன்றே! இதற்கு முழு முதற் காரணம் இக்கல்வி குறித்து அவர்களும் அவர்களது பெற்றோர்களும் இன்னமும் முழு விழிப்புணர்வு அடையாததுமே ஆகும். கல்வியில் குறிப்பாக எதிர்வரும் தேர்வுகளில் அதிக அக்கறை எடுத்து படித்தால் தான் அவர்கள் சற்று மேல் நோக்கி நகர முடியும். வசதியற்றவர்களுக்கு ஒரே ஆயுதம் அவர்களது மதிப் பெண்களைத் தவிர வேறு ஏது வழி...? எனவே நாம் நமக்கான பாடங்களை மனனம் செய்யும் முன் சற்று ஆர்வமுடனும், கவனமுடனும் செயல்பட்டாலே போதும்! எந்த ஒரு புரியாத பாடத்தையும் வெகு எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்கான சில டிப்ஸ்கள் இதோ...

## திட்டமிடல்

முதலில் எதையும் நாம் மிகச் சரியாக திட்டமிட்டு செயல்படத் தொடங்கவேண்டும். முதலில் படிக்க வேண்டியது எது ஆங்கிலமா அல்லது அறிவியலா? எப்படிப் படிப்பது? எந்த நேரத்தில் படிப்பது? எந்த இடத்தில் அமர்ந்து படிப்பது? என்றெல்லாம் நமக்கு நாமே ஒரு பட்டியல் ஒன்றை தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக தினசரி செய்ய வேண்டியகாரியங்கள் என்னென்ன? என்று அதிகாலை எழுவது முதல் இரவில் உறங்கச் செல்லும் வரையில் நடைபெற வேண்டிய வற்றை வரிசையாக பட்டியலிட்டு கண்ணில் படும்படி ஒரு இடத்தில் ஒட்டிவைத்துக் கொண்டால் அது மிகவும் பயனாகி மிகுத மான நேரங்களை மிச்சப்படுத்தித் தரும்.

## கவனித்தல்

எந்தவொரு பாடத்தை படிக்கும் போதும் அதை நாம் முழுமையான கவனத்துடன் கூர்ந்து கவனித்துப் படிக்க வேண்டும். கவனச் சிதைவுடன் படிக்கும் எந்தவொன்றும் நம் மனதில் நிற்கப் போவதில்லை. நமது சுற்றுச் சூழலையும் நாம் சற்றும் கவனம் மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக தொலைக்காட்சிப் பெட்டியின் தொடர் விளம்பரத் தொல்லை களிலிருந்து முற்றும் விடுபட முயற்சிக்க வேண்டும். கூடவே செல்ஃபோனிலிருந்தும் விடுபட வேண்டும்.

நமது பாடங்களின் மீது நமது ஆர்வம் சற்று கூடினால் போதும். நமது பாட கவனம் மேம்பட ஆரம்பித்துவிடும். ஆர்வ மின்றி படிக்கும் எந்தவொன்றும் நிச்சயம் நம் மண்டையில் ஏறப் போவதில்லை. தேர்வுக்குப் பின்னால் நாம் அடையும் நிலையை

சற்று நினைத்துப்பார்த்தாலே போதும் படிப்பின் மீது ஆர்வம் நிச்சயம் கூடும்.

## சோர்வு நீக்கல்

படிக்கும் போது அதுவும் பரீட்சைக்கான பாடங்களை படிக்கும் போது நிச்சயம் சோர்வு, அசதி, மனமாற்றம், மயக்கம், சிற்றுறக்கம் போன்றவை திடீரென ஏற்படக்கூடும். எனவே எப்போதும் நாம் இதை விரட்டுவதற்குத் தயாராகயிருக்க வேண்டும். அதற்காக நாம் இடையிடையே சின்னதாய் ஒரு சிறுஓய்வு எடுத்துக் கொள்வதில் தவறேதுமில்லை. இல்லையெனில் அன்றைய முழு நாளுமே வீணாகப் போய்விடும்.

குறிப்பாக, கண்சோர்வு, மனச் சோர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இறுதியாகத் தான் நாம் நமது உடல்சோர்வைப் பற்றி பார்க்க வேண்டும். ஒரே பாடத்தை தொடர்ந்து படிக்காமல் வேறவேற "சப்ஜெக்ட்" பாடங் களை மாற்றிப்படிக்கலாம். இது நமதுசோர்வை போக்கி புத் துணர்ச்சியைத் தூண்டி விடும்.

இங்கு நமக்கு நாமே தேர்வுக்குத் தயாராகிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது முன் மாதிரித் தேர்வு ஒன்றை சுயமாக எழுதிப்பார்த்துக் கொள்ள வேண்டும் டெஸ்ட், டெஸ்ட் என்று பள்ளிகள் நம்மை தினமும் பதம் பார்த்தாலும் என்ன செய்வது? நமக்கு இதைத்தவிர வேறவழி யில்லை. எனவே, கொஞ்சம் சளைக்காது வீட்டிலும் ஓரிருமுறை எழுதிப்பார்ப்பது தவறல்ல.

எழுதிப்பார்ப்பது என்றால் ஏனோ தானோ என்று எழுதிப் பார்ப்பதல்ல! முறையாக தேர்வு காலஅளவுகளை கணக்கிட்டு எழுதிப்பார்க்க வேண்டும். இதற்கு பழைய மாதிரி வினாத் தாள்களையும் பயன்படுத்திப் பார்க்கலாம். அப்படியெழுதும் போது சொல்லிக் கொண்டே எழுதினால் நமது மனதில் இன்னும் நன்கு ஆழமாக பதியும். வெறும் மனப் பாடம் என்றைக்குமே நமக்கு ஆபத்தான ஒன்றுதான்.

## சொல்லித்தரல்

நாம் பரீட்சையில் முன்னுக்கு வர நாம் நம்மைவிட படிப்பில் பின்னுள்ள பிள்ளைகளுக்கு கட்டாயம் சொல்லிக் கொடுக்க வேண்டும். இது நமது தேர்விற்கும் பேருதவியாக இருக்கும். அவர் களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். கல்வி என்பது விழுந்து விழுந்து படிப்பதில் மட்டும் இல்லை. அடுத்தவர்களுக்கு முகம் சுளிக் காமல் சொல்லிக் கொடுப்பதிலும் இருக்கிறது.

அதுவும் அவர்கள் புரியாமல் கேட்கும் கேள்விகளில் தான் நமக்கான எதிர்காலத்தின்

விடையேயிருக்கிறது. எனவே நாம் என்றைக்குமே பின் தங்கி யுள்ளவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் தயக்கம் காட்டக் கூடாது. அக்கம் பக்கத்தவர் களுக்கு சொல்லி கொடுப்பதில் தான் நமக்கான நல்லானந்தமே இருக்கிறது என்பது போகப் போகப் புரியும்.

## உண்ணல், உறங்கல்

தேர்வுக்குச் செல்லும் மாணவ, மாணவியர்கள் கட்டாயம் தங்களது உணவிலும், உறக்கத் திலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்? நமது உடல் ஆரோக்கியமாக இருந்தால் தானே நாம் நன்றாக நிம்மதியாக பரீட்சை எழுத முடியும்? எனவே தேர்வு காலங் களில் கண்ட கண்ட உணவுகளை சாப்பிடுவதில் மிக எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்.

அவ்வாறே, உறக்கமும் நமக்கு மிகமிக முக்கியம். எனவே சரியாகத் தூங்கி விரைவாக எழுவதற்கும் நாம் பயிற்சி எடுக்க வேண்டும். இரவு பனிரெண்டு மணிவரை விழித்திருந்து கண்கள் சிவக்கச் சிவக்க படிப்பதை விட அதிகாலை எழுந்து படிப்பது மிகச் சிறந்தது. அந்த நேரம் உண்மையில் ஓர் உன்னதமான நேரம். அதை நாம் மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உணவையும், உறக்கத்தையும் ஒருபோதும் நாம் அலட்சியமாகக் கருதக்கூடாது.

## சரிபார்த்தல்

தேர்வுக்குத் தேவையான பேனா, பென்சில், ரப்பர் என நமக்குத் தேவையான யாவும் நம்மிடம் சரியாக, முறையாக, தயாராக இருக்கின்றனவா என்ற அவ்வப்போது சரி பார்த்துப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போது தான் தேர்வுநாளன்று நாம் எவ்வித திடீர் பதட்டமும், டென்சனும் இல்லாமல் மிக நிம்மதியாய் செல்ல முடியும். பொருட்களை மட்டுமல்ல நமது வினாக்களையும் நாம் ஒன்று விடாமல் மிகச்சரியாக எழுதி யிருக்கிறோமா என்றும் பார்க்க வேண்டும்.

குறிப்பாக, எழுத்துப்பிழை, வரைபடப் பிழை, பட வரைவுப் பிழை, கணக்கில் பிழை என எல்லாப்பிழைகளையும் நீக்க எல்லாப்பாடங்களையும் செய்து பார்த்து அவை சரியாகயிருக் கின்றனவா என்று சரிபார்க்க வேண்டும். ஒன்றுக்கு மூன்று முறை சரிபார்ப்பது சரியான முறை தான். நமது பெரும்பாலான தவறுகள், தவறுகளை நாம் சரி பார்க்காமல் இருப்பதினால் தான் ஏற்படுகிறது.

## இறைநினைவில் இருத்தல்

இறுதியாக ஆனால் உறுதியாக ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. படிக்கும் போதும், எழுதும் போதும் அந்த அல்லாஹ்வின் பெயரை நாம் மறந்துவிடக்கூடாது அதிகாலையில் எழும் போது அப்படியே "தஹஜ்ஜத்" தொழுகை ஒரு நாலு ரக்அத் தாவது தொழுது, துஆ செய்து கொள்ள வேண்டும். விதியை மாற்றும் பெரும் சக்தி துஆவிற்குத் தான் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

அல்லாஹ்வை நினைத்து, அவனை முன்வைத்து செய்யும் எந்த ஒன்றும் நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இத்தேர்வின் வழியே நமக்கு மறுமையில் ஒரு தேர்வு இருக்கிறது என்பதையும் நாம்மறந்து விடக்கூடாது. இரு தேர்வுகளிலும் நிச்சயம் நாம் வெற்றிபெறுவோம் அவனை நினைத்துக் கொண்டேயிருந்தால்...! நமக்கு அசல் பரீட்சை அதுதான். அந்த வெற்றிக்காகவும் நாம் நமது வாழ்வை இஸ்லாமியப் பாதையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இளம் பள்ளிப் பிள்ளைகளாகிய நாம் இதையும் அவசியம் கற்றுக் கொள்ள வேண்டும்.

**வாருங்கள்!**
**தோல்விகளை தள்ளவோம்!!**
**வெற்றிகளை அள்ளுவோம்!!!**

---

# அண்ணல் நபியின் கன்னல் மொழி!

★ யார் மக்களுக்கு கருணை காட்டுவதில்லையோ அவருக்கு இறைவனும் கருணை காட்டுவதில்லை. (புகாரி)

★ யார் உலகில் புகழுக்காகவும், பகட்டுக்காகவும், ஆடை அணிகிறார்களோ அவர்களுக்கு மறுமை நாளில் இழிவின் ஆடையை அல்லாஹ் அணிவிப்பான். (அபூதாவூது)

★ ஒருவரது உள்ளத்தில் கர்வமும், அகந்தையும் அணுவளவு இருந்தாலும் அவர் சுவனத்தில் நுழைய மாட்டார். (முஸ்லிம்)

★ இரவின் ஒரு சிறு பாகத்தில் கல்வி கற்பதும், கல்வி கற்பிப் பதும் இரவு முழுவதும் விழித்திருந்து இறை வணக்கம் புரிவதை விடச் சிறந்ததாகும். (தாரமி, மிஷ்காத்)

தருபவர் : **பா.ஹாஜி முஹம்மது,** சேந்தமங்கலம்.

# துஆ மஜ்லிஸ்

## நலமுடன் வாழ...

என் மனைவிக்கு கேன்சர் நோயிலிருந்து சுகம் பெறவும், என் தங்கைக்கு அபார்ஷன் ஆனதால் மீண்டும் ஸாலிஹான குழந்தை பிறக்கவும், இருவருக்கும் துஆ மஜ்லிஸில் துஆ செய்யுமாறு துஆ மஜ்லிஸ் குழுவினரை கேட்டுக் கொள்கிறேன்.

**- எம்.சேக் தாவூத் ஆரிப்**, மதுரை – 9.

எஸ்.எம்.முஜீபுல்லாஹ் - சத்தியமங்கலம்; ஃபாரூக் ஆடிட்டர் - உடுமலைப்பேட்டை; முஹம்மது காசிம் - லால்குடி; ஆர்.முஹம்மது சாதிக் – ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் – மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; ஜே.அப்பாஸ் மந்திரி - விழுப்புரம்; அக்பர் பாஷா - சேலம்; அன்சாரி - உடுமலை; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் – மதுரை; ஹாஜி எம்.பீர் முஹம்மது, ஹாஜ்ஜா பீ.ரொகையாள் பீவி – உத்தமபாளையம்; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா – மதுரை; எம்.ஷானவாஸ் – சவூதி; மும்தாஜ், நசீர் - தஞ்சாவூர்; எஸ்.ஹசன் பானு - சென்னை; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் – மதுரை; சார்மிளா - பெரியகுளம்; மன்சூர் அஹமது - கோவை; முஜம்மில் - டெல்லி; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம்–மதுரை;பி.சாதிர் பாட்சா – பொள்ளாச்சி; சல்மா – சென்னை; ரேஷ்மா பேகம், ரஹ்மான் – திருச்சி; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; டாக்டர் கே.பரீத் அஹமது, டாக்டர் கே.அனீஸ் பாத்திமா - உத்தமபாளையம்; செல்லபா, எஸ்.கோரிமா – விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; எஸ்.முஹம்மது இர்ஃபான், எஸ்.எம்.பஹ்மிதா – சென்னை; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; சந்தா எண் F 595 – திருச்சி; ரிஸ்வானா, எஸ்.பாத்திமா பேகம் - மதுரை; ருக்சி - லால்குடி; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசிர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா,

ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா – திருச்சி; எஸ்.சுல்தான் – திருச்சி; எஸ்.நூருன்னிஸா – தஞ்சாவூர்; சந்தா எண் A2467 – பழனி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் – மதுரை; எம்.ஹபிபுன்னிஸா – ஈரோடு; அ.மஹபூபுன்னிஸா – தஞ்சாவூர்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் – சென்னை; சந்தா எண் L105 – மணப்பாறை; முக்சினா பேகம் – மங்கலம்; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா – மதுரை; காமிலா பானு, ஹக்கீம் – சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா – அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் – இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி – சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் – சென்னை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் – ஒத்தக்கடை; ஹமீதா புஸ்ரா, அப்துல் காலிக் – ஈரோடு; முஹம்மது முக்தார் கான், முஹம்மது கஃபில் கான் – புகளூர்; அ.ஜைபுன்னிஸா – கருமண்டபம்; ஜே.ரஹ்மத் நிஸா – அன்னவாசல்;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

என் சிறிய மகளின் உடல் நலத்திற்காக துஆ மஜ்லிஸில் துஆ செய்யுமாறு கேட்டிருந்தேன். வல்ல ரஹ்மானின் பேரருளாலும் துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் மகள் நலமாக உள்ளார் என்பதை நன்றி கலந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். **கதீஜா பீவி, சென்னை.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

குர்ஆனின் குரலின் புதுச்சேரி வட்டார பிரதிநிதியும், புதுச்சேரி மார்க்கெட் பள்ளிவாசலின் நீண்டகால முஅத்தினும், ஜனாப் முஹம்மது யாஸீன் மற்றும் சகோதரர்களின் அருமைத் தகப்பனாருமான அல்ஹாஜ் என். ஹபீபுல்லாஹ் அவர்கள் 31.08.24 அன்றும்,

இராமநாதபுரம் மாவட்டம் புதுக்குடி மர்ஹூம் எம்.ஷேக் இஸ்மாயீல் (ரஹ்) அவர்களின் அருமை மகனாரும், ஜனாப் சாகுல் ஹமீது, லியாக்கத் அலீ ஆகியோரின் அருமை சகோதரரும், ஜனாப் ஜகுபர் சாதிக், சதாம் ஹுசைன் ஆகியோரின் அருமைத் தகப்பனாருமான ஜனாப் எம்.எஸ்.உஸ்மான் அலீ அவர்கள் 20.10.24 அன்றும்,

சென்னை ஆவடி ஜனாப் ஜி.பாஷா (Ex. I.A.F) அவர்களின் அருமை இளைய மகனார் ஜனாப் பா.கரீமுல்லாஹ் ஷாஹ் அவர்கள் 21.10.24 அன்றும்,

தேனி மாவட்டம் தேனி நகர் சாஹிப் இராவுத்தர் (எ) மர்ஹூம் கே.எஸ்.எஸ். ஷேக் அப்துல் காதர் (ரஹ்) அவர்களின் மூத்த மகனாரும், ஜனாப் எஸ்.ஷாஜஹான் மற்றும் அல்ஹாஜ் மர்ஹூம் எஸ்.ஹக்கீம் (ரஹ்) ஆகியோரின் அருமை சகோதரருமான அல்ஹாஜ்எஸ்.ஷேக் அப்துல்லாஹ் அவர்கள் 05.11.24 அன்றும்,

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் ஜனாப் அப்துல் காதர் அவர்களின் அருமைத் துணைவியாரும், ஜனாபா எம்.தவுலத் பேகம் அவர்களின் அருமைத் தாயாருமான ஜனாபா ரஹ்மத் நிஷா அவர்கள் 15.11.24 அன்றும்,

கரூர் மாவட்டம் ஜமீன் ஆத்தூர் மவ்லானா மர்ஹூம் எஸ்.குலாம் மொய்தீன் ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அருமை மகனாரும், குர்ஆனின் குரலின் ஆரம்ப கால சந்தாதாரரும், ஜனாப் முஹிப்புல்லாஹ் மற்றும் சகோதரர்களின் அருமைத் தகப்பனாரும், கள்ளக்குறிச்சி “ஜீனத் பிளாஸ்டிக்” உரிமையாளருமான அல்ஹாஜ் ஜி.ஷாகுல் ஹமீது அவர்கள் 22.11.24 அன்றும்,

தேனி மாவட்டம் உத்தமபாளையம் மர்ஹூம் அல்லாமா P.A.முஹம்மது அபூபக்கர் பாகவி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் மகனாரும், கிரசண்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிறுவனர் அல்ஹாஜ் Er. M.முஹம்மது சுல்தான் மற்றும் Dr. M. முஹம்மது அப்பாஸ்

ஆகியோரின் அருமை சகோதரரும், ஹாஜி கருத்த இராவுத்தர் கௌதியா கல்லூரியின் மேனாள் அரபித்துறை பேராசிரியருமான அல்ஹாஜ் M.அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் 23.11.24 அன்றும்,

திண்டுக்கல் "தௌபீக் புக் டிப்போ" உரிமையாளர் அல்ஹாஜ் மர்ஹூம் A.S.முஹம்மது முஸ்தபா (ரஹ்) அவர்களின் துணைவி யாரும், ஜனாப் A.S.M. முஹம்மது ஹாரூன் தாவூது அவர்களின் தாயாரும், திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் "மதீனா மளிகை" ஜனாப் P. முஹம்மது ஷரீப் அவர்களின் மாமியாருமான ஜனாபா பஷீரா பேகம் 25.11.24 அன்றும்,

சேலம் சூரமங்கலம் வட்டார குர்ஆனின் குரலின் விற்பனை யாளரும், மர்ஹூம் கைப் கான் (ரஹ்) அவர்களின் மகனாரும், ஜனாப் ஷபீ அவர்களின் அருமைத் தகப்பனாரும், ஓய்வுபெற்ற தலைமையாசிரியருமான அல்ஹாஜ் அன்வர்ஜீ என்ற அன்வர் பாஷா அவர்கள் 04.12.24 அன்றும்,

லால்பேட்டை ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியின் மேனாள் பேராசிரியரும், லால்கான் ஜாமிஆ மஸ்ஜிதின் கணக்காளரும், மவ்லவீ இர்ஷாத் அஹமது ஹள்ரத், அஹமது ரிழா ஹள்ரத் ஆகியோரின் அருமைத் தகப்பனாருமான (மெயின் ரோடு) அசாப்பிள்ளை மவ்லானா மவ்லவீ அப்துல் மஜீத் ஹள்ரத் அவர்கள் 05.12.24 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி தேவ்பந்த் ஹள்ரத் அவர்களின் மகள் வழிப் பேரரும், ஈசனத்தம் கார்காரர் மர்ஹூம் J.S.முஹம்மது இஸ்மாயீல் (ரஹ்) அவர்களின் மகனாருமான சேலம் ஜங்ஷன் அக்குபஞ்சர் டாக்டர் முஹம்மது இப்ராஹீம் அவர்கள் 13.12.24 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி பீர்கலாம் மர்ஹூம் சர்க்கரை பாவா (ரஹ்) அவர்களின் அருமை மகனார் ஜனாப் காஜா மைதீன் (பாம்பே காஜா) அவர்கள் 14.12.24 அன்றும்,

---

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

**உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!**

# வாசகர் வட்டம்

இம்மாத தலையங்கம் சிறப்போ சிறப்பு! ஒன்றிய அரசு எப்படி எப்படியெல்லாம் மிகுந்த நெருக்கடி கொடுக்க முடியுமோ அந்த வகையில் சட்ட திட்டங்களில் திருத்தங்கள், புதுப்புது சட்டங்கள் என கொண்டு வந்து மக்களை குறிப்பாக முஸ்லிம்களை அல்லல் பட வைக்கின்றது. செல்வங்களில் எல்லாம் மேலானது கல்விச் செல்வமே ஆகும். அதனை எவ்வாறேனும் கற்றுக் கொள்ளுங்கள் என்று காலங் காலமாக வலியுறுத்தி சொல்லப் பட்டதை கூட ஒன்றிய அரசு விட்டு வைக்காமல் அராஜக போக்குடன் செயல்பட்டு வருகின்றது. பொறுத்திருப்போம். மஹல்லாவாசிகள் ஒன்றிணைந்து தங்களின் பிள்ளைகளுக்கு மக்தப் மதரஸா சென்று ஓத படிக்க ஆவன செய்வது மேன்மையிலும் மேன்மையாகும்.

பா. ஹாஜி முஹம்மது,
சேந்தமங்கலம்.

குர்ஆனின் குரலை நான் சிறு வயதிலிருந்தே படித்துக் கொண்டிருக்கிறேன். மாதா மாதம் இதழைப் படிக்கவில்லையென்றால் எனக்குப் பித்து பிடித்தது போலிருக்கும்.




காலத்திற்கேற்றவாறு கட்டுரைகளை வெளியிட்டு எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறீர்கள். அல்ஹம்துலில்லாஹ்! மொத்தத்தில் குர்ஆனின் குரல் ஓர் அரிய பொக்கிஷம்!

**சி.ஹஸன் பாஷா,**
**நாகப்பட்டிணம்.**

நான் குர்ஆனின் குரலை திறந்தவுடன் முதலில் படிப்பது "பதில்கள்" பகுதியைத் தான். மார்க்க சம்பந்தப்பட்ட பல விஷயங்களை "பதில்கள்" பகுதி மூலம் தெரிந்து கொள்கிறேன். மவ்லானா முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல் ஹள்ரத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**ஜே.ஆ:ப்ரீன் பானு** ஆலிமா,
**மதுரை – 1.**

"வழங்கி வாழ்தல் நயமிகு நல்வழி" கட்டுரை மூலம் இஸ்லாமிய வாழ்வியல் கொள்கைகளை எளிதாக புரிந்து கொண்டேன். கட்டுரையாளர் டாக்டர் பீ.ஹாமிது அப்துல் ஹைக்கு பாராட்டுகள்!

**ஜே.பிரேமலதா,** எம்.ஏ.,
**நாகர்கோவில்.**

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள் வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

# Ulama®

## LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS




Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India